திருக்கோயில்

OFFICE OF THE STAT...
73 | Gu | 72
10 JUL 1972
... MADRAS-8
163

என் கடன்
பணிசெய்து கிடப்பதே

மாலை 14] பரிதாபி — ஆனி, ஆடி — ஜூலை, 1972 [மணி 10

திங்கள் வெளியீடு

தமிழ்நாடு அரசின்



தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்குவளை தியாகராஜ்சுவாமி கோயிலுக்கு, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்களும், மின்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் அவர்களும், வருகை தந்தபொழுது கோயில் மரியாதைகளுடன் வரவேற்கப்பெறுதல். (20—5—72)

பொருளடக்கம்

1. சங்க நூல்களில் சமயம்
2. இணையில்பெரும் நம் கலைஞர் நீடூழி வாழ்க!
3. தவத்திரு. அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்
4. திருவார்திரு. காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்
5. வைணவத்தின் சிறப்பு
6. ஆலய அமைப்புகள்
7. கல்வெட்டுகள் கூறும் சமய நிலை
8. தமிழ்மொழிச் சிறப்பு
9. செம்மைத் தமிழின் சிறப்பு
10. தமிழின் தனிச் சிறப்பு
11. திருவாசகமணியின் சீரிய தொண்டு
12. ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் பண்புநலன்களும் வரலாறும்
13. செய்திச் சுருக்கம்
14. பொன்மானும் பொன்மீனும்
15. செழுமாமணிகள் சேரும் திருக்குடந்தை
16. நாதமுனிகளும் ஆளவந்தாரும்
17. திரிசூலநாதர் திருக்கோயில்

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூபா. பத்து மட்டும் — தனிப்பிரதி விலை ரூ. ஒன்று மட்டும்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்துக்கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ்வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்

(163) 457

OFFICE OF THE ... 73|Gu|72 JUL 1972

மாலை 14] பரிதாபி — ஆனி, ஆடி — ஜூலை, 1972 [மணி 10

சங்க நூல்களில் சமயம்*

[ந. ரா. முருகவேள், M.A., M.O.L.]

முன்னுரை :

அமிழ்தினும் இனிய நமது தமிழ் மொழியில், எத்தனையோ பல எண்ணில்லாத நூல்கள் இருப்பினும், அவற்றுளெல்லாம் மிக்க பழமையும் பெருமையும் வாய்ந்தனவாகப் புகழ்பெற்றுத் திகழும் நூல்கள், சங்க நூல்களேயாகும். ''சங்கமலி செந்தமிழ்'' என்று திருஞானசம்பந்தரும்; ''சங்கத் தமிழ்மாலை'' என்று ஆண்டாள் நாச்சியாரும்; ''சங்கத் தமிழ் மூன்றுந் தா'' என்று ஔவைப் பிராட்டியாரும் பாராட்டிப் பாடியிருக்கும் தொடர்களால், சங்க நூல்களின் அருமை பெருமைகள், அனைவராலும் செவ்விதின் அறியப்படும்.

'' சால்பாய மும்மைத்தமிழ் தங்கிய
அங்கண் மூதூர்
நூல்பாய் இடத்தும்உள; நோன்றலை
மேதி பாயப்
பால்பாய் முலைதோய் மதுப்பங்கயம்
பாய எங்கும்
சேல்பாய் தடத்தும்உள; செய்யுள்
மிக்கேறு சங்கம்''

எனச் சேக்கிழார் பெருமான், மதுரை மாநகரில் தமிழ்ச்சங்கம் அமைந்திருந்த மாண்பினைச் சிறந்தெடுத்துக் கூறிப் புகழ்ந்திருத்தலும்பிறவும், சங்க நூல்களின் தலைசிறந்த பெருமாட்சியினை வலியுறுத்தப் போதிய சான்றாகும்.

'' பத்துப்பாட்டு ஆதி,மனம்
பற்றினார் பற்றுவரோ?
எத்துணையும் பொருட்கிசையும்
இலக்கணமில் கற்பனையே''

எனப் பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையவர்கள், திறனாய்ந்து தேர்ந்தறிந்து

---

*தருமபுர ஆதீனத்தில் நிகழ்ந்த திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டில், திருவார்திரு சண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருமுன்னிலையில் நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது (24—5—72) —ஆசிரியர்.

குறிப்பிட்டிருத்தலும்; சங்க நூல்களின் தனிப் பெரும் சிறப்பு நலன்களைத் திண்ணிதின் உணர்த்தும். இத்தகைய பழம்பெரும் சங்க நூல்கள், பொதுவாக அகத்திணை புறத்திணை பற்றிய செய்திகளையே பெரும்பாலும் கூறிச் செல்லும் இயல்பினவாகக் காணப்பெறினும், ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கும் முற்பட்ட அப்பழந்தமிழ்ச் சங்ககால நூல்களிலேயே சமயக் கருத்துக்கள் ஆங்காங்கே நுண்ணிதின் அமைந்து விளங்குகின்றன.

148699

"சமய உண்மைகளும் தத்துவக் கருத்துக் களும், மிகவும் பிற்காலத்தில், வேற்றுவ ராலேயே, தமிழ் நூல்களில் இடைச் செருக லாகப் புகுத்தி வைக்கப்பெற்றன" என்று ஒரு சிலர் கூறுவதுண்டு. அவர்தம் கூற்று உண் மைக்குப் புறப்பானதென்பதும்; உயரிய சமய உண்மைகளும், நுண்ணிய தத்துவக் கருத்துக் களும், மிகப் பழங்காலத்திலேயே தமிழ் மக்க ளிடையே நிலவி வந்தன என்பதும்; பண்டைத் தமிழ்ச் சங்ககால நூல்களிலேயே சமயக் கருத் துக்கள் பலப்பல அமைந்து கிடக்கின்றன என் பதும், நடுவு நிலையுள்ள ஆராய்ச்சியாளர் களுக்கு நன்கினிது புலனாகும்.

தொல்காப்பியம் :

நமது தமிழ் மொழியிலுள்ள நூல்கள் அனைத்திலும், மிகமிகப் பழமையும் பெருமையும் வாய்ந்தது தொல்காப்பியமேயாகும். இதன் காலம் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தென ஆராய்ச்சியாளர்கள் உடன்பட்டுள்ள னர். இத்தகைய பழம்பெரும் இலக்கண நூலா கிய தொல்காப்பியத்திலேயே, சமய தத்துவக் கருத்துக்கள் விரவிக் காணப்படுகின்றன.

(1) "தொல்காப்பியம் என்னும் பழமை மிக்க இலக்கண நூலில் பயன்படுத்தப்பட் டுள்ள இலக்கணக் குறியீட்டுச் சொற்கள், வாழ்க்கை இயலின் இலக்கணத்தை, விளக்கு தற்குத் தேவையான தத்துவக் குறியீட்டுச் சொற்களுடன் கலந்த நிலையில் ஒன்றுபட்டுத் திகழ்கின்றன. இலக்கணத்தில் கூறப்படுகின்ற எழுத்துக்கள் சொற்கள் சொற்றொடர்கள் ஆகியவற்றினிடத்தில், அவைகளுக்கு ஒப்புமை யுடைய தெய்விகத் தத்துவச் சொற்களை மாற்றி அமைத்தால், தொல்காப்பிய விதிகள் அல்லது நூற்பாக்கள், தமிழ் மொழியின் அமைப் பியலை விளக்குவது மட்டுமின்றி, மக்களின் வாழ்க்கையினையும் விவரித்து விளக்குவன வாகத் திகழ்வதைக் காணலாம். இவ்வுண்மை தொல்காப்பியத்தினை மேல்நோக்காக ஒரு சிறிது காண்போர்க்குங்கூடத் தெற்றென விளங்கும்".(1)

(2) ஆசிரியர் தொல்காப்பியர், தமிழிலக் கணத்தில் எழுத்துக்களுக்குப் பெயரமைத் திருக்கும் முறையே, தமிழ் மக்களின் நுண்மாண் நுழைபுலத்தினை நுனித்துணர்த்த வல்லதாயுள் ளது. தாமே தனித்தியங்கவல்ல எழுத்துக் களுக்கு 'உயிர்' என்றும், உயிரோடு கூடி அல்லது இயங்கலாற்றாத எழுத்துக்களுக்கு 'மெய்' என்றும், உவமை ஆகுபெயரால் காரணம் பற்றிச் சமயதத்துவக் கருத்தின் அடிப்படை யில் பெயர்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களின் தலைசிறந்த தத்துவஞானத்தினை இப் பெயர்கள் தகவுற விளங்குகின்றன(2). இப் பெயர்களின் குறிப்புகளுக்கு முன்னொடு பின் சிறிதும் முரணாமல், தமிழில் எழுத்திலக்கணம் வகுக்கப்பெற்றுள்ளது.க்ருபை, த்யானம் என்னும் வடசொற்களைப்போல, மெய்யெழுத்துக்கள் தமிழில் மொழிமுதற்கண் வருவதில்லை. "உயிர் மெய்யல்லன மொழி முதலாகா" என்பது தொல் காப்பியச் சூத்திரம். சொற்களில் மெய்யெழுத் துக்கள் முதலாக வருதல் கூடாது என்னும் வரையறை, அழிந்துபடும் இயல்பிற்றாகிய உடம்பின் இழிதகவையும், அழியா இயல்பிற் றாகிய உயிரின் மேம்பாட்டினையும் உணர்த்தும் வகையில், அறிவிற்குப் பொருத்தமாகச் செய் யப்பட்ட தொன்றாகும்.

---

(1) "Even a cursory glance of that ancient grammar Tholkappiam will convince that the grammatical terminology employed in it are the identical philosopical terminology necessary for dealing with the grammar of the phenomena of life. If in place of the alphabet, words, and sentences, treated in that grammar, their corresponding mystic equivalents in philosophy are substituted, the Sutras or the rules of Tholkappiam expound the phenomena of life instead of the phenomena of the Tamil language".

—P. V. MANICKAM NAICKER,
(The Tamil Alphabet, Its Mystic Aspect.)

(2) "Tamil grammarians designate vowels by a beautiful metaphor, as Uyir or life of a word; consonants as Mey, or the body; and the junction of a vowel and consonant as Uyirmey or an animated body".

—DR. CALDWELL

(3) உயிரின் அறிவும் இயல்பும் அது சாரும் உடம்பிற்கு ஏற்பவே அமையும் என்பது "மெய்யின் வழியது உயிர் தோன்றும் நிலையே" என்னும் நூற்பாவால் குறிக்கப்படுகின்றது. உடம்பை விட்டு உயிர் நீங்கிவிடுமாயின், அது தனக்குரிய முழுநிறைவான இயல்புகளை எய்தி நிற்கும் என்னும் உண்மை "மெய்யுயிர் நீங்கில் தன்னுருவாகும்" என்னும் நூற்பாவால் சுட்டப் பெற்றது. உயிர் தனது வினைப்பயன்களை நுகர உடலின் சேர்க்கையை அடையும்; உடலின் சேர்க்கையின்றி வினைப்பயன்களை உயிர் தானே தனித்துநின்று நுகரப்பெருது என்பது, "புள்ளி ஈற்றுமுன் உயிர்தனித்து இயலாது, மெய்யொடு சிவணும் அவ்வியல் கெடுத்தே" என்னும் நூற்பாவால் உணர்த்தப்படுகின்றது. உயிரும் உயிரும் தம்முள் சேரமாட்டா. உயிர் சேருதற்கு உடல் இன்றியமையாதது என்னும் கருத்து, "எல்லா மொழிக்கும் உயிர் வரு வழியே, உடம்படு மெய்யின் உருவு கொளல் வரையார்" என்னும் நூற்பாவினுல் ஒருவகையில் தெளிவுறுத்தப்படுகின்றது. இன்னோரன்ன தொல்காப்பியச் சூத்திரங்கள், தமிழிலக்கண நூற் கருத்துடன் தத்துவ நூற் கருத்தினையும் இணைத்துப் பிணைத்து இயம்புவனவாக இருத்தல் காணலாம்.

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில், மொழி மரபியலில், "மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்" எனவரும் நூற்பாவிற்கு, "இறைவன் இயங்குதிணைக் கண்ணும், நிலைத்திணைக் கண்ணும், பிறவற்றின் கண்ணும், அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற் போல; அகரமும் உயிர்க்கண்ணும் தனிமெய்க்கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாகவே நிற்கும் என்பது ஒப்ப முடிந்தது. 'அகர முதல' என்னும் குறளான், 'அகரமாகிய முதலையுடையன எழுத்துக்களெல்லாம், அது போல இறைவனுகிய முதலையுடையது உலகம்' என வள்ளுவர் கூறியவாற்ருனும், கண்ணன் 'எழுத்துக்களில் அகரமாகின்றேன் யானே' எனக் கூறியவாற்ருனும் பிற நூல்களானும் உணர்க" என நச்சினுர்க்கினியர் எழுதியிருக்கும் விளக்கவுரை, இங்கு அறிந்து இன்புறற்பாலது.

(4) இவ்வாறே ஆசிரியர் தொல்காப்பியர் வினைச்சொல் குறித்து வகுத்துள்ள இலக்கணமும், பெரிதும் வியந்து போற்றற்பாலதாக இருக்கின்றது. சொற்கள் பெயர்-வினை-இடை-உரி என நான்கு வகைப்படும். ஆயினும் இவற்றுள் பெயரும் வினையுமே மிகவும் முதன்மை வாய்ந்தவை. பெயர்ச்சொல்லின் அடியாக வினைச்சொற்களும், வினைச்சொல்லின் அடியாகப் பெயர்ச்சொற்களும், தம்முள் ஏற்ற பெற்றி தோன்றும். வினைச் சொற்கும் பெயர்ச் சொற்கும் இடையே உள்ள வேறு பாட்டினை,

"வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்"

எனத் தொல்காப்பியம் விளக்குகின்றது. இதன்படி முருகனை - முருகனுல் - முருகனுக்கு என்ருற்போலப் பெயர்ச்சொற்கள் வேற்றுமை யுருபுகளை ஏற்றுவரும். ஆனுல் வினைச்சொற்கள் வேற்றுமை யுருபுகளை ஏற்றுவருவதில்லை. வந்தான் – வருகின்ருன் - வருவான் என்ருற்போல வினைச்சொற்கள் காலம் காட்டிவரும். பெயர்ச்சொற்கள் காலம் காட்டும் இயல்புடையன அல்ல. எனவே, வினைச்சொற்கள் வேற்றுமை யுருபுகளை ஏலாமல், காலம் காட்டிவரும் இயல்புடையன என்பது, இந்நூற்பாவின் திரண்ட பொருள்.

இனி, இதனைக் கூர்ந்து நோக்கின் வேருெரு சிறந்த பொருளும் இதன்கண் அமைந்திருத்தல் காணலாம். நாம் செய்யும் ஒவ்வொரு செயற்கும் அதற்குரிய பயன் திண்ணமாக உண்டு. நற்செயல் புரிவோர் அதற்குரிய பயனுகிய நன்மையையும், தீச்செயல் புரிவோர் அதற்குரிய பயனுகிய தீமையையும் அடைந்தே தீருவர். "வினை எனும் சொல் செயலையும், அதன் பயனையும், அப்பயனைத் தரும் தெய்வத்தையும் முறையே குறிக்கும். அவரவர் செயலுக்கு ஏற்பப் பயன்களை எய்துவிக்கும் பால்வரை தெய்வமானது (சொல்-57), வினைப் பயன்களை எய்துவிக்குங்கால், செல்வர் வறியர், கற்ருர், கல்லார், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்பன போன்ற வேற்றுமைகளைச் சிறிதும் கருதுவதில்லை. வினைப்பயன் வினை செய்தோரை அடைந்தே தீரும். ஆயினும் வினைப் பயன்கள் ஒரு போழ்தத்தேயோ உடனடியாகவோ அன்றி, அவ்வவற்றிற்குரிய காலங்களிலேயே முறைப்படி வந்தெய்தும்........"(3)

---

(3) "The philosophic meaning of the Sutra is distinct. The Karma does not transform with the transmigration of souls but remains intact and lies dormant waiting for the proper time according as the Karma is Akamiya or Prarathva or Sanchitha'..

—P. V. MANICKAM NAICKER.

எனப் பிறிதொரு சிறந்த தத்துவ நூற்பொருளும் இந்நூற்பாவின்கண் அமைந்து விளங்குதல் காணலாம்.

(5) உணவும் நீரும் காற்றும் நீராடலும் மருந்தருந்தலும் உடல்வாழ்விற்குப் பலவகை நலன்களை விளைவித்தலைப்போல, நமது வாழ்விற்கு இறைவழிபாடு மிகப் பெரிதும் இன்றியமையாததாகப் பெருநலன்களைப் புரிகின்றது. அதுபற்றியே இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருந்த தொல்காப்பியனுர்.

"வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழிச் சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே"

என இறைவழிபாட்டின் சிறப்பையும், பயனையும் ஒருவகையில் விளக்கிக் கூறியுள்ளார். இதன்கண் வழிபாடு இன்றியமையாததொன்று என்பதும்; அது மனிதரையன்றித் தெய்வத்தைக் குறித்து நிகழ்தல்வேண்டும் என்பதும்; வழிபடுவோரை வழிபடப்பெறும் தெய்வம் காத்தருளும் என்பதும்; வழிபாட்டின் பயனுகப் பழிதீர் செல்வங்கள் பற்பலவற்றை எய்தலாம் என்பதும்; வழிபடுவோர் மட்டுமேயன்றி அவர்தம் வழிவழியாக வரும் உற்றுர் உறவினருங்கூட வழிபாட்டின் பயனுகச் சிறப்பு எய்திப் பொலிந்து இன்புற்று வாழ்வார்கள் என்பதும் நுண்ணிதின் எண்ணி உணரும்படி அறிவுறுத்தப் பெற்றுள்ளன.

(6) ஆசிரியர் தொல்காப்பியர், தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் பொருள்களை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்றுகப் பகுத்தார். அவற்றுள் நிலத்தையும் காலத்தையும் "முதற்பொருள்" எனக் குறித்தார். நிலத்தை முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என நான்காகப் பகுத்து, அவற்றிற்கு முறையே மாயோன் (திருமால்), சேயோன் (முருகன்), வேந்தன் (இந்திரன்), வருணன் என்னும் தெய்வங்களைக் குறித்தார். தெய்வ வழிபாட்டின் இன்றியமையாமைபற்றி, முதற்பொருளாகிய நிலத்தைக் கூறவந்த இடத்திலேயே கருப்பொருளாகிய தெய்வ வழிபாட்டையும் சேர்த்து இயைத்தே தொல்காப்பியர் கூறியருளியுள்ளார். காலத்தெய்வம், பால்வரைதெய்வம் முதலிய வேறு பிற கடவுளரையுங்கூட அவர் குறிப்பிட்டருளியிருத்தல் காணலாம். (தொல். சொல். 58).

(7) இனி பொருளதிகாரப் புறத்திணையியலினுள் 81-ஆம் சூத்திரத்தில் "அமரர்கண் முடியும் அறுவகையானும்" என்றமையால் வானவர் உள்பட ஆறுவகையினரை வாழ்த்துதல் பண்டை மரபாக இருந்தது. அவர்கள் முறையே, வானவர் முனிவர் ஆனினம் மழை அரசன் உலகம் எனப்படுவர். இத்தொல்காப்பிய நூற்பாவை ஒட்டியே "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" எனத் தொடங்கும் திருஞானசம்பந்தர் பாடல் அமைந்திருக்கக் காண்கின்ரேம். இவ்வாறே புறத்திணை இயல் 88-ஆம் நூற்பாவில் கொடிநிலை (ஞாயிறு), கந்தழி (தீ), வள்ளி (திங்கள்) என்ற மூன்றும், கடவுள் வாழ்த்தொடு பொருந்தி வரும் எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. இம்முறையிலேயே சிலப்பதிகாரத்தில் "ஞாயிறு போற்றுதும்" "திங்களைப் போற்றுதும்" "மாமழை போற்றுதும்" என்னும் வாழ்த்துக்கள் அமைந்தன எனலாம்.

(8) அம்மைவழிபாடு, ஆனைமுகன் வழிபாடு, முருகன் வழிபாடு, சிவ வழிபாடு, திருமால் வழிபாடு, கதிரவன் வழிபாடு என்னும் அறுவகை வணக்கமே பிற்காலத்திற் பேசப்பெற்ற அறுசமயம் (ஷண்மதம்) என்னும் வழக்கிற்கு அடிப்படையாக அமைவதாயிற்று. இவ்வறுவகைத் தெய்வங்கட்குப் பூசனை புரிவோரையே, "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம்" எனத் தொல்காப்பியம் குறிப்பிட்டதென ஆராய்ச்சியாளர் கருதுவர்.

(9) இங்ஙனமே இயமம் நியமம் ஆசனம் பிராணுயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி ஆகிய 'அட்டாங்கயோகம்' என்னும் எண்வகை நெறிமுறைகளையே "நாலிரு வழக்கில் தாபதப் பக்கம்" எனத் தொல்காப்பியர் குறித்தருளினர் எனலாம்.

(10) "வேண்டிய கல்வி ஆண்டு மூன்றிறவாது" என்னும் நூற்பா, தலைவன் ஓதற் பிரிவின்கண் இறை-உயிர்-தளை (பதி பசு பாசம்-சித்து அசித்து ஈசுவரன் - சகம் ஜீவன் பரம்) என்னும் முப்பொருள்களைப் பற்றிய தத்துவ ஆராய்ச்சியிலேயே தலைப்படுவான் என்னும் கருத்தையும் இனிதுணர்த்துகின்றது என்பர்.

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

எனவரும் கற்பியற் சூத்திரம், "முற்கூறிய இல்லறத்தின் பயன், உறுதிப் பொருள் நான்கனுள் சிறந்ததாகிய வீட்டின்பம் எய்துதற்கு, ஏமஞ் சான்ற வானப்பிரத்தநிலையும் துறவுநிலையும் எய்தி, இறைவழிபாட்டுக் காதல்நெறி ஆகிய சன்மார்க்கத் துறையிற் பயிற்சி பெறுதலே யாகும்'' என்பதனை வலியுறுத்துகின்றது.

'' வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்''

எனவரும் நூற்பாவில், இறைவனுக்குரிய சிறப்பியல்பினை மிகவும் தெள்ளத் தெளிவாகத் தொல்காப்பியம் குறிப்பிட்டிருத்தல் பெரிதும் சிந்தித்துணர்தற்குரியது.

இங்ஙனம் தொல்காப்பியமாகிய பழம் பெரும் தமிழிலக்கண நூலின்கண் காணப்படும் சமய தத்துவ நுண்பொருட் கருத்துக்கள் மிகப் பலவாகும்.

திருக்குறள் :

தொல்காப்பியருக்குப் பின்னர், இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருந்த, திருவள்ளுவர் பெருமான் இயற்றியருளிய திருக்குறள் என்னும் சிறந்த பெரு நூலினும், சமய தத்துவக் கருத்துக்கள் பற்பல காணப்படுகின்றன.

(1) திருவள்ளுவர் கடவுள் ஒருவர் உண்டு என்னும் கொள்கையுடையவராகக் காணப்படுகின்றார். திருக்குறளில் உள்ள "கடவுள் வாழ்த்து'' என்னும் பகுதியால் மட்டுமேயன்றி, வேறு பிற சான்றுகளாலும் இவ்வுண்மை புலனாகின்றது. 'உலகு இயற்றியான்' 'வகுத்தான் வகுத்தவகை' 'உலகத்தார் உண்டு என்பது இல்லென்பான்' 'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப் படும்' எனவரும் குறள்கள் இதனை வலியுறுத்தும்.

(2) கடவுள் ஒருவர் உண்டு என நிறுவும் ஒரு சான்றாகவே, அவர் 'வான்சிறப்பு' என்னும் ஒரு தலைப்பை அமைத்திருப்பதாகத் தெரிகின்றது. 'மாரி வறப்பில் தருவாரும் இல்லை! சிறப்பில் தணிப்பாரும் இல்' என்றபடி, மழை மிகுதியாகப் பெய்தாலும் நம்மால் தடுக்க இயலாது; பெய்யாமலே இருந்துவிட்டாலும் ம்மால் அதனைப் பெய்விக்க முடியாது. ஆதலின், கடவுளின் அருளாற்றலை யுணர்த்துவனவற்றுள் மழையும் ஒன்று எனத் திருவள்ளுவர் கருதுகின்றார் எனலாம்.

(3) கடவுளின் உருவம் பற்றித் திருவள்ளுவர் ஏதும் விவரமாகக் கூறிற்றிலராயினும், கடவுளின் திருவடியைப் பற்றிக் குறிப்பிட்டிருத்தலால், கடவுளுக்கு அருவமேயன்றி உருவமும் உண்டு எனத் திருவள்ளுவர் கருதுதல் புலனாகின்றது.(4)

(4) 'சிறப்பொடு பூசனை செல்லாது' என்பதனால், கோயில்களையும், அக்கோயில்களில் நிகழும் நாள் வழிபாடு, சிறப்பு விழாக்கள் முதலியனவற்றையும், திருவள்ளுவர் உடன்படுதல் காணலாம்.

(5) இறைவனின் அருளினாலும், அவன் வகுத்தருளிய இயற்கை நியதியாகிய ஒழுங்கு முறையினாலுமே உலகம் இயங்கி வருகின்றது; உயிர்களெல்லாம் வாழ்ந்து வருகின்றன. 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்பதனைத் திருவள்ளுவரும் வற்புறுத்துகின்றார். 'ஊழ்' என்னும் தலைப்பினை, அறத்துப்பாலுக்கும் பொருட்பாலுக்கும் நடுவில், ஓர் இயலாகவே திருவள்ளுவர் அமைத்து வைத்திருத்தல் இவ்வுண்மையைத் தெளிவிக்கும். நாம் அறியாமலே நம் வாழ்க்கையை உருவாக்குகின்ற தெய்விகப் பேராற்றல் ஒன்று திண்ணமாக உள்ளது. 'ஊழிற் பெரு வலியாவுள' 'வகுத்தான் வகுத்த வகையல்லால்' என்னும் குறட்பாக்களும் இங்குச் சிந்திக்கத் தக்கன, ("There is a Divinity that shapes our ends"—sh.).

(6) இறைவனிடம் மட்டுமேயன்றி, அவனது அருள்பெற்ற சான்றோர்கள்மாட்டும் திருவள்ளுவர்க்கு மிக்கமதிப்பும் ஈடுபாடும் உள்ளமை, 'நீத்தார் பெருமை' என்னும் தலைப்பால் அறியப்படும். 'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறை மொழி காட்டிவிடும்' என்னும் குறளால், 'தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே' என்பதனைத் திருவள்ளுவரும் உடன்படுகின்றனர் எனலாம்.

(7) பொருளையும் இன்பத்தையும் பற்றி மிகமிக விதந்துகூறி விளக்கியபோதிலும்,

---

(4) "In short, the idea of God is incurably and necessarily anthropomorphic".

—W. T. STACE,
Religion and the Modern Mind, p. 9-10.

அவை இரண்டும் அறத்தின் வழியாகவே வருதல் வேண்டும் என்றும், அறமே அவ்விரண்டினும் மிக்க வலிமையுடையதாகும் என்றும், திருவள்ளுவர் மிகவும் வலியுறுத்திக் கூறுகின்ருர். 'அன்பிலதனை அறம்காயும்' 'அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து' என்பனபோன்ற குறள்களால், அறத்தையே கடவுள் என்றும், அறவாழ்வே சமய வாழ்வு என்றும்; அறவோர் ஆகிய அருளாளரே சமயச் சான்ருேர்கள் என்றும், திருவள்ளுவர் குறிப்பிடுகின்ருர் எனலாம்.

(8) 'வானேர்' 'அமரர்' 'இமையார்' 'புத்தேளிர்' 'தேவர்' என்பன போன்ற சொற்களால், முழுமுதற் கடவுளின் வேருக, அவர்தம் அருளைப்பெற்ற தெய்வகணங்கள் ஆகிய தேவர்கள் பலர் உளர் என்பதும், அவர்கள் வாழும் உலகம் வானுலகம் முதலிய பெயர்களால் வழங்கப்படும் என்பதும், புலனுகின்றன.

(9) 'உயிர் உடம்பின் நீக்கியார்' 'உடம்பொடு உயிரிடை நட்பு' என்பன போன்ற குறள்களால், உடம்பே உயிர் என்பாரை மறுத்து, உடம்பின் வேருக உயிர் என்பதொன்றுண்டு. உடம்பும் உயிரும் வெவ்வேறு இயல்புடையன. என்பனபோன்ற கருத்துக்களைத் திருவள்ளுவர் உணர்த்துகின்ருர்.

(10) 'எழுமையும் ஏமாப்புடைத்து' 'எழுபிறப்பும் தீயவை தீண்டா' என்னும் குறள்களால், பிறந்த உயிர் மீளப் பிறவாது என்பாரை மறுத்து, உயிர்க்குப் பல பிறவிகள் மாறி மாறிவரும் என உணர்த்துகின்ருர்.

(11) 'இருள்சேர் இருவினை' 'வினைப்பகை வீயாது பின்சென்று அடும்' 'தவமும் தவமுடையார்க்கு ஆகும்' என்பனவற்ருல் நல்வினை தீவினையாகிய பாவபுண்ணியங்களையும், அவற்றிற்கேற்ப உயிர்கள் இன்ப துன்பங்களை வழுவாது அடைதலையும், திருவள்ளுவர் தெற்றெனத் திறம்தெரித்து விளக்குகின்ருர்.

(12) 'மறுமையும் இம்மையும் இன்பம் தரும்' 'எழுமையும் தான்புக்கு அழுந்தும் அளறு' 'பெறுவர் பெருஞ் சிறப்புப் புத்தேளிர் வாழும் உலகு' என்னும் குறள்களால் சுவர்க்கம் நரகம், இம்மை மறுமை ஆகியவற்றையும் திருவள்ளுவர் உடன்படுதல் உணரலாம்.

(13) 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' 'ஊனைக் குறித்த உயிரெல்லாம்' என்பவற்ருல் உயிர்கள் பல என்பதும், 'மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்' என்பவற்ருல் உயிர்கள் அழியாத் தன்மையன என்பதும், பிறவும் தெளியப்படும்.

(14) 'ஆதி பகவன் முதற்றே உலகு' என்பதனுல், கடவுளே உலகம் அன்று, உலகம் வேறு, கடவுள் வேறு என்பது தெளிவிக்கப் பெறுகின்றது.

(15) 'காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன் நாமம்கெடக் கெடும் நோய்' 'அவா என்ப தவாஅப் பிறப்பீனும் வித்து' என்பனவற்ருல், உயிர்களின் பிறப் பிறப்புக்களுக்குக் காரணமாவன பலவும் சுட்டப்பெற்றுள்ளன.

(16) 'சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச் சார்தரா சார்தரும் நோய்' என்பதனுல், உயிர்களைப் பற்றியுள்ள மலமாசுகள் ஆகியகுற்றங்களும், அவைகளினின்று உயிர்கள் தப்பியுய்தற்குரிய சரியை கிரியை யோக ஞானம் முதலிய பலவகைச் சமய ஒழுகலாற்றுமுறைகளும், அவற்றைக் கடைப்பிடித்து ஒழுகுவதனுல் உயிர்கள் எய்தும் நலங்களும் குறிப்பிடப்படுகின்றன.

(17) 'சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்தின்வகை தெளிவான்கட்டே யுலகு' என்னும் குறளால்; நிலம் நீர் தீ வளி விசும்பு என்னும் இயற்கைமுதற் பொருள்களும், அவற்றிற்குக் காரணமான நுண்பொருள்கள், அறிகருவிகள், தொழிற்கருவிகள், அகக்கருவிகள் முதலிய (Metaphysics) தத்துவ ஆராய்ச்சிச் செய்திகளும், அனுபவங்களும் உண்டு என, உணர்த்தப் பெறுகின்றன.

(18) 'பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி' 'ஐந்தவித்தான் ஆற்றல்' என்பனவற்ருல், ஒழுக்கநெறியாகிய சமய வாழ்வும், அதனுல் விளையும் ஆற்றல் ஆகிய பயனும் பிறவும் தெளியப்படும்.

(19) 'ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின் வானம் நணிய துடைத்து' என்னும் குறளால், மெய்யுணர்வு பெற்ற மேலோர்கள் ஆகிய சீவன் முத்தர்கள் நிலை, செவ்விதின் விளக்கப்பெற்றது.

(20) 'ஒன்ருர்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும் எண்ணில் தவத்தான் வரும்' என்பதனுல் தவவாழ்வினுல் விளையும் பேராற்றல் விளங்கும்.

(21) 'உண்ணாமை வேண்டும் புலால்' 'அருளாட்சி ஆங்கில்லை ஊன் தின்பவர்க்கு' என்பவற்றால் புலால்உண்ணாமை சமய வாழ்விற்கு இன்றியமையாத ஒரு பண்பாதல் வற்புறுத்தப்பட்டது.

(22) இல்லறம் துறவறம் என்னும் இரு வகை நெறியாலும், இறையருளைப் பெறலாம்; இவை இரண்டும் தம்முள் ஒன்றினொன்று முரண்படுவன அல்ல, இல்லற வாழ்வின் வளர்ச்சிப் பயனே துறவறம்; எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தி நலம்புரியும் பெரும் செயலும் பண்புமே, செந்தண்மை (சீவகாருண்ணியம்), என்னும் சிறந்த உண்மைகள் பற்பல திருக்குறளில் செல்விதின் விளக்கப் பெற்றுள்ளன.

(23) சமய வாழ்வுக்கு ஒரு ஞானசிரியனின் துணை இன்றியமையாதது. 'குருவருள் இன்றித் திருவருள் இல்லை'. அது பற்றியே 'பற்றுக பற்றற்றான் பற்றினை' என அறிவுறுத்துகின்றார் திருவள்ளுவர். 'பற்றற்றான்' என்னும் சொல், ஞானசிரியனாகிய குருவினைக் குறிப்பதாகும். குருவின் உபதேசமாகிய திருமொழியால், நாம் பெறுதற்குரிய பேற்றினையே, 'இழுக்கலுடையுழி ஊற்றுக்கோல் அற்றே ஒழுக்கமுடையார் வாய்ச்சொல்' என்பதனால் திருவள்ளுவர் குறித்தருளினார் எனக் கொள்ளுதலும் பொருந்தும்.

(24) மக்களின் வாழ்க்கையில் சமய ஒழுகலாறு அல்லது கடவுள் வழிபாடு என்பது மிகமிக இன்றியமையாதது; மனக்கவலைகளை மாற்றுதற்குரிய ஒரேவழி கடவுளை வழிபடுவது தான் எனக் கட்டுரைக்கின்றார் திருவள்ளுவர்.

(25) எவ்வுயிர்க்கும் சிறு தீங்கும் செய்யாமல் இருத்தல், சிறந்த சமயநெறிப் பண்பாகும். 'உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு' என்பது திருக்குறள். இதனையே 'மன்னுயிர் ஓம்பி அருளாள்தல்' எனப் பிறிதோர் இடத்தும் சிறப்புறக் கூறுவர் திருவள்ளுவர். சிற்றுயிர்களுக்குத் தீங்கு செய்யாமை மட்டுமன்று, அவைகளுக்கு நலஞ் செய்து பாதுகாத்தலும் இன்றியமையாதது என்பது கருத்து, 'மனத்துக்கண் மாசுஇலன் ஆதல்' என்றதும், இத்தகைய உயர்ந்த சமய வாழ்வையே யாகும்.

(26) எல்லாப் பொருள்களிலும் இறைவனைக் காண்டல் என்பது, சமய வாழ்வில் மிக மேலான உயர்ந்த சிறந்த பெருநிலை. ஞானிகள் எல்லாப் பொருள்களிலும் கடவுளைக் காண்பார்கள். 'சீவன் முத்தர் சிவமே கண்டிருப்பர்'; 'பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்' என்று ஞானிகளின் இயல்பினைச் சிவஞான சித்தியார் கூறும். ஞானிகளுக்கு எல்லாம் இறைமயமாய், தெய்வவடிவமாகக் காணப் பெறும். இத்தகைய இறையருளனுபவ ஞானப் பெருநிலையையும் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். 'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு' என்பது திருக்குறள். 'எப்பொருளின்கண்ணும் மெய்ப்பொருளைக் (கடவுளைக்) காணப்பெறுவது ஞானம்' என்க.

(27) திருக்குறள் ஒரு நீதி நூல், ஒழுக்க நூல் என்பதனை யாவரும் அறிவர். அவ்வளவில் மட்டுமே, அதன் பெருமை அமைவதன்று. உயரிய நீதிகளையும் ஒழுக்கங்களையும் புத்தர் பெருமானும் கூறிச்சென்றார். ஆனால் அவர் இறைவனின் இயல்பு பற்றியோ, உயிரின் இயல்பு பற்றியோ ஏதும் விளக்கிக் கூறினார் இல்லை. 'உயிரிரக்கம்' ஆகிய சீவகாருண்யம் என்பதனை மட்டுமே பெரிதும் அறிவுறுத்திப் போந்தார். ஆதலின் பௌத்தம் முதலியன, ஒரு நல்லொழுக்க நெறியே யன்றிச் சமயம் ஆகாது என்பர் சிலர்,(5)

(28) ஒருசிலர் கடவுளும் சமயமும் எதற்கு? நல்லவர்களாக, இருந்தால், அதுவே போதாதா? என்று வினவுகின்றனர். ஒழுக்கம் சமய வாழ்விற்கு வேண்டப்படுவதேயாயினும், வெறும் ஒழுக்கம் மட்டுமே சமய வாழ்வு அன்று. ஒழுக்கம் தரும் உயர்வினும், ஒழுக்கத்துடன் கூடிய சமய வாழ்வுதரும் உயர்வு மிகமிகப் பெரியது என்பது அறிதற்குரியது.(6)

---

(5) "Buddhism in its purity ignored the existence of a god;. it denied the existence of a soul. It was not so much a religion as a code of ethics".

—WINFRED STEPHENS,
Legends of Indian Buddhism, P. 7.

(5) "Call it what you will, there is in most human lives an attitude toward the Determiner of Destiny which simply is not to be identified with social righteousness or any other kind of morality. Religion, if taken seriously and rationally, will be deeply moral; but it is not mere morality".

—Prof. J. B. PRATT,
The Religious Consciousness.

(29) "வெறும் கிரியையும் சடங்கும் மட்டுமே நிறைந்துள்ள சமயம் நமக்கு மன நிறைவை அளித்தல் இயலாது. அவ்வாறே வெறும் உயிரிரக்கமும் சமூகத்தொண்டும் ஆகியவற்றை மாத்திரமே வற்புறுத்துகின்ற சமயத்தினுலும், நாம் மன அமைதி அடைதல் அரிது. இவற்றிற்கெல்லாம் மேலாக மனிதனின் ஆன்ம தாகத்தைத் தணிக்கவல்லதாகத் திகழ்வதே உண்மைச் சமயமாகும்". அது பற்றியே திருவள்ளுவர் சடங்கும் கிரியையும் சமூகத்தொண்டும் போல்வனவற்றை விவரித்துத் தம்முடைய திருக்குறளின்கண் ஏதும் விளம்பிற்றிலர். மனிதனின் ஆன்ம தாகத்தைத் தணிக்கவல்ல சமயம் பற்றிய கருத்துக்களையே, மெய்யுணர்வு அவாவறுத்தல் முதலிய பகுதிகளில் திருவள்ளுவர் அறிவுறுத்திப் போந்தார்.(7)

(30) திருவள்ளுவர் வெறும் நீதி நூலாசிரியர் மட்டுமேயல்லர். அவர் ஒரு பெருஞ் சமய நூல் ஆசிரியரும் ஆவார். கடவுள் உயிர் உலகம் நல்வினை தீவினை பிறப்பு இறப்பு அறம் மறம் தவம் ஞானம் துறக்கம் நிரயம் தேவர் முனிவர் நரகர் முதலிய பல்வேறு சமயத்துறைப் பொருள்களையும் பற்றி, அவர் குறிப்பிட்டுக் கூறுகின்றார்.

(7) "Religion which is merely ritual and ceremonial can never satisfy. Neither can we be satisfied by a religion which is merely humanitarian or serviceable to mankind. Man's craving is for the spiritual".

—SAMUEL M. SHOEMAKER·

தெய்வப்புலவர் :

இங்ஙனம் மிகச் சிறந்த முறையில் முதன்முதலாக நூல் வழக்கின்கண் வைத்து விதிமுகமாகத் தெய்வமுண்மையையும் தெய்வவழிபாட்டையும் நிறுவிய சிறப்புக்குரியவர் திருவள்ளுவரேயாவார். திருவள்ளுவருக்கு முன்னரும் தெய்வக் கொள்கையும் வழிபாடும் சிறப்புற நிலவி வந்தனவாயினும், நமக்குக் கிடைத்துள்ள தமிழ் இலக்கிய நூற்றொகுதியை ஆய்ந்துணர்ந்தால், இச்சிறப்புக்கு முதன்முதலாக உரியவர், திருவள்ளுவரே என்பது தெற்றெனத் தெரிகின்றது. அது பற்றியே அவருக்குத் 'தெய்வப் புலவர்' என்னும் சிறப்பியற் பெயர் வழங்குவதாயிற்று.

'தெய்வப் புலவர்' என்னுந் தொடருக்கு, "மனிதராய் நம்மனோர்போலக் கல்வி கற்று வந்த எளிய புலமை யுடையவரல்லர், தெய்வத்தன்மை வாய்ந்து சிறந்த பெரும் புலவர்" என்னும் குறிப்பிற் பொருள் கூறுவர். அது பொருந்துவதேயாயினும் உண்மைப்பொருள் அதனின் வேறு எனலாம். "காக்கையைப் பாடிய பெண்பாற் புலவர் ஒருவர் "காக்கை பாடினியார்" என வழங்கப்பெற்றுற் போல, தெய்வமுண்மை நிறுவித் தெய்வ வழிபாட்டை நூன்முகத்தான் விதித்து வற்புறுத்தியருளிய தனிமுதற் பெரும் புலவர் என்னும் காரணம் பற்றியே, 'திருவள்ளுவர்' தெய்வப்புலவர் என விதந்தெடுத்துச் சிறப்பிக்கப்பெற்றுர் எனத் தெளிந்து கொள்ளுதல் மிக்க பொருத்தமும் சிறப்புமுடையதாகும்.

—ஆசிரியர்

சமயம் எனும் சொல்

இலகுறு சமயம் என்னும் எழில்இயல் இறைமைச் சொல்லில்,
நிலவுறு நிதிய வைப்பின் நிலையெலாம் நிகழ்த்தற் காமோ?
உலகினில் உளபொன் வெள்ளி மணிஎலாம் ஒருங்கே சேர்த்தும்,
விலைமதித் திடற்கீ டாகா, மேன்மையின் மிளிரும் அன்றே!

—ந. ரா. முருகவேள்

Religion! What a treasure untold,
Resides in that heavenly word!
More precious than silver and gold
Or all that this World can offord

—WILLIAM COWPER:



இணையில் பெரும் நம்கலைஞர் நீடூழி வாழ்க!

★

(பிறந்தநாள் விழா வாழ்த்து)

★

1. செந்தமிழ்த்தாய் ஈன்றளித்த திருப்புதல்வர்! அறிவு
திருஆற்றல் என்பவெலாம் ஒருங்கிணைந்த செல்வர்!
அந்தமில்சீர்ப் பேரறிஞர் அண்ணாவின் அன்பிற்கு
அமைந்தபெருஞ் சீர்த்தம்பி! அரியசெயல் வீரர்!
சந்ததமும் தமிழ்தமிழர் நலங்குறித்துச் சற்றும்
தளராமல் உழைத்துவரும் சால்புடைய தலைவர்!
நந்தம்அரும் பெருங்கலைஞர்! நல்லதமிழ் முதல்வர்!
நலங்களெலாம் சிறந்தோங்கி நீடூழி வாழ்க!

2. தோற்றத்தில் சுந்தரனார்! தொடர்ந்தபல மக்கள்
தொண்டுகளால் நாவரசர்! தூயதமிழ் வளர்க்கும்
ஆற்றலினால் தமிழ்ஞான சம்பந்தர்! அன்பின்
அமைதியினால், உருக்கத்தால் ஆன்றமணி மொழியார்!
மாற்றருஞ்சீர் முத்தமிழும் வளர்த்தலினால் இளங்கோ!
மாற்றாரை மறுத்தலினால் நக்கீரர்! என்ன,
ஏற்றமிகும் நம்முதல்வர், தமிழவேள், டாக்டர்,
இனியநல்ல எழிற்கலைஞர், நீடூழி வாழ்க!

3. நல்லபெருங் காவிரிநீர் கொண்டுவரும் திறலால்
நயத்தகுநற் கரிகாலன்! நாடெல்லாம் சென்று
வெல்லுபுகழ் நாட்டுதலால் வியன் இராச ராசன்!
வீரத்தால் இராசேந்திரன், விக்கிரமன், செங் குட்டுவன்!
சொல்லில்உயர் தமிழ்க்குலத்தின் தொல்பெருஞ்சீர் எல்லாம்
துலக்குதலால் குலோத்துங்க சோழன் என்ன,
எல்லையில்சீர் பெற்றிலங்கும் இனியதமிழ் முதல்வர்,
இணையில்பெரும் நம்கலைஞர் நீடூழி வாழ்க!

4. மண்ணிழந்து வருந்துபவர்க்கு மனையளித்தும், குடிசை
மாற்றுவா ரியம் அமைத்தும், மற்றும்பற் பலவாம்
எண்ணிறைந்த திட்டங்கள் எத்தனையோ வகுத்தும்,
இரவலரை வாழ்வுயர்த்தும் ஏந்தல்எனத் திகழ்வோர்!
கண்ணிழந்தோர் இலட்சம்பேர் கண்ணொளிதான் எய்தக்
கண்ணாடி கண்சிகிச்சை கனிந்தளித்தோர், நல்ல
புண்ணியராம் தமிழவேள், தமிழ்முதல்வர், டாக்டர்,
புகழ்சிறந்த நம்கலைஞர் நீடூழி வாழ்க!

—ந. ரா. முருகவேள்.

காஞ்சிபுரம் திரு. கச்சபேசுவரர் கோயிலின், சித்திரை உத்தரப் பெருவிழாவின்போது; துணையாணையர் திரு. எ. வேங்கடாசலம். B. sc., B.L. அவர்கள் சமயச் சொற்பொழிவுகளைத் தொடங்கி வைக்க, 'திருக்கோயில்' ஆசிரியர் திரு. ந ரா. முருகவேள், M.A., M.O.L. அவர்கள் "மெய்கண்டாரும் சிவஞான போதமும்" என்னும் தலைப்பில் விரிவுரை ஆற்றுதல்.

தவத்திரு அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்

திரு. கே. எஸ். நரசிம்மன், B.A.B.L., I.A.S.,

ஆணையர்,

அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.

திருப்பனந்தாள் திரு. காசிமடத்து அதிபர் திருவார்திரு. காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள், வாரணசியில் 18—5—72 அன்று இறையருளில் ஒன்றிக் கலந்தருளினார்கள்.

திருவார்திரு. அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், சைவமும் தமிழும் சைவ சித்தாந்தமும் தழைத்தோங்கச் செய்வதற்காக அரும்பெருந் தொண்டாற்றி வந்தார்கள், தம் வாழ்நாளில் ஏறத்தாழ ஒரு கோடியே எட்டு லட்சம் ரூபாவினை, வைப்பு நிதியாக அமைத்து நூற்றுக் கணக்கான (533) அறக்கட்டளைகளைக் குமரி முதல் இமயம் வரையில் அவர்கள் நிறுவியிருக்கின்றார்கள். திருமுறை நூல்களையும், திருக்குறள் உரை நூல்களையும் போன்றவற்றை ஒருங்கு தொகுத்துத் திருத்தமான முறையில் அடக்கவிலைப் பதிப்பாகப் பலமுறை பதிப்பித்து வெளியிட்டு அருளியுள்ளார்கள்.

சைவ நாயன்மார்களின் பாடல்பெற்ற தலங்கள்தோறும் தேவாரத் திருப்பதிகங்களைச் சலவைக் கல்லில் பொறித்து வைத்தார்கள். சிறப்பாக மதுரை மீனாட்சிசுந்தரேசுவரர் கோயிலில் பொற்றாமரைத் திருக்குளத்தின் சுவர்களில், திருக்குறளையும், சிதம்பரம் நடராசப்பெருமான் கோயிலின் சிவகங்கைத் தீர்த்தக் கரையில் திருவாசகத்தையும், முழுவதாகப் பல்லாயிரக்கணக்கான ரூபாய்ச் செலவில் சலவைக் கல்லில் பொறித்து வைத்தார்கள். இங்ஙனம் அவர்கள் செய்துள்ள அரும் பெரும் பணிகள் பலப்பல.

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே"

என்னும் புறநானூற்றுப் பாடல் வரிகளுக்குச் சுவாமிகள் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றார்கள். "விழலர் விளிவுன்னி வெய்துயிர்ப்பர்; மெய்ப்பயன் கொண்டார் சுளியார் சுமை போடுதற்கு" எனக் குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்ததற்கு ஏற்பச் சுவாமிகள் காசித்தலத்தில் கங்கை நதியில் சிவபிரான் திருவருளில் ஒன்றிக்கலந்து சித்தாந்த முத்தி நிலை எய்தியருளினார்கள்.

இத்தகைய சிறந்த அருட்பெருஞ் சான்றோராக விளங்கியிருந்த திருவார்திரு அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் உயரிய பண்பு நலங்களை வியந்து மகிழ்ந்து, செந்திலாண்டவனின் திருவருளைச் சிந்திப்பதுடன், அவர்களின் பிற்றோன்றலாகப் பீடத்திற்கு எழுந்தருளியுள்ள திருவார்திரு. முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கும், என் அன்பு வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ★

திருவார்திரு. காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்

திருப்பனந்தாள், காசிமடம்.

தருமையாதீனம் உ தருமபுரம்—மாயூரம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த 22—5—1972.
பரமாசாரிய சுவாமிகள்

" ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே"

அருளுடைய சுடராய், அளிந்ததோர் கனியாய்ப் பெருந்திறல் அருந்தவர்க்கரசாய், பொருளுடைக் கலையாய், புகழ்ச்சியைக் கடந்த போகமாய், யோகத்தின் பொலிவாய், தெருளிடத்து அடியார் சிந்தையுள் புகுந்த செல்வமாய், சிவமாய் விளங்கியவர்கள் நமது கண் மணியிற் சிறந்த நன்மணியாகிய காசிவாசி அருணந்தித் தம்பிரான் அவர்கள்.

அவர்கள். குமரகுருபரர்க்குத் திருமலைநாயக்க மன்னனால் முற்றூட்டாக வழங்கப்பெற்ற அரியநாயகிபுரத்தில் தோன்றியவர்கள். இளமையிலேயே ஆங்கிலமும், அருந்தமிழும் கற்றுத் தேர்ந்தவர்கள். தீந்தமிழ்த் தேவாரப் பாடல்களை நாளும் இன்னிசையால் பாடிப் பரவி மகிழ்ந்த வர்கள். தருமையாதீனம் இருபத்து மூன்றுவது குருமகா சந்நிதானத்தினிடம் துறவறம் பெற்ற வர்கள். ஆதீனத்தைச் சேர்ந்த திருக்கடவூர், திருவையாறு, திருநள்ளாறு, திருபுவனம், திருவாரூர் இராஜன்கட்டளை ஆகிய ஆலயங்களில், கட்டளை விசாரணையாகப் பணியாற்றிய பண்புமிக்கவர்கள். ஆதீனத்தில் மிகப்பெருஞ் சிறப்புடன் நடத்தப்பெற்ற மெய்கண்டான் சித்தாந்த மாநாடு, பத்தாண்டு விழாப்போன்ற பெரிய சமய மாநாடுகளில் பெரும் பங்கு கொண்டு, பணியாற்றிய சிறப்புக்குரியவர்கள். குருபக்தி மிக்கவர்கள். தருமைக் குருமூர்த்தி களை நனவிலும், கனவிலும், மறவாது போற்றும் மாண்புடையவர்கள்.

" கிடந்தாலும் ஞானப்ரகாசனென் பேன்கிடந்தே எழுந்து
படர்ந்தாலும் ஞானப்ரகாசனென் பேன்பசியோடு பிணி
அடர்ந்தாலும் ஞானப்ரகாசனென் பேன் அந்தகனுர்
தொடர்ந்தாலும் ஞானப்ரகாசனென் பேன்பினைச் சொல் இல்லையே"

என்ற ஞானப்பிரகாச மாலைப் பாடலுக்கு இலக்கியமாய்த் திகழ்ந்தவர்கள்.

"காரே சுமந்த கிரிமீது நின்று கடுங்கனலில்
நேரே அருந்தவஞ் செய்வீர் கமலையன் நெஞ்சிலன்பர்
ஆரேனும் ஆள்பவன் ஞானப்ரகாசன் அடியரெனும்
பேரே படைமின் அதுபோதும் நுங்கள் பிறப்பறவே"

என்ற இப்பாடலைப் பலருக்கும் அறிவுறுத்திப் பலரைப் பண்படுத்தியவர்கள். "ஞானப்பிரகாசன் பயில்மடத்தில் கெவுளி உரைக்கும் பதி பசு பாசத்தின் கேள்விகளே" என்ற பாடற் பகுதியை அன்பர்களுக்கு அடிக்கடி அறிவுறுத்தி முப்பொருள் உண்மையை வற்புறுத்தியவர்கள். தருமை யாதீனத்தின் இருபத்துநான்கு, இருபத்தைந்து, இருபத்தாறு ஆகிய மகாசந்நிதானங்கள் ஞானபீடம் ஏறுவதற்குத் துணை நின்றவர்கள்.

சிவதல யாத்திரையில் விருப்பம் மிக்கவர்கள். திருக்கேதாரத் தலத்தில் மிகுதியான ஈடுபாடு உடையவர்கள். ஆண்டிற்கு ஒருமுறை சென்று தரிசித்து மகிழ்பவர்கள். தாம் கண்ட கேதார யாத்திரையின் அருளனுபவத்தை, நமது குருமூர்த்திகளாகிய கயிலைக்குருமணியிடத்தில் அடிக்கடி தெரிவித்து, கேதார யாத்திரை, அமரநாத யாத்திரை, கயிலாய யாத்திரை முதலிய வற்றைச் செய்யத் தூண்டியவர்கள். கயிலையைத் தரிசித்த நம் குருமணிகளை, கயிலைக்குருமணி என்று முதன்முதலாக அழைத்தவர்கள். பக்தர்களின் சார்பில் தமது திருக்கரத்தாலேயே கயிலைக்குருமணிக்குக் கனகாபிஷேகம் செய்து மகிழ்ந்தவர்கள்.

பற்றிலா வாழ்க்கை வாழ்ந்து பரமற்கே ஆளானவர்கள். "குற்றாலத்துறை கூத்தனல்லால் தமக்கு உற்றார் யார்" "நன்றுங்கால் நல்லவாக் காண்பவர் அன்றுங்கால், அல்லற்படுவதெவன்" "அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்" "பரபரக்கவேண்டா பலகாலும் சொன்னேன்" என்ற இப்பாடல்களை நாளும் சிந்தித்தும், பிறர்க்கு அறிவுறுத்தியும் அவ்வழி நின்றவர்கள். இடையறாப் பேரன்பும், சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சும், நடையறாப் பெருந்துறவும், சிவவேடப் பொலிவழகும் கொண்டு திகழ்ந்தவர்கள். குமரி முதல் இமயம் வரையுள்ள புனிதத் தலங்களில் ஒரு கோடி ரூபாய்க்குமேல் மூலதனம் வைத்து 533 அறக்கட்டளைகள் நிறுவிய அருளாளர்.

காசிவாசி என்பதற்கேற்ப, பெரும்பகுதி ஸ்ரீகாசியில் வாசம் செய்தவர்கள். காசிவாசியாக வந்தவர்களில் ஸ்ரீகாசியில் முத்திப்பேறெய்தியவர்கள் ஸ்ரீபரமகுருபரர் முதல் சடையப்ப முனிவர் வரை ஐவராவர். பல்லாண்டுகளுக்குப்பிறகு அப்பெரும்பேற்றை ஸ்ரீகாசியில் பெற்றவர்கள் இவர்கள். அந்தப் புனித உடல் ஸ்ரீகாசி கங்கையில் ஜலசமாதி பெற்றதும் ஆறுவதாக இவர் களுக்கே கிடைத்த தனிச்சிறப்புக்குரியது. அவர்களது குருபக்தி விசேஷத்தால் கயிலைக் குருமணி முத்தி அடைந்த ஆறுவது மாதத்தில் கயிலைக் குருமணி முத்திப்பேறெய்திய அதே காசித் தலத்திலேயே முத்தி எய்திய ஒருமைப்பாடு உடையவர்கள்.

தமது கருத்திற்கிசைய ஒழுகும் உள்ளப்பாங்கும், தமது கருத்தறிந்து முடிக்கத்தக்க ஆற்றலும், தம்மால் நியமிக்கப்பட்ட அறங்கள் பலவற்றையும் திறம்பட நடாத்தும் திறனும், இனிய, எளிய பண்பும், செந்தமிழ்ப் புலமையும், ஆங்கில அறிவும், சிவநெறிப் பற்றும் உடைய நமது கண்மணியிற் சிறந்த நன்மணியாகிய காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர் களைத் தமக்கு வாரிசாக நியமித்துக்கொண்ட வள்ளன்மை உடையவர்கள். அருணந்தி சுவாமிகள் அவர்களின் பிரிவு சைவநெறிக்கு நிறைவு செய்ய முடியாத குறைவேயாம். ஆயினும் அவர்களது உள்ளப்பாங்கு அறிந்து ஒழுகும் காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள், அக்குறையை நிறைவு செய்வார்கள் என்பது உறுதி. இவர்கள் வாழையடி வாழை யென வந்த சமய நன்மரபுகளைப் பல்லாண்டு காத்து, சமயத்திற்கும், தாய்மொழிக்கும், நாட்டிற்கும் நல்லன எல்லாம் செய்து நீடூழிவாழ ஸ்ரீசெந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக் கின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பண்டார சந்நிதி அவர்கள், திருவாவடுதுறை,

ஆதீனகர்த்தர், திருவாவடுதுறை மடம். தஞ்சை மாவட்டம், 25-3-72.

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து அதிபர் ஸ்ரீகாசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் நினைவு மலர் ஒன்று மலர்வது குறித்து மிக மகிழ்வுறுகிறோம்.

ஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் காசி மடத்துத் தலைமை பூண்டு ஏறக்குறைய இருபத்தெட்டு ஆண்டுகள் எல்லாவித தரும பரிபாலனமும் செவ்வே நடைபெறுமாறு ஸ்ரீ காசி முதல் கன்னியாகுமரி வரை ஆணை செலுத்திப் புகழ் நிலைநாட்டினார்கள். அவர்களைப் பின்பற்றி அவ்வத் தருமங்களையும் நன்கு கண்காணித்துப் பாதுகாத்துப் பெரும் புகழுடன் விளங்குமாறு ஸ்ரீ முத்துக்குமாரத் தம்பிரான் அவர்களுக்கு ஸ்ரீ ஞானமா நடராசர் திருவருள் பெருக உண்டாவதாகுக எனச் சிந்தித்திருக்கிறோம்.

திருக்கயிலாய பரம்பரை வேளாக்குறிச்சி மடம்,

வேளாக்குறிச்சி ஆதீனம், திருப்புகலூர் அஞ்சல், தஞ்சாவூர் மாவட்டம்,

கல்லிடைக் குறிச்சி. தேதி 24—5—1972.

இமயம் முதல் குமரி வரை எண்ணற்ற அறக்கட்டளைகளை நிறுவி இந்திய மக்களின் போற்றுதலுக்கு உரியவராய் விளங்கியவர்கள் திருப்பனந்தாள் காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள். சமயப் பணிக்கும், மொழிப் பணிக்கும், சமுதாயப் பணிக்கும் இவர்கள் ஆற்றியுள்ள தொண்டுகள் அளவிடற்கரியன. ஞானச்செழுஞ்சுடராய் விளங்கி இமயப் பெருந்தலங்களையெல்லாம் தரிசித்து அருளனுபவங்களைத் தேக்கி அன்பர்களுக்கு வழங்கி வந்த தவவேந்தர் காசியில் முத்திநிலை கூடிய செய்தி கேட்டு உள்ளம் துணுக்குற்றோம். அருள் நலம் கனிந்த சுவாமிகளின் பிரிவு ஈடுசெய்ய முடியாதது.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்களுக்குப்பின் இளவரசு சுவாமிகளாகப் பல்லாண்டுகள் உடனிருந்து பழகிய அனுபவமும், திறனும் வாய்க்கப்பெற்றவர்களாகிய ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் அருளாட்சி ஏற்றிருப்பது பெருமகிழ்வையும் நிறைவையும் தருகிறது. இவர்களின் ஆட்சி சிறக்கவும் அன்பர்கள் நலம் பெறவும் நமது ஆத்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ அஜபாநடத் தியாகேசப் பெருமானின் அடிமலர்களைச் சிந்திக்கின்றோம்.

புண்ணியன் நாமம் பொலிக!

தவத்திரு. குன்றக்குடி அடிகளார்

பூவுல கத்தினில் தாவில்சீர் தவமும்
செப்பறு சீலமும் சிந்தையிற் பழுத்த
நயப்புறு நல்லருள் சேர்ந்தநல் லறிவும்
ஒருரு வாகி உருவா கியதென
அருள்நந் தியெனும் ஒருமுனி தோன்றினர்;
வைய கத்தின் வாழ்வொலி யாகிய
சிவசிவ என்னும் செம்மை ஒலியினை
ஒலித்தும் ஒலிப்பித் தும்உவந் தோங்கிய
பழுத்த மனத்தடி யவராய்ப் பண்டைப்
பட்டினத் தாரே இவரெனும் பன்மையில்
ஏற்றமார் எளிமைத் தோற்றத் தியல்பினர்;
பெற்ற பொருள்கொடு பேரறம் பலபுரிந்(து)
உற்ற சிவத்தில் ஒன்றி இன்புறக்
கங்கையைப் புகலாக் கொண்டு புகுந்த
அருமை அருள்நந்தி பெருமையார்
புண்ணியன் நாமம் பொலிக பொலிகவே!

குமரகுருபரர் மரபு வாழ்கவே!

தவத்திரு. குன்றக்குடி அடிகளார்

வைய கத்தினில் வழிவழி சிறப்பன
வான்மழை; ஞான மார்க்கமாம் இவையே!
வடபெ ருங்கல குமரி ஆயிடைச்
செந்தமி ழும்சிவ நெறியும் செழித்திடக்
கொற்றம் ஓச்சினர் குமர குருபரா;
கொழிதமிழ் செய்த குமர குருபரர்
வழிவழி வந்து சிறந்த அருள்நந்தி
உலகத் துயிர்கள் உய்தற் குரிய
நெறிகளுக் கெல்லாம் நெறியா கியதோர்
சிவநெறி யும்அதைத் தந்தசெந் தமிழும்
வளர்ந்திட அறம்பல வகைபெறச் செய்தனர்;
வையக மாந்தர்தம் வயிற்றுப் பசியினுக்(கு)
உணவும் உவப்புறு, உயிர்நலம் அறிவினல்
வனைந்துநல் அருளார் சிவமே விளைந்திடக்
கல்வி யறமும் கண்டனர்; மேலும்
புவியிற் சிறந்த பூசையும் நோன்பும்
திருவரு ளேஎனத் திகழ்திரு முறையும்
ஞாலத்து மக்கள் நனிபெற் றுவந்திட
அருள்நந் திமுனி அகத்தினிற் பழுத்த
அறத்தினைக் காக்க வந்தனை ஐய!

செந்தமிழ்க் குரிசில்! சிவநெறிக் காவல!
முத்தமிழ்த் துறைமுறை போகிய அறிஞ!
முத்துக் குமார சுவாமி முனிவ!
தருமை யென்ற தண்ணருள தடாகம்
மலர்ந்தஒண் மலாநீ! நின்முன் மலர்ந்த
பொற்பார் மலர்சண் முகதே சிகரென்(று)
ஒருபெயர் கொண்டு தருமையில் இன்று
தவம்செய் கின்றது! நீவிர் இருவரும்
மலர்ந்த தடாகக் கரையோ ரத்தினில்
கிடந்த சின்னஞ் சிறுகொடி யாம்நலம்
உரிமையாற் கண்டே உவத்த லினும்,பே
ரின்பம் ஏ(து)?எழில் முருகெனப் பூத்துத்
திகழும்நின் இளமையும செவ்வாய முறுவலும்
செந்தமிழ் விரிக்கும் சீரிய புலமையும்
தெருவெலாம் திருமுறை நெறிசெ ழித்திட
உறும்வழி உன்னுநின் ஒளிநிறை நெஞ்சமும்
உயிர்க்கெலாம் உறுதி சேர்க்கும்நின் அறநெறி
வாழ்க்கையும் வாழகென வாழ்த்துவ தன்றி
வகையறிந் தோமலோம்! குமர
குருபரர் மரபு குவலயம் வாழ்கவே!



★

பழனி, பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரிக்கு. மாண்புமிகு தமிழக முதல்வர்-தமிழவேள் - டாக்டர் - கலைஞர் அவர்கள் வருகை தந்தபொழுது, மாணவத் தலைவர் திரு பரமன் மாலையணிவித்து வரவேற்றல். (28—2—72)

★

வைணவத்தின் சிறப்பு

மகா வித்துவான்
பிரதிவாதிபயங்கரம், பத்மபூஷண்
திருமிகு. அண்ணங்கராச்சாரி சுவாமிகள் அவர்கள், காஞ்சிபுரம்.

அநாதிகாலமாகவே உலகில் பலபல மதங்கள் தோன்றி வேரூன்றியுள்ளன. மதமெனினும் கொள்கையெனினும் ஒக்கும். மதமென்பது வடமொழி, கொள்கையென்பது தென்மொழி. பொருள் ஒன்றே. ஒரு பெருங்கூட்டத்தார் கொண்ட கொள்கையையே மதமென வழங்குவர். வைணவம், சைவம், துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என வழங்கும் சில மதங்களே தென்னிந்தியர் பெரும்பாலும் அறிந்தவை. வட இந்தியாவில் நெடுந்தூரஞ் சென்றோமாயின் வல்லபமதம், நிம்பார்க்கமதம், சைதன்ய மதம் .....என்றிப்படி எண்ணிறந்த மதங்கள் வழங்குவது காண்போம். பொதுவாக மதத்தை இருவகையாகப் பிரிப்பர் பெரியோர். வைதிகமென்றும் அவைதிகமென்றும். வேதத்தைப் பிரமாணமென்று இசைந்து அதை அடிப்படையாகக்கொண்டு தோன்றிய மதம் வைதிகமெனப்படும். அங்ஙனமல்லாதது அவைதிக என்று தன்னடையே விளங்கும். துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என்னும் மதங்கள் வேதத்தையே அப்படையாகக் கொண்டு தோன்றியவையாயினும் வேதப் பொருள்களை வெவ்வேறு வகையாகக் கொள்ளுங் காரணத்தினால் மதபேதம் ஏற்பட்டது.

வைதிக மதங்களுள் ஒன்றான வைணவ மதத்தைப் பற்றி இங்குக் கூறுவோம். வைஷ்ணவ மதம்அல்லது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயம் என்பதே வைணவமெனப்படுகின்றது. இதனை இராமாநுஜ மதம், இராமாநுஜஸம்பிரதாயம், எம்பெருமானார் தரிசனம் என்கிற பெயர்களாலும் வழங்குவதுண்டு. இதனால் எம்பெருமானாரெனப்படுகிற இராமாநுஜர் காலந்தொடங்கித் தோன்றிய மதம் வைணவ மதம் என்று சிலரோ பலரோ எண்ணிவிடுவதும் சொல்லிவிடுவதுமுண்டு. உண்மை அங்ஙனமல்ல, ஆழ்வார் காலத்திலும் அவர்கட்குப் பிறகு நாதமுனிகள் என்னும் ஆசாரியருடைய காலத்திலும் தழைத்தோங்கிய மதம் வைணவம். நாதமுனிகளென்பவர் இராமாநுஜர்க்கு முந்நூறு வருடங்கள் முற்பட்டவர். இடையில் ஆளவந்தாரென்கிற பிரபல பண்டிதரான பேராசிரியர் தோன்றி வைணவக் கோட்பாடுகளை யுணர்த்தும் பல நூல்களை (வடமொழியில்) இயற்றியுள்ளார். அவ்வாசிரியருடைய சீடர்களை அடிபணிந்து பெரும்புகழ் பெற்றவர் இராமாநுஜர். இவர் அவதார புருஷராகிப் பலபல கலைகளும் பயின்று விளக்கில் கொளுத்தின தீவட்டிபோல் மிக மேம்பட்டு விளங்கினபடியால் இவரது திருவடிகளை ஆயிரக்கணக்கான சீடர்கள் பணிந்து உய்வுபெற, அன்னவர்கள் முகமாகவும் வைணவம் உலகில் பரவி மிக்க வீறு பெற்றது.

வைணவத்தின் கொள்கையைச் சுருக்கமாகச் சிலர் தெரிந்துகொள்ள விரும்பினால், தத்துவம் இதம் புருஷார்த்தம் எனப்படுகின்ற மூன்றில் வைணவர்களின் சித்தாந்தத்தை உணரப்பெறவேண்டும். பரதெய்வமாகக் கெள்ளப்படுவது எது? அதனை அடையும் வழியாகக் கொள்ளப்பட்டது எது? அடைந்த பிறகு கொள்ளும் பயன் எது? என்கிற இவற்றையறிந்து கொள்வதே தத்துவ, இத புருஷார்த்த ஞானமெனப்படும். கொள்கைகளை உட்புகுந்து ஆராயுங்கால் பல்வேறு விஷயங்கள் ஒன்றின்மேலொன்றாக வந்துபுகும்,

அவ்வளவு விரிவுவேண்டா. இம்மூன்றை யுணர்வது போதும்.

ஸ்ரீமந்நாராயணனே பரதத்துவமென்றும், அவனது திருவடிகளைத் தஞ்சமாகப் பற்றுவதே இதமென்றும், ஒழிவில் காலமெல்லா முடனுய் மன்னி வழுவிலா அடிமை செய்வதே (அதாவது நித்திய கைங்கரியம் செய்வதே) புருஷார்த்தமென்றும் நிலையிடுவதே வைணவ ஆசிரியர்களின் ஒருமிடருன சித்தாந்தம். வேதம் முதலிய நூல்களில் தெய்வங்கள் பலபல கூறப்பட்டிருந்தாலும் திருமாலொருவரே தெய்வமென்று, அறுதியிடுதலும், கருமம் ஞானம் பக்தி.........என்றிப்படி பல உபாயங்கள் (வழிகள்) பேசப்பட்டிருந்தாலும், புருடார்த்தமாக வெவ்வேறு பேறுகள் பேசப்பட்டிருந்தாலும், நூற்கொள்கைகளை ஆய்ந்து ஓய்ந்து அறுதியிடவல்ல பேராசிரியர்கள் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியையே வழிபடு தெய்வமாகவும், சரணுகதியையே தஞ்சமாகவும், அப்பரம புருஷன்பால் தொண்டு செய்வதையே புருஷார்த்தமாகவும் நிலையிட்டுள்ளார்கள். இத்தகைய அர்த்தவிசேஷங்களை உபதேசமுகத்தாலும் நூன்முகத்தாலும் நிலைநாட்டினவர்களென்கிற காரணத்தினுல் ஆழ்வார்களும் ஆசாரியர்களும் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியோடொப்ப ஆதரிக்கப்பட்டு வருகிருர்கள். இச்சம்பிரதாயத்திற்கு இவர்கள் செய்தருளிய உபகாரம் மிகப் பெரியதாதலால் இவர்கள் மஹோபகாரர்களென்று குலாவப்படுகிருர்கள். அவரவர்கள் உயிரோடிருக்கும் நாளில் தம்மடி பணிந்தவர்களுக்கு உபதேசங்களை மட்டும் செய்து போனவர்களிற்காட்டிலும், உபதேசமுஞ்செய்து பிற்காலத்தவர்களும் நெடுக வாழுமாறு நூல்களைத் தேனும் பாலும் கன்னலுமமுதுமாகப் பொறித்து வைத்தவர்கள் மஹோபகாரகர்களெனப்படுவர். பொய்கையாழ்வார் முதலாகத் திருமங்கையாழ்வாரளவாகவுள்ள ஆழ்வார்கள் பன்னிருவரும் தமிழ்வேதமென்றும் திவ்வியப் பிரபந்தங்களென்றும் வழங்கப்படுகிற பாசுரங்களைப் பாடிவைத்து மேற்சொன்ன தத்வஹித புருஷார்த்தங்களை விளங்கவைத்தார்கள். அத்திவ்வியப் பிரபந்தங்களில் மெய்யன்பு பூண்டு அவற்றைக் கண்டபாடஞ் செய்வதிலும், அவற்றின் செழும் பொருள்களை யுணர்ந்து பிரசவனஞ் செய்வதிலும் ஊக்கமுடைமை, வைணவர்களுக்கு இன்றியமையாததாம்.

வைணவ சம்பிரதாயப் பேராசிரியர்களான நாதமுனிகள் ஆளவந்தார், இராமாநுஜர் கூரத்தாழ்வார் பட்டர் லோகாசாரியர் வேதாந்த தேசிகர் மணவாளமாமுனிகள் முதலான பெரியார்களினுல் பல வழிகளிலும் வளர்க்கப்பட்டு இச்சமயம். இவ்வாசிரியர்களனைவரும் அந்தணர் தலைவராய் அவதரித்து வடமொழி வேதத்தில் ஊன்றினவர்களாயிருந்தும் அந்த வேதத்தின் உண்மைப் பொருள்களைக் கையிலங்கு நெல்லிக்கனியாகக் காட்டிக்கொடுப்பவை ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்தங்களேயென்று கொண்டு வடமொழி வேதத்தை இடக்கண்ணுகவும், தென்மொழி வேதத்தை வலக்கண்ணுகவும் கொண்டிருந்தார்கள். வேதாந்த தேசிகரென்னுமாசிரியர் ''செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய வோதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றேமே'' என்று கூறியிருப்பதொன்றே இதற்குச் சான்ருகும்.

ஸ்ரீவைஷ்ணவ பரமசாரியர்கட்கு ''உபய வேதாந்த ப்ரவர்த்தகாசாரியர்கள்'' என்பது சிறப்புப் பெயர். வடமொழி வேதாந்தமும் தென்மொழி வேதாந்தமுமாகிய இவையே உபய வேதாந்தமெனப்படும். உபய வேதமெனினும் உபய வேதாந்தமெனினும் ஒக்கும். வடமொழி மறையிற் கூறின பொருள்களும் தென்மொழி மறையிற் கூறின பொருள்களும் வேறுபாடின்றி, ஒத்திருந்தாலும், வடமொழி மறைப்பொருள்களைத் தெளிவாகக் காட்டுவது தென்மொழி மறை என்பது பற்றியே உபய வேதாந்தப் பேராசிரியர்களென்று பிரசித்தி பெற்றவர் வைணவப் பெரியார்கள்.

இங்குச் சிலர் கருதக்கூடும்; உலகில் பல மொழிகள் தோன்றியுள்ளன, ஒவ்வொரு மொழியிலும் பக்திமிக்க பல கவிகள் தோன்றித் தத்தம் தெய்வங்களைத் 'துதித்துள்ளார்கள். அவை தோத்திர நூல்களெனப்படும். அவ்வண்ணமாகவே வைணவ பக்தர்களான ஆழ்வார்கள் தமிழ்நாட்டில் தோன்றித் தமிழ்ப் புலமை பெற்றுத் தெய்வ வழிபாட்டிலூன்றிப் பாசுரங்கள் பாடினர். இவை தோத்திரப் பாக்களேயன்றி, இவற்றைத் தமிழ்வேதமென்னலாமோ? இஃது உபசார வழக்காகுமத்தனையன்றே என்று.

இங்குத் தத்துவத்தையுணர்த்துகின்றேம். ஆழ்வார்களின் அருளிச் செயலான திவ்வியப் பிரபந்தங்கள் தோத்திர நூல்கள் என்பதில் ஐயமில்லை. ஆனலும், இவை மற்ற தோத்திர நூல்கள் போலல்லாமல் வேதப்பொருள்கள்

கமழ நின்றிருப்பதாலும், பாஞ்சராத்திர நூல்களில் இவற்றை வேதமென்றே யெடுத்துக் காட்டி, 'இவை அவதரிக்கப்போகின்றன' என்று கூறியிருப்பதாலும், வைதிகோத்தமர்களான பிராமண ஸ்ரீவைஷ்ணவர்களும் ஆதி காலந்தொட்டே இவற்றை வேதமென்றே வழங்கி வருவதாலும், இவற்றுக்குத் தமிழ் வேதமென்னும் வழக்கு முக்கியமேயல்லது உபசாரத்தினாலாயதன்று. திரிமதஸ்தர்களும் பிரமாணமாக இசைந்துள்ள ஸ்ரீபாகவதத்தில் பதினோராவது ஸ்கந்தத்தின் முற்பகுதியில் ''கலௌகலு பவிஷ்யந்தி நாராயணபராயணா: ..... த்ரமிடேஷு'' என்று தொடங்கியுள்ள சுலோகங்களில் தாமிரபர்ணி, வைகை, காவேரி, பாலாறு என்னும் நதிகளையெடுத்துக்காட்டி இவற்றின் கரையில் நாராயண பக்தர்கள் அவதரிக்கப் போகிறார்கள் என்று கூறியிருப்பதும் காணத்தக்கது. ★

காரைக்குடி நகரச் சிவன் கோயிலில்
குடமுழுக்கு விழா நிகழ்த்தி எழுந்தருளச்
செய்யப் பெற்றுள்ள திரு. சரபேசமூர்த்தி
(26—5—72)

JL
Q2m;21, N59TIC
N72.14.1
448699

ஆலய அமைப்புகள்

திரு. பெ. திருஞானசம்பந்தன், எம்.ஏ., எல்.டி.,
பதிவாளர், சென்னைப் பல்கலைக் கழகம்

'ஆலயம்தானும் அரன் எனத் தொழுமே' என்று சிவஞானபோதம் செப்புகிறது. உயிர் சார்ந்ததன் வண்ணமாகும் தன்மையைப் பெற்றிருப்பதால் உலகியலில் உழலும் உயிர், அதில் சிக்குண்டு வினைகளைப் புரிந்து மயக்குற்றுக் குறிக்கோளை மறந்து மீண்டும் மீண்டும் பிறவித் தளையில் கட்டுண்டு கிடக்காமல் இருக்கவே, கோவில் கட்டுவித்து இறைவனின் திருமேனிகளை அங்கே பிரதிட்டை செய்து, பூசை, திருவிழா முதலியவற்றை ஏற்படுத்தி, நம் உள்ளம் இறைவழிபாட்டில் ஈடுபடுவதன் மூலம் அவனைச் சார்ந்து அவன் வண்ணமே ஆகும் நிலையை ஏற்படுத்தித் தந்திருக்கின்றனர் நம் முன்னோர்கள்.

வெளியெல்லாம் பரந்து கிடக்கும் மின் சக்தியை இயந்திரங்களின் வாயிலாக வாங்கி மின் பெட்டிகளில் சேமித்துக் கம்பிகளின்மூலம் வேண்டிய இடத்திற்குக் கொண்டுபோய் ஒளியைப் பெறுகிறோம். அதுபோலக் கும்பாபிஷேகத்தில் நடைபெறுகின்ற மந்திரம் ஓதுதல் முதலான கிரியைகளால் அங்கிங்கெனாதபடி எங்கும் பரந்து கிடக்கும் இறை சக்தியை லயிக்கச் செய்துவைக்கிற காரணத்தால் அப்படி லயிக்கும் இடம் 'ஆலயம்' எனப்படுகிறது. முறையாக வழிபாடாற்றும் மக்கள் ஆங்குள்ள செம்பொற் சோதியின் ஒரு பொறியை அவரவர் பக்குவ நிலைக்கேற்பத் தம் உள்ளத்தில் ஏற்றிக் கொள்ளுகிறார்கள். ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கிய அடியார்கள் வரலாறு கோவிலில் சென்று வழிபடுவதனால் பெறும் பயனை நமக்கு உணர்த்துகிறது.

திருக்கோயில்களால் சிறப்புற்றது தெய்வத் தமிழ்நாடு. திருக்கோயிலைக் கலை விளக்கமாகவும், தத்துவ விளக்கமாகவும், அருள் விளக்கமாகவும் காணலாம், சமய வாழ்வில் 'கோயிலும் இறைவன் திருவுருவங்களும், எத்தகைய நடுநாயகமான இடத்தைப் பெற்றிருக்கின்றன என்பதை அகத்திய முனிவரின் கீழ்க் கண்ட வெண்பாவில் பார்க்கிறோம்.

குருவருளும் வெண்ணீ
றெழுத்தஞ்சும் கோயில்
அரனுருவு மென்றலைமேல்
ஆக்கும்—திருவடியும்
சிட்டான அர்ச்சனையும்
தொண்டும் சிவாலயர்க்கென்று
இட்டார் அகத்தியனார் எட்டு.

தேவகிருகம், தேவாகாரம், தேவாலயதனம், தேவாலயம், தேவகுலம், மந்திரம், பவனம், பிராசாதம், ஸ்தானம் முதலான சொற்கள் திருக்கோயில்களைக் குறிப்பனவே. இவை அனைத்தும் இறைவன் உறைவிடம் என்னும் பொருளைக் குறிப்பன. கோயில் என்ற சொல்லும் கோ-இறைவன், இல்-உறைவிடம் என்று அதே பொருளை உணர்த்துகிறது.

இறைவன் நாதாதி தத்துவங்களாலாய உலகைப் படைத்தான், எண்ணிலடங்கா உயிர் வகைகளையும் உணர்வற்ற பொருள்களையும் படைத்தும் காத்தும் கரந்தும் வருகின்றான். அவற்றுள் இயங்கியும் அவற்றிற்கப்பாற்பட்டும்

வருகின்ருன். இறைவன் பேரறிவும் பேராற்றலும் உடையவனுதலின் சிற்றறிவும் சிறு ஆற்றலும் கொண்ட மனிதன் அவ்விறைவனை அவன் படைப்புக்களிடையே காண முயல்கிருன். அம்முயற்சியின் விளைவாகவே கோவில் எழுகிறது. அங்கே கோபுரங்களில், விமானங்களில், சுவர்களில், தூண்களில், மண்டபங்களில், தேவர்களையும், மனிதர்களையும், யக்ஷர்களையும், கின்னரர்களையும், விலங்குகளையும், புட்களையும், மரங்களையும், செடிகளையும் அனைத்துமே செதுக்கப்பட்ட உருவங்களாக, வார்க்கப்பட்ட பிரதிமைகளாக, தீட்டப்பட்ட சித்திரங்களாகக் காண்கிருேம். அனைத்தையும் இயக்கும் இறைவனை அருவுருவாய்த் திருக்கோயிலின் கருவறையிலுள்ள சிவலிங்கத் திருமேனியாகக் காண்கிருேம். ஈசானசிவகுருதேவபத்ததி என்ற நூல், ''திருக்கோயிலானது சிவன், சக்தி, நாதம் பிந்து முதலாகக் கலாதி தத்துவங்களின் புறத்தோற்றமாதலின் அதைச் சிவத்தோடு தொடர்புடைய மூர்த்தியாகப் பாவித்து வழிபட வேண்டும்'' என்று கூறுகிறது.

கோயிலின் முக்கிய பகுதி கருவறையின் மேலுள்ள விமானம். அது சதுரமாக இருந்தால் 'நாகரம்' என்றும், வட்டமாக இருந்தால் 'வேசரம்' என்றும், ஆறு அல்லது எட்டு பட்டை இருந்தால் 'திராவிடம்' என்றும் 'சில்பரத்னம்' 'மானசாரம்' போன்ற சிற்ப நூல்கள் வகைப்படுத்தியுள்ளன. 'நாகரம்' நாட்டின் வடபகுதியிலும், 'திராவிடம்' தென்பகுதியிலும், 'வேசரம்' இடைப்பகுதியிலும் காணப்படுவனவாகச் சாத்திரங்கள் கூறியபோதிலும், தென்னகத்திலேயே மூன்று வகைகளையும் காணலாம். நெல்லைப் பகுதியிலுள்ள ஒரு கோயிலில் நாகர அமைப்பையும், கங்கைகொண்ட சோளேச்சரத்தில் வேசர அமைப்பையும், தஞ்சைப் பெரிய கோயிலில் திராவிட அமைப்பையும் பார்க்கின்ருேம்.

விசுவகர்மப்பிரகாசம் முதலான சிற்ப நூல்களில், இருபதுவகைக் கோவில்கள் (பிராசாதங்கள்) ஒன்று முதல் பதினறு உப்பரிகை கொண்டவை குறிப்பிடப்படுகின்றன. அவை மேரு, மந்தரம், கைலாசம், விமானச்சந்தம், நந்தனம், சமுத்ரம், பத்மம், காருடம், நந்திவர்த்தனம், குஞ்சரம், கிருகராஜம், விருஷம், அம்சம், கும்பம், சர்வதோபத்ரம், மிருகராஜம், வர்துலம், சதுரச்ரம், ஷோடசாச்ரம், அஷ்டாச்ரம் ஆகியவை.

திருக்கோயிலின் கருவறையில் உலகுக்கே உயிரான இறைவனை ஓருருவில் இருக்கச் செய்து, திருக்கோயில் முழுதுமே நமது உடலோடு ஒத்த முறையில் அமைக்கப்பட்டுள்ளது. கோயிலின் பல்வேறு உறுப்புகளுக்கு உடலுறுப்புக்களின் சில பெயர்களே அமைக்கப்பட்டு உள்ளன. உடலுக்குக் கால் எப்படியோ அப்படி கோவிற்றூண்கள் 'பாதம்' என்று குறிப்பிடப்படுகின்றன. பாதத்திற்கு 'பாதுகை' தேவைப்படுவது போலத் தூணின் அடிப்பகுதி 'பாதுகை' என அழைக்கப்படுகிறது. தூணுக்குமேல் சிகரத்திற்குக் கீழுள்ள பகுதி 'களம்' (கழுத்து) என்று வழங்கப்படுகிறது. அதற்குச் சற்று மேல் வளைந்த ஒரு பகுதிக்கு 'நாசிகா' (மூக்கு) என்று பெயர். மனித உடலுக்குத் தலை எப்படிச் சிறப்புடையதோ அப்படிக் கருவறைக்கு மேலுள்ள 'சிகரம்' (சிகையை உடைய தலை) சிறப்புடைத்து. ஒருவரின் முகத்தைக்கொண்டே இன்னுரென்று தெரிந்து கொள்வதைப்போல, சிகரத்தின் அமைப்பைக்கொண்டுதான் நாகர, வேசர, திராவிட வகைகளைப் பிரித்தறிய இயலும். கருவறையைச் சுற்றியுள்ள ஐந்து பிராகாரங்களும்மனிதனுக்குள்ள ஐந்து கோசங்களை ஒத்தன. அவை அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமயகோசம் ஆகியவை; திருக்கோவிலின் ஐந்து பிராகாரங்களையும் முறையே சுற்றி இறுதியில் கருவறைக்குச் செல்கின்ற ஒருவன் படிப்படியாகப் பருப்பொருளான புறப்பொருளை விட்டுக் கருப்பொருளான சூக்கும நிலையில் காணப்படும் இறைவனை நெருங்குகிருன் என்பது பொருள்.

யாத்திரிகர்கள் தங்குவதற்கெனப் பிராகார மண்டபங்களும், இசை, நாட்டியம், புராணம் படித்தல், சமயவாதம் செய்தல் ஆகியவற்றிற்கான தனி மண்டபங்களும் சில கோயில்களில் உண்டு. கோவிலில் உள்ள நான்கு வாயில்களும் நிவிருத்திகலை, பிரதிஷ்டாகலை, வித்யாகலை, சாந்திகலை ஆகியவற்றிற்கு ஒப்பிடப்பட்டுள்ளன. கோவிலின் அகன்று விரிந்த அடித்தளம் மேலே செல்லச்செல்லக் குவிந்து தூபியில் முடிவது பருப்பொருள் சூக்கும நிலையை அடைவதைக் குறிக்கும். சிகரத்தின் மீதுள்ள அமிருதகலசம் பிறப்பிறப்பற்ற பெருநெறியை உணர்த்துகிறது.

கருவறையில் உள்ள சிவலிங்கத்தை அருவமாயும் உருவமாயும் இருந்து அருட்டொழில்

புரியும் இறைவனின் குறி என்று சேக்கிழார் காட்டுவதை நாம் காணலாம். 'காணுத அருவி னுக்கும் உருவினுக்கும் காரணமாய், நீள்நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்' என்பது சேக்கிழார் வாக்கு.

திருக்கோயில் அமைப்பு முப்பொருள் உண் மையை உணர்த்துவதாகும். கருவறையில் வீற்றிருக்கும் இறைவன், பதி. அவனை நோக் கிக் கிடக்கும் நந்தி பசு. நந்தியின் பின்புறம் அமைந்துள்ள பலிபீடம் பாசநீக்கத்தை உணர்த்தும். இதைத் திருமூலர் கூறுகிருர்.

'' ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடலேறென நிற்கும்
ஆய பலிபீட மாகுநற் பாசமாம்
ஆய அரனிலை ஆய்ந்துகொள்வார்கட்கே''

திருக்கோயிலிலுள்ள உருவங்கள், அவற் றில் காணப்படும் அங்க முத்திரைகள், அணி கள், ஆயுதங்கள், வாகனங்கள் ஒவ்வொன்றும் ஒரு தத்துவத்தைப் பின்னணியாகக் கொண் டவை. விரிவஞ்சி அவற்றை விளக்கப் புகவில்லை. எடுத்துக்காட்டாக சோமாஸ் கந்தர் போன்ற போகமூர்த்திகளும், தட்சிணு மூர்த்தி போன்ற யோக மூர்த்திகளும், காலசம் மாரமூர்த்தி போன்ற வேகமூர்த்திகளும் முறையே காத்தல், தோற்றம். அழித்தல் ஆகிய முத்தொழில்களைக் குறிப்பன. நடராசத் திருமேனி இறைவனின் பஞ்சகிருத்தியங்களைக் குறிப்பன என்பதை யாவரும் அறிவர். ★



வேளாண்மை துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி அவர்களை, திரு. ந. தருமலிங்கம், அவர்களும், பிறரும் இடும்பாவனநாத வாமி கோயிலுக்கு வரவேற்றல் (26-4-72)

கல்வெட்டுகள் கூறும் சமயநிலை

திரு. இரா. நாகசாமி, எம்.ஏ.,
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை-4.

தமிழகத்தில் இதுகாறும் கிடைத்துள்ள கல்வெட்டுக்களில் மிகவும் தொன்மை யானவை, பல்வேறு குன்றுகளில் இயற்கையாக அமைந்த குகைத்தளங்களில் காணப்படுபவை யாகும். சமணப் பெரியோர்களுக்கு வணிகர் களும் அரசர்களும், பள்ளி (படுக்கை) அமைத் ததை இக்கல்வெட்டுகள் குறிக்கின்றன. தமி ழகத்தின் வடபகுதியில் காஞ்சிக்கு அருகி லிருந்து, தென்குமரி வரை இவை காணப்படு கின்றன. இவற்றில் பெரும்பாலானவை, மதுரைக்கு அருகில் உள்ள குன்றுகளில் உள் ளன. மதுரையை ஆண்ட பாண்டிய மன்னர் கள், சமண சமயத்துக்கு ஆதரவு அளித்திருக் கின்றனர் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

மதுரைக்கு அருகிலுள்ள பல கல்வெட்டு களில் மீனாட்சிபுரம் என்ற ஊருக்கு அருகி லுள்ள மலைத்தொடரில் காணப்படும் கல் வெட்டு, மிகவும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. இது சமண சமயத்தைச் சார்ந்த " கணிநந்தன் சிரியகுவன் " என்பவருக்கு, நெடுஞ்செழியன் பணவன் கடலன் வழுதி என்பவன் பள்ளி அமைத்ததைக் குறிக்கிறது. கடலன் வழுதி பணவன் செழியன் என்ற பெயர்கள், பாண்டியர் களுடைய குலப் பெயர்கள் என்பதை அனை வரும் அறிவர். இக்கல்வெட்டுகள் கி.மு. 3-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இங்கேயே திரு வெள்ளறை நிகமம் என்பது நகரத்தையும் வணிகக் குழுவையும் குறிக்கும். மணிவாசகப் பெருமான் பிறந்த புகழ்பெற்ற திருவாதவூரிலும், அண்மையிற் சமணப் பெரியார்கள் வாழ்ந்த தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மதுரைக்கு அருகில் உள்ள கொங்கர் புளியன் குளம், அரிட்டாபட்டி, அழகர்மலை, மேட்டுப் பட்டி, முத்துப்பட்டி, விக்கிரமங்கலம், கருங் காலக்குடி முதலிய பல குன்றுகளில் சமணப் பெரியார்கள் வாழ்ந்த பாழிகளும், கல்வெட்டு களும் கிடைத்துள்ளன.

ஞானசம்பந்தப்பெருமானால் ஆனைமாமலை என்று புகழப்பெற்ற குன்றில் கிறித்துவின் சம காலத்திய கல்வெட்டு ஒன்று உள்ளது. அங்குச் சில படுக்கைகளும் உள்ளன. அக்கல்வெட்டில் அம்மலை 'இவகுன்றம்'என்று குறிக்கப்படுகிறது. 'இவம்' என்பது யானையைக் குறிக்கும். 'இவ மாகி' என்று விநாயகப்பெருமானை அருணகிரி நாதர் திருப்புகழில் பாடியுள்ளது அனைவரும் அறிந்ததே. ஆக கிறித்துவின் சற்றேறக் குறைய சமகாலத்திலேயே இக்குன்றை ஆனைக் குன்று என்று மக்கள் அழைத்துள்ளனர் என்று அறிகிறோம். அக்காலத்திலிருந்து ஞானசம்பந் தர் காலமான கி. பி. 7-ஆம் நூற்றாண்டு வரை இக்குன்று சமணப் பெரியார்கள் வாழ்ந்த புண்ணியத் தலமாகத் திகழ்ந்தது என்று அறியலாம்.

இவ்வாறு பாண்டிய மன்னர்களின் ஆதர வைப் பெற்றதுபோல, சமண சமயம் சங்ககாலச் சேர மன்னர்களுடைய ஆதரவையும் பெற்றுத் திகழ்ந்தது என்று கருவூருக்கு அருகிலுள்ள வேலாயுதம்பாளையத்து ஆறுநாட்டார் மலைக் கல்வெட்டால் அறியலாம். இங்கு இயற்கை யாக அமைந்த இரு குகைத்தளங்கள் தெற் கிலும் வடக்கிலுமாக உள்ளன. இங்கு தென் புறத்தே உள்ள குகைத்தளத்தில் சேரமன்னன் ஒருவன் ஆற்றூரைச் சேர்ந்த செங்காயபன் என்ற பெரியாருக்குப் பள்ளி அமைத்ததை இங்குள்ள கல்வெட்டு குறிக்கிறது. ஆற்றூர் என்பது இவ்வூருக்கு இருகில் உள்ள ஓர் ஊரின் பெயராக இன்றும் வழங்குகின்றது. ஆற்றூர் நாட்டார் மலையே, ஆறுநாட்டார்மலை என்று

இப்பொழுது திரிந்து வழங்குகிறது போலும்! இந்தப் பள்ளியை அமைத்தவன் கோ ஆதன் சேரன் இரும்பொறை மகன் பெருங்கடுங்கோன் என்று குறிக்கப்படுகிறான். இரும்பொறை என்பது, சேர மன்னர்களுடைய குலப்பெயர் என்பதை அறிவோம். ஆதலின் இங்கே குறிக்கப் பட்டுள்ளவர்கள், சேரர் வழியில் வந்த மூன்று அரசர்கள் என்பது தெளிவு. இதனால் இளங் கடுங்கோன் என்பவன், இளங்கோவான காலத்து இப்பள்ளியை அமைத்துக்கொடுத் தான் என்று இக்கல்வெட்டிலிருந்து அறி கிறோம். வேலாயுதம்பாளையத்திலிருந்து 10 கல் தொலைவில் கருவூர் இருக்கிறது. இக்கரு வூர் சங்ககாலச் சேரர்களின் ஒரு தலைநகராய் இருந்தது என்று சங்க இலக்கியங்களிலிருந்து அறிகிறோம். ஆதலின் இங்கு ஆண்ட சேர மன்னர்களும், மதுரையை ஆண்ட பாண்டியர் களைப் போலவே, சமண சமயத்திற்கு ஆதரவு அளித்திருக்கின்றனர் என்று தெளிவாக அறிய லாம். சேர மன்னர்கள் சிறந்த சைவர்களாகத் திகழ்ந்தனர் என்று பதிற்றுப்பத்தால் அறிய லாம்; சைவர்களாயினும் சமண சமயத்தை இவர்கள் போற்றியிருப்பது, அக்காலத் தமிழ் மன்னர்கள் பிற சமயங்களையும் எவ்வாறு போற்றினர்கள் என்பதற்கு இவை எடுத்துக் காட்டுகளாகும்.

காஞ்சிக்கு அருகில் மாமண்டூர் என்ற என்ற இடத்தில், இயற்கையாக அமைந்த குகைத்தளம் ஒன்று உண்டு. அங்கும் சமணப் பெரியார்கள் வாழ்ந்த தடயங்கள் இருக்கின் றன. கல்வெட்டுகளும் உள்ளன. இக்கல் வெட்டுகளும் கிறித்துவுக்குக் காலத்தால் முற் பட்டவை ஆதலின் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மன்னர்களும்(அக்காலத்தில் திரையர்கள் இப்பகுதியை ஆண்டுள்ளனர். சமண சமயத்தைப் போற்றியுள்ளனர் என்று அறியலாம். திருச்சி மாநகரின் ஒரு பகுதியே உறையூர் என்பது அனைவரும் அறிந்த விஷயம். திருச்சிராப்பள்ளி மலையில் இயற்கை யாக அமைந்த குகைத்தளம் ஒன்றில் சமயப் பெரியார்கள் வாழ்ந்த படுக்கைகள் உள்ளன. சித்தன்னவாசல் குகைகள்கூட அக்காலத்தே சோழர் ஆட்சிக்கு உட்பட்டிருக்கக்கூடும். ஆதலின் சேரரையும், பாண்டியரையும் போல சங்ககாலச் சோழப் பெருமன்னர்களும் சமண சமயத்துக்கு ஆதரவு அளித்துள்ளனர் என்று அறியலாம்.



உடுமலைப் பிரசண்ட விநாயகர் திருக்கோயிலில் அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்கள் இராசகோபுரத் திருப்பணியைத் துவக்கிவைத்த காட்சி. (4—5—72)

இதற்குப் பிறகு காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பல்லவர்களில் 6-ஆம் நூற்றாண்டில் ஆண்ட சிம்மவர்மன் என்ற மன்னனின் செப்பேடு ஒன்று கிடைத்துள்ளது. அது வச்சிரநந்தி என்ற சமணப் பெரியாருக்குப் பள்ளிச் சந்தம் அளித்ததைக் குறிக்கிறது. பல்லவ அரசன் சிம்ம விஷ்ணுவின் தாய், தன் கணவரின் குலச் சீர்த்திக்கும் தன் நன்மைக்குமாக அறம் பெருக அருக தேவ ஆலயத்திற்கும், யாவனிக சங்கத்திற்கும் நிலம் தானம் அளித்தாள் என்று ஹோசக்கோட்டைச் செப்பேடுகள் கூறுகின்றன.

7-ஆம் நூற்றுண்டில் ஞானசம்பந்தப் பெருமானுடைய முயற்சியாலும், அப்பர் பெருமானுடைய தொண்டாலும், சமண சமயம் சற்றுத் தளர்வு கண்டது என்று பெரும்பாலானோர் கருதுகின்றனர். ஆனல் 7-ஆம் நூற்றுண்டின் இறுதியிலும், 8-ஆம் நூற்றுண்டிலும் பல்லவர் ஆட்சியின்கீழ் இருந்த பகுதிகளும், பாண்டியர் ஆட்சியின்கீழ் இருந்த பகுதிகளும் சமண சமயம் மிகச் சிறந்த நிலையில் இருந்திருக்கிறது என்று அங்குள்ள சிற்பங்களாலும் கல்வெட்டுகளாலும் அறிய முடிகிறது. மதுரைக்கு அருகில் உள்ள பல்வேறு குன்றுகளிலும் சமணப் பெரியார்கள் வாழ்ந்திருக்கின்றுர்கள் என்பதற்குச் சான்றுக அங்கு சமண தீர்த்தங்கரர்களின் சிற்பங்களும், வட்டெழுத்துக் கல்வெட்டுகளும் பரவலாகக் காணப்படுகின்றன. நெல்லை மாவட்டம் கழுகுமலை என்ற இடத்தில் வெட்டுவான் கோயில் என்று சிவபெருமானுக்கு எடுக்கப்பட்ட புகழ்பெற்ற கோயிலுக்கு அருகில் ஏராளமான சமண சிற்பங்கள் காணக்கிடக்கின்றன. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்த சமணச் சார்பு உடையவர்கள் அங்கு சிற்பங்களையும் கல்வெட்டுகளையும் விட்டு வைத்துள்ளனர். பல்லவர் நாட்டின் திருமலை, சாத்தமங்கலம் முதலிய இடங்களில் சமணப் பெரியார்களுக்கு அளிக்கப்பட்ட இடங்களும் சிற்பங்களும் உள்ளன. இவை சற்றேறக்குறைய 8-ஆம் நூற்றுண்டைச் சார்ந்தவை. இவற்றிலிருந்து தமிழகத்தே ஆண்ட மன்னர்கள் தாங்கள் ஒரு குறிப்பிட்ட சமயத்தைப் பின்பற்றிய போதிலும், தம் நாட்டில் வாழ்ந்த சமண சமயத்தாரது கோட்பாடுகளுக்கும் பேராதரவு அளித்திருக்கின்றனர் என்பதற்கு இவ்வரலாற்றுச் சின்னங்கள் சான்று பகர்வனவாக இன்றும் உள்ளன எனலாம்.



உடுமலைப்பேட்டைப் பிரசண்ட விநாயகர் திருக்கோயில் இராசகோபுரத் திருப்பணித் துவக்க விழாவில், பொதுப்பணித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. S. J. சாதிக்பாட்சா B. A., B. L., அவர்கள் தலைமை உரை நிகழ்த்துதல்.

தமிழ்மொழிச் சிறப்பு*

முன்னுரை :

இந் நிலவுலகின்கண் உள்ள பற்பல நாடுகளிலும் எத்துணையோ பல நூற்றுக் கணக்கான மொழிகள் வழங்கி வருகின்றன. சிறு சிறு கிளை மொழிகளைத் தவிர்த்து, உலகில் இதுபோழ்து வழங்கிவரும் மொழிகள் ஏறத்தாழ 2796 என்று மொழி நூற்றுறை யறிஞர்கள் ஒருவாறு கணக்கெடுத்திருக்கின்றனர். (Mario A. Pei, The World's Chief Languages, p. 15) அவைகள் அனைத்தும் ஒரே தரத்தன அல்ல. தத்தமக்கு அமைந்த இயல்புகளுக்கு ஏற்ப அவைகள் வெவ்வேறு படிநிலைகளை யுடையன. அவற்றுள் மிகப் பெரும்பாலானவை 'திருந்தா மொழிகள்' என்னும் வகையைச் சேர்ந்தனவாகலாம். 'திருந்திய மொழிகள்' எனக் குறிப்பிடத் தகுந்த சிறப்புடைய மொழிகள் ஒரு சிலவேயாதல் கூடும். அவற்றுள்ளும், இலக்கண இலக்கிய நலங்களிற் சிறந்து பழமையும் பெருமையும் வாய்ந்தவை மிகச் சிலவாகவே இருக்கும். அவை தம்முள்ளும் ஒரு சிலவே "உயர்தனிச் செம் மொழிகள்" எனப் புகழ்ந்து போற்றத்தக்கனவாகத் திகழ்கின்றன. அவ்வொரு சில உயர்தனிச் செம் மொழிகளிலும் கூட, எத்தனையோ பல மொழிகள் வழக்கிழந்து நிற்க, அமிழ்தினும் இனிய நமது அருமைத் தமிழ்மொழி யொன்றே, பல்லாயிரம் ஆண்டுகளாக உலகவழக்கு, நூல் வழக்கு என்னும் இருதிற வழக்கினும் தொன்று தொட்டு இன்று காறும் நின்று நிலவி, இளமை யாற்றலோடு வளங் குன்றாது இனிது வழங்கி வளர்ந்து வருகின்றது.

உலகின்கண் உள்ள ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொருவகைச் சிறப்பியல்பு உண்டு. அவ்வகையிற் கருதின், எல்லா மொழிகளும் தம்முள் ஓராற்றால் ஒத்ததன்மை யுடையனவே என்பதில் ஐயமில்லை. ஆயினும், அமிழ்தினும் இனிய நம் தமிழ் மொழியானது தனக்கெனப் பல தனிப் பெருஞ் சிறப்பியல்புகளையுடையதெனக் குறிப்பிடுதல் இழுக்காகாது.

சிறப்பியல்புகள் :

(1) தமிழில் உள்ள எழுத்துக்களெல்லாம் மக்களுடைய நாவின் இயல்பையும் ஒலியின் இயல்பையும் ஆராய்ந்தறிந்து, இயற்கை நெறிக்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளன.

(2) உரப்பல் கனைத்தல் முதலிய அரிய முயற்சிகள் இன்றி, எளிமையும் இனிமையும் அமையத் தமிழ் எழுத்துக்களை யாவரும் ஒலித்தல் இயலும்.

(3) தமிழ் எழுத்துக்களின் ஒலியமைப்பியற்கை, தமிழ்மக்கள் வேறு பிற அயல்நாட்டு மொழிகளின் ஒலிகளையும் நன்கினிது திறம்பட ஒலிப்பதற்குத் துணைபுரியக் கூடியதாகத் திகழ்கின்றது.

(4) ஆங்கிலம் முதலிய மொழிகளில் ஓரெழுத்தே பலவேறு ஒலிகளைக் குறிக்கப் பயன்படுவது போல் அன்றி, 'ஓரெழுத்துக்கு ஓரொலி' என்னும் அறிவு நெறிக் கொள்கைக்குப் பெரும்பாலும் முரண்படாமல் தமிழ் எழுத்துக்கள் அமைந்துள்ளன.

(5) ஒரு சில மொழிகள் தமக்கேயுரிய எழுத்தமைப்பினை யுடையன அல்ல. எடுத்துக் காட்டாக, இட்டலியன் ஃபிரெஞ்சு ஸ்பானிஷ்

---

* திருவண்ணாமலைக்கு அருகில் உள்ளதும், மலைபடுகடாம் என்னும் சங்ககால நூலின் பாட்டுடைத் தலைவன் ஆகிய நன்னன் சேய் நன்னன் என்னும் அரசனின் தலைநகராக விளங்கியிருந்ததும் ஆகிய செங்கம் என்னும் ஊரில் நிகழ்ந்த "செங்கம் தமிழ்ச் சங்கம்" தொடக்க விழாவில், மூதறிஞர் திரு. மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்கள் தலைமையில், நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது. (14-5-72). —ஆசிரியர்.

ஆங்கிலம் முதலிய மொழிகள் தமக்கெனத் தனித்தனியே எழுத்தமைப்புக்களைப் பெருமல், ஒரேவகை நெடுங் கணக்கினையே (Alphabet) கையாளுகின்றன. எழுதாக் கிளவியாக இருந்த வடமொழியும், தனக்கென ஓர் எழுத் தமைப்பைப் பெருமையால், அவ்வவ் விடத் துக்கு ஏற்பத் தேவநாகரி கிரந்தம் முதலிய எழுத்துக்களால் எழுதப்படுகின்றது. ஆனல், தமிழ்மொழியோ மிகப் பழங்காலந் தொட்டே தனக்கெனவுரிய ஒருதனி எழுத் தமைப்பை உடையதாக விளங்கி வருகின்றது.

(6) ஆங்கிலத்தில் 'அச்செழுத்து வகை' 'கையெழுத்துவகை' என இருவேறு பிரிவுகள் உள்ளன. அரபிய மொழியில் மொழியின் முதலிடை கடைகளில் வரும் முறைகளுக்கேற்ப மெய்யெழுத்துக்கள் நான்கு வேறு வடிவங் களைப் பெறுகின்றன. மேலும், ஒருமொழியே அதனைப் பேசும் மக்களின் மதம் பன்பாடு முதலிய வேறு பாடுகள் காரணமாக வெவ்வேறு வகையான எழுத்துக்களால் எழுதப்படுவ துண்டு. உதாரணமாக, இந்திமொழியொன்றே தேவநாகரி எழுத்தால் இந்து சமயத்தவர் களாலும், அரபி எழுத்துக்களால் இசுலாமிய சமயத்தவராலும் எழுதப்பட்டு, முறையே இந்துஸ்தானி உருது என்னும் வெவ்வேறு பெயர்களைப் பெற்று வழங்குகின்றது. தமிழில் இத்தகைய இடர்ப்பாடுகள் இல்லை.

(7) சில மொழிகளில் எழுதுவது ஒரு வகையும் ஒலிப்பது பிறிதொரு வகையுமாக உள்ளது. ஆங்கிலத்தில் Put But Often Depot முதலிய யாவரும் அறிந்த சொற்களே, இவ்வுண்மையை விளக்கப் போதிய சான்றும். ஜெர்மன் மொழியில் 'ரூட்டர்' 'ஃப்ரூட்' என எழுதிவிட்டு 'ராய்ட்டர்' 'ஃப்ராய்ட்' என ஒலிக் கின்றனர். வடமொழியிலும் ப்ரஹ்ம சிஹ்ம வஹ்நி: விஜ்ஞானம் என எழுதிவிட்டு முறையே ப்ரம்ஹ சிம்ஹ வந்ஹி: விக்ஞானம் என் றெலிக்கின்றனர். இங்ஙனம் எழுதுவது ஒரு வகையும், ஒலிப்பது பிறிதொரு வகையுமாக இருத்தலால், நேரும் இடர்ப்பாடுகட்கு எல் லையே இல்லை. ஒலிப்புக்கென்றே மிகப் பெரிய விளக்க நூல்கள் வெளியிட வேண்டிய இன்றி யமையாமை, ஆங்கிலம் முதலிய மொழிகளில் காணப்படுகின்றது.* வல்லொலி மெல்லொலி மாற்றம் தவிர, இத்தகைய குறைபாடுகள் தமிழில் இல்லை எனத் துணிந்து கூறலாம்.

(8) தமிழிலுள்ள சொற்கள் எல்லாம் பெரும்பாலும் மிகக் குறுகியனவாய், ஓரசை ஈரசைகளாலேயே பெரும்பாலும் இயன் றுள்ளன. "நாகரிகம் எய்தப் பெருத எளிய மக்கள் பேசும் மொழியின் சொற்கள், அவர்கள் கையாளும் கருவிகளைப் போலவே திருத்தமும் செம்மையும் பெருமல், மிக நீளமாக இருக்கும்" என்பது மொழிநூல் அறிஞர்கள் கண்டறிந்த உண்மையாகலின், தமிழில் வழங்கும் சிறுசிறு சொல்லமைப்பே, அதன் பழம்பெரு நாகரிகத் தினையும் பண்பாட்டினையும் அறிவிக்கும் சான்ருக அமையும்.

(9) தமிழிற் பகுத்தறிவுடைய மக்களை உயர்திணை என்றும்; பகுத்தறிவில்லாத உயிரையும்,உயிரில் பொருள்களையும் அஃறிணை என்றும் பாகுபாடு செய்து விளக்கியிருப்பது பாராட்டற்குரியதாகும்.

(10) அங்ஙனமே சொல் நோக்கி ஆணைப் பெண்ணுகவும், பெண்ணை ஆணுகவும், இரண் டையும் அலியாகவும், மனஞ் சென்றவாறு செயற்கைப் போலி நெறியிற் கூறியொழிந்து பிழைபடாமல், பொருள் நோக்கி இயற்கைக்கு ஏற்பத் தமிழிற் பால்கள் வகுக்கப்பட்டுள்ளமை யும் மிகவும் மகிழ்தற்குரிய செய்தியாகும். வட மொழியில் 'மனைவி' என்னும் ஒரு பொருளே குறிக்கும் பார்யா - தாரா : - களத்ரம் என்னும் மூன்று சொற்களும், முறையே பெண்பால் ஆண் பால் அலிப்பால் எனக் கொள்ளப்படுகின்றன. கல்லின் பெயர்களாகிய பாஷாண : - சிலா : - உபலம் என்னும் சொற்கள் மூன்றும் முறையே ஆண்பால் பெண்பால் அலிப்பால் எனக் ்ருதப் படுகின்றன. தமிழில் இத்தகைய செயற்கைக் கற்பனைப் பாற்பாகுபாடுகள் சிறிதும் இல்லாமை கருதற்பாலது.

---

*" In the English tongue we Speak
Why is 'break' not rymed With 'freak'?
Well, you tell me why it is true,
We say 'Sew? but likewise 'Jew'?
'Beard' sounds not the same as 'heard'.
'Cord' is different from 'word'
And since 'Pay' is rhymed with 'say'
why not 'paid' with 'said', I Pray?
'Cow' is 'Cow' but 'low' is 'low'.
Shoe' is never rhymed with 'foe'.
And in short it seems to me
Sound and letters disagree......

—LORD CROWER.

" The English Spelling is an international disaster"

—G. B. SHAW.

(11) தமிழில் உள்ள வினைச் சொற்கள், திணைபால் இடம் காலம் என்பவற்றைக் காட்ட வல்லனவாக விளங்குதல் போல வேறு சில மொழிகளிற் காண்டல் அரிது. ஒருசில மொழி களில் உரிச்சொற்களும் வேற்றுமை யுருபுகள் ஏற்பதுண்டு. அம்முறை தமிழில் இல்லாமை கற்பார்க்கு எளிமை பயக்கின்றது.

(12) தமிழ்ச் சொற்களின் பகுதி விகுதி முதலிய உறுப்புக்கள் மிக எளியவரும் தாமே கருதி யுணர்ந்து கொள்ளத் தக்க இயல் புடையன. பிற சில மொழிகளிற் போலச் செயற்கை நெறிகளிலும் வெறும் கற்பனை முறை களிலும், சொற்களின் பகுதி விகுதிகள் தமிழில் வகுக்கப்பட்டில்லாமை, அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிகின்றன. தமிழில் ஒரு சொல்லின் பகுதி விகாரப்படினும் முற்றும் மாருது நிற்கும். பிற மொழிகளில் வினைப்பகுதி கள் இயல்பாலும், கால இடங்களாலும், பகுதி யின் வடிவத்திற்குத் தொடர்பேதும் இல்லாத வடிவங்களை அடைதலுண்டு.

(13) ''பன்னீருயிரும் க ச த ந ப ம வ ய ஞ ங ஈரைந்து உயிர் மெய்யும் மொழி முதல்'' எனச் சொற்களின் முதலில் வருவன 22 எழுத் துக்களே எனவும்; ''ஆவி ஞ ண ந ம ன ய ர

திரு. இடும்பாவனம் கோயிலுக்கு வருகை தந்த வேளாண்துறை அமைச் சர் மாண்புமிகு மன்னை ப. நாராயணசாமி அவர்களுக்குத் திரு. ந. தர்மலிங்கம் அவர்கள் வரவேற்புரை வாசித்தளித்தல் (26-4-72)

ல வ ழ ள மெய் சாயும் உகரம் நாலாறும் ஈறே'' எனச் சொற்களின் இறுதியில் வருவன 24 எழுத்துக்களே எனவும் பிறவாறும், தமிழிலக் கணம் ஆராய்ந்து அளந்து கூறியிருப்பது மிகவும் வியக்கத் தக்க செய்தியாகும்.

(14) ஆசிரியர் சிவஞான சுவாமிகள் தமது 'தொல்காப்பியப் பாயிர விருத்தியில், "தமிழ் மொழிப் புணர்ச்சிக்கட்படுஞ் செய்கைகளும் குறியீடுகளும், விணக்குறிப்பு விணத்தொகை முதலிய சொல்லிலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம் புறம் என்னும் பொருட் பாகுபாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப்பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய செய்யுளிலக்கணமும் இன்னோரன்ன பிறவும் வட மொழியிற் பெறப்படா'' எனக் கூறியிருப் பது ஈண்டுக் குறிக்கொளத் தக்கது.

(15) பிறமொழி மதம் பற்றிப் பவணந்தி யார் இடுகுறிப் பெயர் உடன்பட்டனராயினும், "மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்று'' எனவும், "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'' எனவும் ஆசிரியர் தொல்காப்பியர் அருளிச் செய்திருத்தலின், தமிழில் எல்லாச் சொற்களும், அறிவார்ந்த முறையிற் காரணம் பற்றி அமைந்தனவே என்பது அறியப்படும். "ஆசிரியர் தொல்காப் பியனுர் யாதானுமோர் காரணம் பற்றியே குறியிட்டு ஆளுதலல்லது வட நூலார் போலக் காரணம் பற்றுதும் குறியிட்டு ஆளுதல் யாண்டும் இல்லை'' எனச் சிவஞான சுவாமிகள் தமது, 'தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தி'யிற் குறித்திருப்பதும் ஈண்டு நாம் உணர்தற்கு ஏற்புடையது.

(16) ஏணைய மொழிகள் எல்லாம் எழுத்து சொல் சொற்றொடர் செய்யுள் என்பன போன்ற வற்றிற்கு மட்டுமே, ஓரளவு இலக்கணம் உடை யனவாக, அவற்ருற் குறிக்கப்படும் பொருளுக் கும் கூடத் தமிழ்மொழி இலக்கணம் வகுத் திருக்கின்றது. அது பற்றியே யன்றோ பரி பாடலின்கண் "தள்ளாப் பொருளியல்பிற் றண்டமிழ்'' எனத் தமிழ் மொழியினைச் சான் ருேர்கள் போற்றுவாராயினர் என்பது.

(17) மக்களின் வாழ்க்கையை அகம் புறம் என இரண்டாகப்பகுத்து, மக்களாயினுர் தம் வாழ்க்கையில் இன்றியமையாது எய்தற் பாலனவாகிய அறம் பொருள் இன்பம் வீடு என்பனவற்றையும், அவற்ருேடு தொடர் புடைய காதல் வீரம் முதலிய பற்பல செய்தி களையும் எல்லாம் "புலநெறி வழக்கம்'' பற்றி, மிகவும் விரிவாக விளக்கிக் கூறியிருப்பது, தமிழிலக்கணத்தின் தனிப்பெரும் சிறப்பியல் புகளுளெல்லாம் தலைசிறந்த தொன்ருகும்.

(18) ஆங்கிலம் உலகப் பெருமொழிகளுள் ஒன்ருக இன்று திகழ்கின்ற தெனினும், அதன் இலக்கணம் இன்னும் போதிய திருத்தமும் செம்மையும் எய்தவில்லை என அறிஞர்கள் கூறி வருகின்றனர். ஆனுல் ஏறத்தாழ மூவா யிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, தமிழில் தொல்காப்பியம் என்னும் தூய சிறந்த முழு முதல் இலக்கண நூல் அமைந்திருப்பது, மிகப் பெரிதும் வியந்து போற்றுதற்குரியது. தமிழ் மக்கள் கண்டுணர்ந்து கடைப்பிடித்த நூற்பா அமைப்பு, சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல் நவின்ருேர்க்கினிமை நன்மொழிபுணர்த்தல் ஓசையுடைமை ஆழமுடைத்தாதல் முதலிய பத்துவகை அழகுகளும் பயின்று, எத்தனை மாட்சிமைமிக்கு இலங்குகின்றது! நூற்பாக் களைக் காரண காரிய முறை பிறழாமலும், முன்னெடு பின் முரணுமலும் பிறவாறும் அமைத்திருக்கும் திறமும், அவற்றிற்கு இளம் பூரணர் சேனவரையர் பேராசிரியர் நச்சினுர்க் கினியர் முதலானேர் வரைந்திருக்கும் அரிய பெரிய உரை விளங்கங்களும் பிறவுமெல்லாம், நினைத்தொறும் நினைத்தொறும் வியப்பும் விம்மிதமும் விளைக்கவல்லன அன்ருே ?

(19) உலகத்திற் பல மொழிகள் காலத் திற்குக் காலம் திரிந்து சிதைந்து மாறுபடு கின்றன. போவுல்ப், கேடிமான் காலத்தில் வழங்கிய ஆங்கில மொழி சாசர் காலத்திலும்; சாசர் காலத்திய மொழி செகப்பிரியர் காலத் திலும், செகப்பிரியர் காலத்து மொழி தேனி சையன் காலத்திலும், எத்தனை எத்தனையோ மாறுதல்களை அடைந்துள்ளன. மோசே முனி வர் பேசிய எபிரேய மொழியும், இயேசுநாதர் பேசிய அரமைக் மொழியும், புத்தர்பிரான் பேசிய பாலி மொழியும், மகாவீர வர்த்தமானர் பேசிய அர்த்தமாகதி மொழியும், பிறவும் இன்று உலகவழக்கு அற்று, பெரிதும் நூல் வழக்கில் மட்டுமே இருந்து வருகின்றன. ஆனுல் தமிழ் மொழியானது கடந்த இரண்டாயிரம் மூவா யிரம் ஆண்டுகளுக்கும் மேலாகவே மாருமலும் சிதையாமலும், ஒரே நிலையிற் 'கன்னித்தமிழ்' எனச் சிறப்பிக்கப் படுவதற்கு ஏற்ப, இன்றும்

யாவர்க்கும் எளிதிற் புரியும் வகையில் நிலை பெற்று இனிது நிலவி வருகின்றது. உலக மொழிகளின் வரலாற்றில் இஃதொரு விந்தையே யாகும்.

(20) "எங்களுடைய மொழி செகப்பிரியரும், மில்ட்டனும் பேசிய மொழி, விவிலிய நூலைப் பெற்றுள்ள மொழி" என்று ஆங்கில மொழியினைப் பற்றிக் குறிப்பிட்டு, அறிஞர் ஒருவர் (G. B. Shaw, Pygnalion), பெருமிதம் கொள்கின்றார். அம்முறையில் நாமும், நம்முடைய தமிழ்மொழியைத் தொல்காப்பியரும் திருவள்ளுவரும் இளங்கோவடிகளும் பேசிய மொழி என்றும், ஆழ்வார்களும் நாயன்மார்களும் முறையே திவ்வியப் பிரபந்தங்களும் திருமுறைகளும் பாடியருளிச் செய்த தெய்விக மொழி என்றும், கூறிப் பெருமிதப்பட்டுக் கொள்ளலாம்.

—ஆசிரியர்

விழுப்புரம் கைலாசநாதர் கோயிலின் திருப்பணித் தொடக்க விழாவில், நமது அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன் B.A., B.L., I. A. S. அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தல் (9—2—72)

செம்மைத் தமிழின் சிறப்பு

1. மொழிகள் பலப்பலதாம் மூதுலகில் உண்டு!
இழிவின் றவையுயர்ந்த வேனும், —விழுமியநல்
தெய்வ நலம்சிறந்த சீர்த்தியினிற் செந்தமிழ்போல்,
வையத் துயர்ந்தனஇல் மற்று.

2. சட்டத்தில் லத்தீனம்; சால்பறத்தில் ஈபுருவம்:
தட்பமிகு தத்துவத்தில் சம்ஸ்கிருதம்; – நுட்பமிக
ஆன்ற அறிவியலில் ஆங்கிலம், செர் மன், ஃபிரெஞ்ச்போல்,
சான்றஇறை மாண்பில் தமிழ்.

3. நம்மருமைச் செந்தமிழின் நல்லமைப்பை ஆராய்ந்தால்
செம்மைமிகு நற்றமிழர் தெய்வநல - மெய்ம்மைகள்தாம்
எல்லாம் பொதிந்தொளிர்தல், யாரும் இனிதுணர்ந்து
நல்லோராய் வாழ்வர்! நயந்து.

4. செகப்பிரியர் பேசிய சீர்மொழி என்று
மிகப்பெரிதும் கொள்கின்ருர் வீறு! -தகச்சிறிதோ
நம்மருமை ஆழ்வார்கள் நாயன்மார் கள்பாடும்
செம்மைத் தமிழின் சிறப்பு!

—ஆசிரியர்

தமிழின் தனிச் சிறப்புகள்

1. செய்யுள் நடையிற் கிரேக்கத்திற் சிறந்த நயமும் திருத்தமும்மிக் (கு),
எய்தற் கருநற் கலைவிரிவில் இலத்தீ னத்தின் மிகமேலாய்,
உய்யும் நிறைவால் ஆற்றலினுல் உயர்ந்த செருமன் ஆங்கிலத்தின்
மெய்யே ஓங்கித் தமிழ்மொழிதான் விளங்கித் திகழும்! தமிழ்வெல்க!

2. கருத்துச் சிறப்பில், ஆற்றலினில், கலைகள் மலிந்த கவிவளத்தில்,
சுருக்கத் திறனில், திட்பநுட்பம் துதைந்து விளங்கும் அறிவறத்தில்,
ஒருக்க உணர்வும் உரைவிளைவும் ஒன்றும் உயர்வில், தமிழ்மொழிபோல்
பெருக்கம் அமைந்து பிறங்குமொழி பிறிதொன்றில்லை! தமிழ்வாழ்க!

3. எண்ணில் மொழிகள் வழக்கிழந்தே, எவரோ சிலர்தாம் பயிலநிற்கக்,
கண்ணில் விளங்கு கருமணிபோல் கனிவிற் போற்றி, மக்கள்பலர்
மண்ணில் இன்றும் வழங்கிவர, மாரு வளத்தில், தொன்றுதொட்டே
திண்ணி தாகத் தமிழ்மொழிதான் சிறந்து திகழும்! தமிழ்போற்றி! —ஆசிரியர்

---

1. "It is not perhaps extravagant to say that in its poetic form, the Tamil is more polished and exact than the Greek, and in both dialects with its borrowed treasures, more copious than Latin. In its fullness and force it resembles English and German more than any other living language."
—Dr. WINSLOW.

2. "Perhaps no language combines greater force with equal brevity and it may be asserted that no human speech is more close and philosophic in its expression as an exponent of the mind. The sequence of things, of thought and action and its results, is always maintained inviolate."
—PERCIVAL.

3. "Tamil is, perhaps, the only example of an ancient classical tongue, which has survived as a spoken language, for more than 2500 years, with its basic structure, almost unchanged.".
—Encyclopaedia of Brittanica.

திருவாசகமணியின் சீரிய தொண்டு

அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தின் அழைப்பின் பேரிலும், மலேசியா நாட்டுத் திருவருட்செல்வி. சரளாதேவிராஜசுந்தரம் அம்மையின் ஆதரவோடும், 17-5-72 அன்று ஆகாயவிமானம் மூலம் யாழ்ப்பாணம்போய்ச் சேர்ந்த திருவாசகமணி திரு. கே. எம். பால சுப்பிரமணியம் B.A., B.L. அவர்கள், இலங்கை நாட்டில் 14 நாட்கள் சுற்றுப்பயணம் செய்து, 13 சொற்பொழிவுகள் நிகழ்த்தி விட்டு, 31-5-72 அன்று விமானம் மூலம் தாயகம் திரும்பி யுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு இவர் போந்தமை, இவருக்கு இரண்டாவது பயணமாகும். இருபத் திரண்டு ஆண்டுகட்கு முன்னர், 1950-ல் யாழ்ப் பாணத்தில் நடைபெற்ற அகில இலங்கை அரிசன மகாநாட்டின் தலைவராகச் சென் றிருந்த திருவாசகமணியவர்கள், தமது தலை மைச் சொற்பொழிவின் வாயிலாக, இலங்கை ஆலயப்பிரவேச மசோதாவிற்கு அடிகோலி, ஆதரவு வழங்கியுள்ளமை ஈண்டுக் குறிப்பிடத் தக்கதாகும்.

சேக்கிழார் பெருமானின் சீரிய குருபூசை நாளாகிய 18-5-72 அன்று, யாழ்நகர் இந்துக் கல்லூரியின் சிறந்த வெளியரங்கில் நடைபெற்ற விழாவில், "சேக்கிழாரின் புதுமை" என்ற தலைப்பில் திருவாசகமணி ஆற்றிய முதல் சொற் பொழிவினை இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் அமைதி கலந்த ஆர்வத்தோடு கேட்டு ஆனந்தித்தனர். சாதியொழிப்பு, சம பந்தி போசனம், தீண்டாமை யொழிப்பு, கலப்பு மணம், பேத மற்ற வழிபாடு முதலிய தற்காலச் சமூகச் சீர்திருத்தங்கள் மட்டுமேயன்றி, ஐன்ஸ் டீனின் ஒப்புமைக் கொள்கை(Einstein's Theory of Relativity), மார்க்கோனியின் கம்பியில்லா வானொலி போன்ற தற்கால விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளும் கூட, 800 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பெற்ற சேக்கிழாரின் பெரியபுராணத்தில் குறிப்பிடப் பட்டுள்ளமையைத் திருவாசகமணி எடுத்துக் காட்டி விளக்கியதைக் கேட்ட அனை வரும் வியந்து, பாராட்டிப்போற்றினர். இதன் பயனாக அதே இடத்தில் அடுத்த நாள் "சேக் கிழாரின் புலமை" என்னும் தலைப்பில், திரு வாசகமணி அவர்கள் பேசிய கூட்டத்திற்கு 3000 பேர்களுக்கு மேல் ஆண்கள், பெண்கள், மாணவர்கள் முதலியோர் வந்து கூடியிருந்து கேட்டும், உள்ளம் குளிர்ந்தும் உவகையில் ஆழ்ந்தனர்.

மூன்றும் நாளாகிய 20-5-72 அன்று அவருக்கே உரியதாகிய "திருவாசகம்" என்னும் பொருள்பற்றித் திருவாசகமணி ஆற்றிய மூன்று மணிநேரச் சொற்பொழிவிற்கு, அதுவரை அந்த விழா கண்டிராத அளவு 5000 பேர்களுக்கும் மேற்பட்ட மக்கள் வந்திருந்து, செவிமடுத்துப் பேரானந்தம் நுகர்ந்தனர். இன்னும் ஒரு மணி நேரம் பேசினாலும் சலியாது கேட்டிருந்திருப்போம் எனப் பொதுமக்கள் கூறிச்சென்றனர். புத்துணர்வும். விஞ்ஞானச் செறிவும், புதுக்கண்ணோட்டமும் கொண்ட இவரது நவரசச் சொற்பொழிவு, முதியவர்களை விட வாலிபர்களையே, மாணவர்களையே சிறப் பாகக் கவர்ந்து ஈர்த்தது கண்கூடு. "இந்து சாதனம்" என்னும் ஈழநாட்டுப் பத்திரிகை யொன்று எழுதியமை போல "திருவாசக மணியின் பேச்சைக் கேட்ட நாத்திகர்களும் ஆத்திகராகிவிடுவர்".

யாழ்ப்பாணத்தின் பெண்கள் இந்துக் கல்லூரியிலும், சர். பி. இராமநாதன் இந்துப் பெண்கள் கல்லூரியிலும், முறையே திருவாசக மணி சொற்பொழிவாற்றினார். கொழும்புக்குப் போகும் வழியில் திருக்கோணமலையில் இறங்கி, அவ்வூர்த் தொண்டர்கள் ஏற்பாடு செய்த கூட்டத்தில் "திருவாசகம்" பற்றித் திருவாசக மணி 2½ மணி நேரம் பேசினார். ஆயிரத்துக்கு

மேற்பட்ட மக்கள் இறுதிவரை இருந்து கேட்டு மகிழ்ந்தனர்.

கொழும்பு நகரில் திருவாசகமணியவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகள் மொத்தம் ஆறு. அவற்றுள் ஆங்கிலப் பேச்சுக்கள் இரண்டு. கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் "திருவாசகம்" பற்றித் திருவாசகமணி பேசிய மூன்றுமணி நேரப் பேச்சிற்குப் பொதுமக்களும். அறிஞர்களும், மேதைகளும் ஆக ஆயிரம் பேர் களுக்கு மேல் வந்திருந்தனர். அவர் விவே கானந்த சபையின் சார்பில் "அப்பர் அருளமு தம்" பற்றிப் பேசிய பேச்சு, மிக மிகச் சிறந்து விளங்கிற்று. நன்றி கூறிய செயலாளர் "இவர் 'திருவாசகமணி' மட்டுமின்றித் "திருமுறை மணி" யாகவும் உள்ளார்" என்று கூறியமை அதற்குச் சான்று. அந்நகரின் மாதர் சங்கப் பெண்கள் பள்ளியிலும், இந்துமாணவர் கல்லூ ரியிலும், முறையே திருவாசகமணி சொற் பொழிவுகள் ஆற்றினர்.

கொழும்பு நகர் இராமகிருஷ்ண மடத்தின் மண்டபத்தில், திருவாசகமணி அவர்களால் இரண்டு நாட்கள் நிகழ்த்தப்பெற்ற இரண்டு ஆங்கிலச் சொற்பொழிவுகளும், அவரது இலங் கைப் பயணமாகிய இமயமலையின் எவரெஸ்டு சிகரமாக விளங்கின. இவரது முதற் சொற் பொழிவு "சுவாமி விவேகானந்தர்" பற்றிய தாகும். அந்த 90 நிமிடப் பேச்சுக்கு இலங் கையின் அப்பீல் உயர் நீதிமன்ற நீதிபதி திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள், தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள்.

"திருவாசகமணியின் அழகான அற்புத மான ஆங்கிலப் பேச்சு முழுவதையும், சபை யினரைப் போலவே யானும் அனுபவித்தேன். சொல் ஆற்றலும், கருத்தாழமும், பக்தியுணர் வும், ஆற்றொழுக்கும் செறிந்த அருமையான இப்பேச்சு, நம் செவிக்கும் மனத்திற்கும் அறு சுவை நிறைந்ததோர் அரிய விருந்தாய் அமைந்திருந்தது" என்று கூட்டத் தலைவர் மனமாரப் பாராட்டினர்.

அதே மண்டபத்தில் இரண்டாம் நாள் "மகாத்மா காந்தி" என்னும் பொருள் பற்றித் திருவாசகமணி பாலசுப்பிரமணியம் அவர்கள், ஆங்கிலத்தில ஆற்றிய சொற்பொழிவிற்குத் தலைமை தாங்கியவர், ஒரு சிங்களப் பெரியார். இவர் காந்தியடிகளின் நண்பரும் பக்தரும் ஆவார். அத்துடன் இலங்கை நாட்டு மேல் சபையாகிய செனட்டின் முன்னாள் தலைவ ராகவும் இருந்தவர். அவர் பெயர் திரு. ரத்னயகா என்பதாகும். அவர் தமது முடிப் புரையில் பின் வருமாறு கூறிப் பாராட்டினர். "திருவாசகமணியின் ஒளிமிக்க சொல்லருவிப் பெருக்கில் ஒவ்வொரு சொல்லின் சுவையையும் யான் செவிமடுத்தேன். காந்தீயத்தின் உயிர் நாடி போன்ற பல தத்துவங்களையும் சொற் சுவை, பொருட்சுவை, இதயக்கனிவு, பிரமிக்கத் தகுந்த வார்த்தை வெள்ளப்பெருக்கு, விளக்கத் தெளிவு, உள்ள ஒளி, அத்துடன் அறிவுச் செறிவுடைய அழகிய நகைச்சுவை முதலிய ஆற்றல் மிக்க கூறுகளுடன் சொற்பொழிவாளர் 90 நிமிடங்கள் விளக்கிப் பேசிய பேச்சு, நம் ஆன்மாக்களுக்கெல்லாம் இதுவரை கிட்டாத அரியதொரு விருந்தாக அமைந்திருந்தது. அவரது பேச்சு மூலம் இந்திய இலங்கை நட்புறவு வலிவுற்றது. இந்தப் பேச்சாற்றல் மேம்பட்ட மேதை, உலகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து தம்முடைய உணர்ச்சி ஊற்றுகிய ஒப்பற்ற ஆங்கிலப் பேச்சுக்கள் மூலம் காந்தியடிகளின் உயர்ந்த கொள்கைகளை எங்கும் பரப்பி, உலகில் சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் நிலை நாட்டவேண்டு மென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இத் தகைய மேதையை இலங்கைக்கு வரவழைத் தவர்கட்கு, யான் நம் அனைவர் சார்பாகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்" என்று கூறிப் புகழ்ந்து போற்றினர்.

இறுதியாக 30-5-72 அன்று யாழ்ப் பாணத்தை அடுத்த சாவகச்சேரி என்னும் சிற்றூரிலுள்ள ஸ்ரீ மீனாட்சியம்மன் கோவிலில் இரவு 8 மணிக்குத் திருஞான சம்பந்தரைப் பற்றித் திருவாசகமணி சொற்பொழிவாற்றினர். அதற்கு முன்பு மேளவாத்தியத்துடன் வழி நெடுகப் பல இடங்களில் பூரண கும்ப மரி யாதையுடன் திருவாசகமணிக்கு மலர் மாலை கள் அணிவிக்கப் பெற்றன.

நல்லூர்ச் சிவசுப்பிரமணியர், விநாயகர், ஆறுமுக நாவலர், மீனாட்சியம்மன் முதலிய சந்நிதிகளில் திருவாசகமணி முறையே அருட் கவிகள் பாடி மகிழ்ந்தார். திருவருட் செல்வி சரளாதேவி ராஜசுந்தரம், திரு. ஸ்ரீகாந்தா. கொழும்புப் பிரமுகர் திரு. தங்கராஜா, முத்து சாமி ரெட்டியார், ஈழ்நாடு ஆசிரியர் திரு. அரன், முதலியோர் திருவாசகமணியின் இலங் கைப் பயண வெற்றிக்கு உறுதுணையாக இருந்தவர் ஆவார்கள்.

தவத்திரு. காசிவாசி
முத்துக்குமார சுவாமித்
தம்பிரான் சுவாமிகள்,
தலைவர், காசிமடம், திருப்பனந்தாள்.

★

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

★

வரலாறும் பண்புநலங்களும்

★

['திருப்பனந்தாள் காசி மடத்தின் தலைவர், தவத்திரு காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் அருமை பெருமைகள் அளவிடற்பாலன அல்ல. அவர்களின் அரும் பெறற் குண நலங்களை நினைக்குங்காலெல்லாம்,

"பத்திக் கடலே! குணக்குன்றே!
பாசப் பகையே! எம்உறவே!
முத்திக் கரசே! சிவானந்த
முதலே! ஞான மணிவிளக்கே!
சித்திப் பொருளே! அருள்நந்தித்
தேவே! நின்னைத் தொழும்அடியார்
புத்திக் கமுதே! யாவர்நினைப்
போல்வார்? அவரை அறியேமால்!"

எனத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், பிரபுலிங்கலீலையில் அருளிச் செய்துள்ள அழகிய இனிய செய்யுளே, நம்மனோர் நினைவுக்கு வருகின்றது. இச்செய்யுளுக்கு உரிய இலக்கியமாகச் சுவாமிகள் வாழ்ந்தருளினார்களா? அல்லது சுவாமிகளின் உயரிய பண்பு நலன்களை விளக்குவதற்குரிய மேற்கோளாக அமைவதற்கென்றே இவ்வினிய செய்யுள் இயற்றப் பெற்றதா? என்று வியப்புறும் நிலையில், சுவாமிகளின் அருமை பெருமைகள் தவநலஞ்சான்று சுடர்விட்டுத் திகழ்ந்து வந்தன. இத்தகைய நமது தவத்திரு தம்பிரான் சுவாமிகள் அவர்களைப் பற்றிய ஒரு சிறப்புக் கட்டுரையினை வரைந்துதவல் வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்குப் பெரிதும் அருள்கூர்ந்து இணங்கி, சுவாமிகளின் பிற்ரோன்றலாகத் தற்போது பீடத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் எழுதியுய்த்தருளிய இக்கட்டுரை, இங்கு மகிழ்ச்சியுடன் போற்றி வெளியிடப் பெறுகின்றது.

— ந. ரா. முருகவேள்]

வரலாறு :

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளதும், ஸ்ரீ ஆதிகுமரகுருபரர்க்கு முற்றூட்டாக வழங்கப்பட்டதுமாகிய அரியநாயகிபுரத்தில் 1899-ல் ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகள் தோன்றினூர்கள். அவர்கள் கல்லூரியில் பயின்று அரசாங்கப் பணியாற்றி உண்மைத்துறவில் விருப்பமுற்றுத் தருமையம்பதியை அடைந்தார்கள். அடியவர் திருக்கூட்டத்தில் ஒருவராகித் திருக்கடவூர், திருநள்ளாறு, திருவாரூர், இராஜன் கட்டளை, திருவையாறு, திருபுவனம் ஆகிய இடங்களில் கட்டளை விசாரணை செய்து 1944-ல் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தின் 20-வது பட்டத்தில் எழுந்தருளினூர்கள். ஸ்ரீ காசிமடத்தில் 28 ஆண்டுகள் நல்லாட்சி நடத்தி 1972-ல் ஸ்ரீவாரணாசியில் (18—5—72) பரிபூரணம் எய்தினூர்கள் எஜமான் சுவாமிகள் சேக்கிழாரது குலத்தில் (முதன்மையார் குலத்தில்) தோன்றியதற்கு ஏற்பச் சேக்கிழாரது திருநட்சத்திரத் தன்றே. வைகாசிப்பூசத்தில், பரிபூரணம் எய்தியது குறிப்பிடத்தக்கதாகும். சிவசிவ ஒளிவளர் விளக்கு, நெய் விளக்கு முதலிய பல தீபத் தொண்டுகளைச் செய்த எஜமான் சுவாமிகள் அவர்கள் நீரால் திருவிளக்கு எரித்த நமிநந்தியடிகள் முத்தியடைந்த வைகாசிப் பூசத்தில் பரிபூரணம் எய்தியதும் குறிப்பிடத்தக்க தொன்றுகும்.

பண்பு நலன்கள் :

துறவின் சிகரம், அன்பு கசியும் நெஞ்சம், அருள் வழங்கும் வாக்கு, பொருள் வழங்கும் திருக்கரம், எளிய வாழ்க்கை உயர்ந்த உள்ளம், எப்பொழுதும் இடையருது ஒலிக்கும் சிவாயநம என்னும் சிவ ஒலி, இன்னேரன்ன எத்துணையோ பண்புகள் யாவும் திரண்டு விளங்கிய உருவம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்களின் திருவுருவாகும். தேவாரத்தை இனிமையாகப் பாடியவர்கள். தாமும் பாடிப் பிறரையும் பாடச் செய்தவர்கள். எல்லார் வாக்கிலும் சிவாயநம என்ற ஒலியை எழுப்புவித்தவர்கள். குரு பக்திமிக்கவர்கள். தருமையாதீனம் கயிலைக்குருமணிக்குத் தமது திருக்கரத்தால் கனகாபிஷேகம் செய்தவர்கள். தருமையாதீனத்தில் நான்கு சந்நிதானங்களுக்கு முதல் திருஅபிஷேகம் செய்து வைத்தவர்கள். எஜமான் சுவாமிகள் யாவரையும் மரியாதைக்குரிய சொல்லாலேயே அழைப்பது வழக்கம். தக்கதும் இனியதும் ஆகிய சொல்லை அன்றித் தகாத சொல்லை ஒருபோதும் பேசியதே இல்லை.

பல்வகை அறக்கட்டளைகள் :

எஜமான் சுவாமிகள் அவர்கள் 533 அறக்கட்டளைகளை நிறுவி ஒரு கோடியே 8 லட்சம் ரூபாய் நிதி வழங்கியுள்ளார்கள்.

கல்வி வளர்ச்சிக்காக

பனசையில் செந்தமிழ்க் கல்லூரியும், உயர் தொடக்கப்பள்ளியும் ஸ்ரீவைகுண்டத்தில் கலைக் கல்லூரியும், உயர்நிலைப்பள்ளியும் கலைக்கோயிலும் மற்றும் திருலோக்கி, கொட்டையூர் ஆகிய இடங்களில் தொடக்கப்பள்ளிகளும் நிறுவியுள்ளார்கள். மாணவருக்கு உதவித் தொகையும் பரிசுகளும் வழங்க நிதி நிறுவியுள்ளார்கள்.

சைவ சித்தாந்தம் பரப்புவதற்காக

காசி, ஆக்ரா, அண்ணுமலைநகர் பல்கலைக் கழகங்களில் சிறப்புச் சொற்பொழிவு செய்ய நிதி அமைத்துள்ளார்கள். காசிப் பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்தம் பயிற்றுவிக்க ஓர் பேராசியரை நியமிக்கவும் நிதி வழங்கியுள்ளார்கள்.

திருமுறை வளர்ச்சிக்காக

மூவர் தேவாரப்பரிசு நிதி, பன்னிரு திருமுறைப் பதிப்புநிதி நிறுவியதோடு, பன்னிரு திருமுறை நூல்களையும் அச்சிட்டு வழங்கியுள்ளார்கள். அநேக தலங்களில் ஓதுவார்களை நியமித்து தேவாரப் பணி செய்யவும் விசேட நாட்களில் தேவார கோஷ்டி நடக்கவும் நிதி வழங்கியுள்ளார்கள். அனேக தலங்களில் திருப்பதிகக் கல்வெட்டுக்களையும், சிதம்பரத்தில் சிவகங்கைக் கரையில் திருவாசகப்பாடல் முழுவதுமான கல்வெட்டுக்களையும் பதிப்பித்துள்ளார்கள்.—சிவ புராணத்தைச் செப்பேடு செய்து சிறந்த சிவபூசகர்களுக்கு வழங்கியுள்ளார்கள்.

திருக்குறள் வளர்ச்சிக்காக

திருக்குறள் பதிப்பு நிதி ஒன்றை நிறுவித் திருக்குறளில் பல்வேறு விதமான பதிப்புக்களை வெளியிட்டுள்ளார்கள். அவற்றுள் திருக்குறள் உரைக்கொத்து குறிப்பிடத்தக்கதாகும். மதுரையில் பொற்றாமரைக்கரையில் 1330 குறட்பாக்களையும் கல்வெட்டுச் செய்து பதிப்பித்தார்கள்.

இறைபணிக்காக

திருமஞ்சன நிதி, சந்தனமெய்ப்பூச்சு நிதி, புனுகுசாத்துப்படி நிதி, நெய் விளக்கு நிதி, சிவராத்திரிக்கட்டளை நிதி, கோசம்வர்த்தன நிதி, முதலியன நிறுவியுள்ளார்கள். மற்றும் திருக்

கோவில் அர்ச்சகர்களுக்குப் படிக்காசு நிதியும் அன்னம்பாலிப்பு நிதியும் வகுத்துள்ளார்கள்.

பொது மக்களுக்காக

மகப்பேறு உதவி, மருத்துவ உதவி, தண்ணீர்ப்பந்தல் நிதி, நீராடும் படித்துறை முதலியனவும் ஆக்கியளித்துள்ளார்கள்.

அன்னதானத்திற்காக

ஸ்ரீ காசிமடத்தின் முதல்வராகிய ஸ்ரீ ஆதி குமரகுருபரசுவாமிகள் இடத்தில் கொண்டிருந்த அளவற்ற அன்பினுல் திருக்கேதாரம் முதல் கன்னியாகுமரி வரை 64 தலங்களில் குமர குருபரர் நினைவுநாள் அன்னம்பாலிப்பு நடைபெற நிதி வழங்கியுள்ளார்கள். மற்றும் அந்நாட்களில் அந்தணர், அருந்தவர், அடியார், பண்டாக்கள், தில்லை மூவாயிரவர், பட்டமரீர்கள், நம்பிமார்கள், ஏழைகள் எனப்பல்லோருக்குமாக அன்னம்பாலிப்பு நிதி ஏற்பட்டிருக்கிறது. மற்றும் கடலாட்டு விழாக்காலத்திலும், திருத்தலத்தின் விழாக்காலங்களிலும், நாயன்மார் திருநட்சத்திரங்களிலும் நடத்துதற்காகப் பல அன்னம் பாலிப்பு நிதிகள் நிறுவியுள்ளார்கள்.

திருப்பணிகள்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் முன் உள்ள பொய்கைக்குளத்தின் நடுவே வெள்ளை விநாயகர் ஆலயம் நூதனமாகக் கட்டுவித்துள்ளார்கள். ஸ்ரீவீரியம்மன் கோவில், திருவாப்பாடி கோயில், திருலோக்கி கோயில் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்வித்துள்ளார்கள். திருச்செந்தூரில் மடம் ஒன்று புதியதாக ஸ்தாபித்துள்ளார்கள். ஸ்ரீவாரணுசியில் உள்ள குமாரசாமி மடத்திலும், அதன் சார்பான இடங்களிலும் பல கட்டிடத் திருப்பணிகள் செய்துள்ளார்கள்.

எஜமான்சுவாமிகள் அவர்களிடம் நாம் பெற்ற நலன்கள் :

எஜமான்சுவாமிகள் அவர்கள் நம்மை 1961ல் இளவரசாகஏற்றுப் பயிற்றுவித்தார்கள். ஸ்ரீ எஜமான்சுவாமிகள் நம்மிடம் அடிக்கடி சொல்லுவார்கள்— " இடையருது சிவ சிந்தனையுடன் எளிமையாக வாழவேண்டும் ", துறவி ஆடம்பரமாக வாழ்க்கை வாழலாகாது. ஆரவாரப்பேச்சைக் குறைத்து பணியைப் பெருக்க வேண்டும். காலம் விலைமதிப்பற்ற பொருள். அதனுல் எதையும் அவ்வக்காலத்தில் தவருமல் முடித்துவிடவேண்டும் " இவை போலப் பற்பல அரிய உரைகளைச் சுவாமிகள் நமக்கு எடுத்துரைத்துள்ளார்கள்.

எஜமான்சுவாமிகளிடம் நாம் பழகிஅறிந்து கொண்ட குணங்களில் ஒன்று- யாவரிடமும் அன்பாகப் பேசுதல், அன்பாகப் பழகுதல் ஆனுல் அந்த அன்பு பயனற்ற பாசமாக மாறுவதில்லை. அதாவது எஜமான் சுவாமிகளிடம் அன்புகாணப்பட்டது பாசம் காணப்படவில்லை.

பரிபூரணம்

எஜமான்சுவாமிகள் அவர்கள் ஆதிகுமர குருபர முனிவர்பால் பேரன்பு பூண்டவர்கள். குமரகுருபரரைப் போலவே தாமும் கங்கையில் ஜலசமாதி ஆவதையே விரும்பினுர்கள்.

எஜமான்சுவாமிகள் அவர்களை இறுதி நாளில் காசியில் சென்று தரிசிக்க நாம் விருப்பம் கொண்டு அதற்கு உத்தரவாக வேண்டும் என்று கேட்டுக்கொண்டோம். ஆனுல் அவர்கள் கடமையே பெரிது என்று பல காலம் வற்புறுத்தி வந்ததற்கு ஏற்ப அதையே எடுத்தோதி, " காசி முதல் கன்னியாகுமரி வரை தருமங்கள் சரிவர நடைபெறவும் சொக்கலிங்க பூசை சரிவர நடைபெறவும் இது சமயம் தாம் பனசையிலிருக்க வேண்டியது அவசியம். எக்காரணத்தைக் கொண்டும் பனசையை விட்டு வெளியே வரவேண்டாம். இந்த விவரங்கள் தெரிந்துகொண்டதற்கு ஒரு தனியான விண்ணப்பம் எழுதி அனுப்பிக்கொள்ள வேண்டியது " என்று பணித்தார்கள். அங்ஙனமே அவர்களின் விருப்பம் போல நிறைவு செய்யப் பெற்றது.

எஜமான்சுவாமிகள் திருக்கேதாரம் யாத்திரையை ஆண்டு தோறும் செய்து வந்தவர்கள். மாந்தாதாவுக்காகக் கங்கைக்கரையில் கேதாரேசுவரர் காட்சி கொடுத்த இடமாகிய கேதாரக்கட்டமும் திருக்கோயிலும் காசிமடத்தின் பரிபாலனத்திற்கு உட்பட்டது. அத்திருக்கோயிலில் அறக்கட்டளை ஒன்றை எஜமான் சுவாமிகள் அவர்கள், தாம் பரிபூரணமாவதற்கு சில நாட்களுக்கு முன்பு ரூ. 25000 மூலதனம் வைத்து 533-ஆவது அறக்கட்டளையாக நிறுவினுர்கள். அந்த அறக்கட்டளையுடன் நிதியின் தொகை 108-லட்சமாக நிறைவு பெற்றது. சிவ மந்திரங்களை 108 முறை உச்சரித்து பூர்த்தி

செய்வது போல எஜமான்சுவாமிகள் அவர்களது அறக்கட்டளை 108 - லட்சமாக அமைந்தது குறிப்பிடத்தக்கதொன்றதாகும்.

தருமை ஆதீனம் 25 வது குருமகா சந்நிதானம் கயிலைக் குருமணி அவர்கள் பரிபூர்ணம் அடைந்த ஸ்தலத்திலேயே அவர்கள் பரிபூர்ணம் எய்திய ஆறுமாதத்தில், ஸ்ரீலஸ்ரீ எஜ சுவாமிகள் அவர்கள் பரிபூர்ணம் அடைந்து தனது குருபக்தியை உலகறிய மெய்ப்பித்தார்கள்.

சிவசிவ

தஞ்சை மாவட்டம், திரு. இடும்பாவனம் திரு. சற்குணநாத சுவாமி கோயிலில் இருந்து, ஷியூர் அரசினர் உயர் நிலைப்பள்ளிக் கட்டிட நிதிக்காக வழங்கப் பெற்ற ரூபா பத்தாயிரம் நிதியுதவியினை, தமிழக அரசின் வேளாண்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி அவர்கள், தலைமையாசிரியர் அவர்களிடம் அளித்தல் (26-4-72).

செய்திச் சுருக்கம்

தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் 9-வது மாநிலக் குழுக் கூட்டம் 11—5—72 அன்று சிதம்பரத்தில் நடைபெற்றது. பேரவைத் தலைவர் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமை வகித்தார்கள். தருமை ஆதீனகர்த்தர் திருவருள் திரு. சண்முகதேசிகஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், பேரூர் ஆதீனம் தலைவர் திருவருள் திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகள், கௌமார மடாயலத் தலைவர் திரு. சுந்தரசுவாமிகள், திருவண்ணுமலை ஈசான்ய மடம் திரு. வருள் திரு. கந்தசாமி சுவாமிகள், பேரவைத் துணைத்தலைவரும், இந்து சமய அறநிலையத் துறை ஆணையருமான திரு. கே. எஸ். நரசிம்மன், ஐ. ஏ. எஸ்., அவர்களும், சென்னைத் துணை ஆணையர் திரு. ஏ. வெங்கடாசலம் அவர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். தற்போது பேரவையில் தலைவராய் இருந்து வரும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களை மீண்டும் மூன்று ஆண்டுகளுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. மாநிலக்குழுக்கூட்டத்தில் பேரவையில், 1382-ஆம் பசலி வரவு செலவுத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டது. மும்முடிவரம் ஸ்ரீ பாலயோகி ஆசிரமத்திற்கு ரூ. 10, 000/- நன்கொடை கொடுப்பதென்றும், இந்து சமய வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்கள் ஆராய்ந்து முடிவெடுக்கப்பட்டன. அஞ்சல் வழிபோதனை நடத்த ஒரு திங்களிதழ் பேரவையிலிருந்து நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டன.

இந்த மாநாட்டையொட்டி 10-5-72, 11-5-27 இருதினங்களிலும் ஆறுமுகநாவலர் உயர்நிலைப்பள்ளியில் பேரவையுடன் இணைக்கப்பட்டுள்ள கிளைச் சங்கப் பிரதிநிதிகளின் கூட்டமும், இந்துத் தனியார் பள்ளித் தாளாளர்களின் கூட்டமும், இந்து இளைஞர் மன்றக் கூட்டமும், மாதர் சங்கக் கூட்டமும்,பேரவைத் தலைவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையில் நடைபெற்றன. ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இக்கூட்டங்களில் கலந்து கொண்டனர். பின் தங்கிய வகுப்பினர்களின் சார்பில் திரு. இளையபெருமாள் அவர்களும், மாதர் சங்கத்தின் சார்பில் திருமதி புலவர் பொன்னம்மாள் அவர்களும், திருமதி புலவர் சிவகாமி அம்மாள் அவர்களும், இளைஞர் மன்றச் சார்பில் திரு. சுகிசிவமும், பள்ளித் தாளாளர்கள் சார்பில் "குழந்தைகள் உலகம்" ஆசிரியர் திரு. ஏ. ஜி. சுப்பிரமணியம் அவர்களும், திரு. எஸ். கே. சுப்பிரமணியம் அவர்களும், கிளைச் சங்கங்கள் சர்ர்பில் நெல்லை, திரு. கே. சுப்பிரமணியம் அவர்களும் மற்றும் எல்லா மாவட்டப்பிரதிநிதிகளும் பேசினார்கள். பேரவை இது வரை ஆற்றி வந்திருக்கும் பணிகளையும்; இனி செய்ய உத்தேசித்துள்ள பணிகள் குறித்தும் தலைவர் அவர்கள் விளக்கினார்கள். சமய, சமுதாயக் கல்வி வளர்ச்சிக்காக எல்லா வகையிலும் பேரவை பாடுபடுமென்றும், தலைவர் அவர்கள் உறுதி கூறினார்கள். தென்னாற்காடு மாவட்டத் தெய்விகப் பேரவையின் சார்பிலும், பள்ளித் தாளாளர்களின் சார்பிலும், தலைவர் அவர்களுக்கும், துணைத் தலைவர் அவர்களுக்கும் எழுந்தருளியிருந்த ஏனைய மகா சந்திதானங்களுக்கும் வரவேற்பிதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன. தக்க முறையில் எல்லோருக்கும் பதிலளித்து மகா சந்நிதானங்கள் அவர்களால் அருளாசி வழங்கப்பட்டது.

11—5—72 வியாழக்கிழமை மாலை 6 மணி அளவில் ஆலய வழிப்பாட்டிற்கு பிறகு பேரவைக் கூட்டத்திற்கு எழுந்தருளியிருந்த மகா சந்நிதானங்களுக்குச் சிதம்பரம் நகரவாசிகள் சார்பில் சபாநாயகர் திருக்கோயில் ஆயிரங்கால் மண்டபத்தில் பிரம்மஸ்ரீ வி. எஸ். வைத்தியநாத தீட்சிதர் அவர்கள் தலைமையில் ஒரு வரவேற்புக் கூட்டம் நடத்தப்பட்டது. அறப்பணிச்செல்வர் டாக்டர் திரு. கே. அரங்கசாமி பிள்ளை அவர்கள் மகா சந்நிதானங்களை வரவேற்றுப் பேசினார். நகரமக்கள் சார்பில் மகாசந்நிதானங்களுக்கும், பொன்னாடை போர்த்திக் கவுரவிக்கப்பட்டது. ★

பொன் மானும், பொன் மீனும்

(காப்பிய ஆய்வு)

திரு. செ. வைத்தியலிங்கன், M.A., M.Litt.,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

இராமாயணத்துள் பொன்மானாக இரண்டகத்துடன் வருகிறான் மாரீசன்; சீதை இராமர் வாழ்க்கையிலே—அவர்கள் உள்ளத்திலே—ஆசைக்கனலை மூட்டிவிடுகிறான்; அது காரணமாக இராம காதையில் ஒரு திருப்பு மையத்தையே உண்டாக்கி விடுகிறான்.

பெரிய புராணத்துள் இறைவன் தரும் சோதனைகளுள் ஒரு கூறாகப் பொன்மீன் ஒன்று தோற்றமளிக்கிறது; அதிபத்தர் வாழ்க்கையிலே—அவருள்ளத்திலே—ஆசைக்கனலை மூட்ட முடியவில்லை, திருத்தொண்டரை மயக்க முடியாமல் பொன்மீனானது வந்தவழியே கடலில் திருப்பிவிடப்படுகிறது.

பொன் மான் :

தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கருந்தவமேற்கொண்டு பூழிவெங்கானம் நண்ணிப் புண்ணியத்துறைகளாடும் நோக்கத்துடன் இராமன் காட்டுக்கு அனுப்பப்படுகிறான். தசரதன் கட்டளையாகக் கைகேயி கூறினாலும் அதனை ஏற்றுத் தலைமேற்கொண்டு நடத்தவே இராமன் உளமார எண்ணுகிறான், தவிர்க்க முடியாத சூழலினால் சீதையும் அவனுடன் காடேகுகின்றாள். இலக்குவனும் அணுக்கத் தொண்டனாகப் பின் தொடர்கிறான். பர்ணசாலை வாழ்க்கையிலே அவர்கள் மூவரையும் விதியும் தொடர்கிறது.

தங்கை சூர்ப்பணகையால் ஆசைத்தீ மூட்டப்பெற்ற இராவணன் சீதையைக் கவர எண்ணுகிறான்; வனத்துள் தவமிருக்கும் மாரீசனது உதவியை நாடுகிறான். இராமனது பராற்றலை நன்குணர்ந்த மாரீசன்—பொறிபுலனடக்கிய நல்லோன்—இராவணனிடம் எவ்வளவோ அறிவுரை கூறுகிறான்; பயனில்லாமற்போகவே அக்கொடியோனுக்குடந்தையாகும் கைக்கருவியாகத் தன்னை ஆக்கிக் கொள்கிறான். அந்நிலையில் மாரீசன் மாயமானாகப்—பொன்மானாக—உருவெடுத்து வந்து சீதையினுள்ளத்திலே மருட்கையையும் ஆசையையும் உண்டாக்கிவிடுகிறான். மாணிக்கம் போன்ற வண்ணமுடைய வலிய காதையும் காலையுமுடைய பொன்மானின் கொள்ளை அழகொளியில் உள்ளத்தைப் பறிகொடுக்கிறாள். மான்விழியாள் சீதை, அந்தப் பரபரப்புடன் இராமனிடம் மானைப்பற்றிச் சொல்லிக் கெஞ்சித் தொழுது நிற்கிறாள். இதனைக் கம்பநாட்டாழ்வார்,

> ' ஆணிப்பொனி னாகியதாய் கதிராற்
> சேணிற்சுடர் கின்றது திண்செவிகால்
> மாணிக்க மயத்தொரு மானுளதால்
> காணத்தகு மென்றனள் கைதொழுவாள் '
>
> (மாரீசன் வதைப் படலம் 219)

எனச் சொற்சித்திரம் தீட்டிக் காட்டுகின்றார். பிரமனுக்குத் தந்தையாகிய திருமாலே இராமனாக அவதாரங்கொண்டிருந்தும், ஆராய்ச்சி சிறிதுமின்றி மனைவி பேச்சினைக் கேட்டு மானைக் காண ஆசைப்படுகிறார். இதனைக் கம்பர்,

> ' இம்மானிந் நிலத்தி லில்லையெனா
> எம்மானி தெனச்சிறி தெண்ணல் செயான்
> செம்மானவள் சொற்கொடு தேமலரோன்
> அம்மானும் அருத்திய னாயினனால் '
>
> (மாரீசன் வதைப் படலம் 220)

எனக் கூறி நிற்கிறார். பொக்கமிகு பொன்மானெழிலில் மயங்கிய இராமன் தன் இளவல் இலக்குவனிடம், 'மானின் வடிவை உற்று நோக்கிய மகளிர் மைந்தர்களில் ஆசை மிகுதி கொள்ளாதவர் எவருமிருத்தல் இயலாது. ஊர்வன பறப்பன முதலாகிய எவ்வுயிர்களும் இம்மானைக் கண்ட அளவிலே ஒளிவிளக்கை நாடும் விட்டில்போல மயங்கி வீழ்வன' என விளம்பி நிற்கிறான். விளக்கினைப் பழமென மயங்கிவீழும் விட்டில்போலச் சீதையும் தானும் பொன்மான் கவர்ச்சியில் வீழவிருக்கும் குறிப்பினை இராமன் தன் வாக்கினாலேயே புலப்படுத்திவிடுதல் சிந்தித்தற்குரியது. இத்தகைய அருமைச் சித்திரத்தைக் கம்பர்,

'வரிசிலை மறைவலோனே!
மான்இதன் வடிவை யுற்ற
அரிவையர் மைந்தர் யாரே
ஆதரங் கூர்கி லாதார்?
உருகிய மனத்த வாகி
ஊர்வன பறப்ப யாவும்
விரிசுடர் விளக்கங் கண்ட
விட்டில்போல் வீழ்வ காணாய்'

(மாரீசன் வதைப் படலம் 229)

என அழகுற வரைந்து காட்டுகிறார்.

வைகுண்ட நாயகனாகிய திருமாலும், நாயகியாகிய திருமகளும் முறையே இராமனாகவும் சீதையாகவும் மண்ணுலகில் வந்தும், தாம் மேற்கொண்ட மானுட அவதாரத்திற்கேற்ப நன்கு நாடகமாடுகின்றனர். தவநெறிக்காகவே காட்டிற்கு வந்தவர்கள் ஆசை காரணமாகப் புறத்தோற்றத்தில் மயங்கிக் கடமையில் பிறழ்கின்றனர்! பேரல்லலுக்காளாகின்றனர். கம்பன் குறிப்பிடுவதுபோல ஒருவாற்றான் 'மானுடம்' வென்றுவிடுகிறது!

பொன் மீன் :

பொன்னி நாடென்னும் கற்பகப் பூங்கொடியிலே நன்மை சான்ற மலர்போல் விளங்கியது நாகப்பட்டினம். அந்நகரிலே பரதவர் குல திலகமாய்த் தோன்றியவர் அதிபத்தர். கண்ணப்பநாயனார் வேடுவராயிருந்தும் அன்பு பிழம்பாய்த் திரிந்தவர்; சிவனுக்குவப்பெனப் பன்றியிறைச்சியைப் பக்குவப்படுத்தி வாயிலிட்டதுக்கிச் சுவையாய்ப் படையலிட்டவர்; இறைவனுக்குத் தாம் புலாலுணவைப் படைப்பது தவறென்று சிறிதும் உணராதவர், அவரைப்போலவே அதிபத்த நாயனாரும் சிவனுக்குவப்பென மீனைப் படையலாக்குகிறார்; அலைகடலைச் சிவனென்ற அருட்கடலாகவே பாவித்துத் தாம் பிடிக்கும் மீன் குவியலில் தலையாய மீனை நாளும் அக்கடலில் படையலென விட்டுவிடுகிறார். தாம் புரிவது கொலைத் தொழிலென்றோ, மீனை இறைவனுக்குப் படையலாக்குவது தகாததென்றோ சிறிதும் நாயனார் எண்ணிப் பார்க்கவில்லை. தாம் ஆற்றுகின்ற கடமையையே சிவதொண்டெனக் கைக்கொண்டு அதனில் ஊன்றி நிற்கிறார்.

நாயனாருக்கு வாழ்க்கையில் சோதனை தலையெடுக்கிறது. அஃதாவது, இறைவன் தனக்கே உரிய திருவிளையாடலை—பத்தியுறைப் பினைக்கொண்ட அடியார்களிடம் கடுஞ் சோதனை புரிதலை—அதிபத்தரிடம் மேற்கொள்கிறான். கடல்படு செல்வமாகிய மீன்வளம் நாளும் நாளும் குறைந்து வருகிறது. பிறகு, ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு மீனே வலையில் கிடைத்து வருகிறது. அம்மீனையும் தமக்கெனக்கொள்ளாமல் மான்மறிக் கரத்தவனாகிய சிவனுக்கென்றே கடலில் நாயனார் வழங்கிவிடுகிறார். மீன் வளத்தால் மகிழ்ந்த வலைஞர் சேரியே வாடி நிற்கிறது. மீன்வளமில்லாக் காரணத்தால் நாயனாரும் அவர் சுற்றத்தினரும் வறுமைக்கும் பட்டினிக்கும் ஆளாகி உடல் சோர்வுறுகின்றனர். பெருஞ் செல்வமிழந்த நிலையிலும் தாம் புரிந்து வருகின்ற கடவுட் கடமையில்—சிவத்திருத் தொண்டில்—பிறழாத வைரவுள்ளம் கொள்கின்றார் நாயனார். எனவே, அவருக்கு உள்ளத்தில் வருத்தமில்லை.

தாங்கருஞ் சோதனைக்குரிய நாளிலே வழக்கமாகக் கடலில் கிடைக்கும் ஒரு மீனும் கிடைக்கவில்லை. இறைவன் கழலுக்கெனவே நாளும் படைக்கின்ற ஒரு மீன் படையலுக்கும் சோதனையோ என எண்ணி நிற்கிறார் நாயனார். நேரங்கழித்த நேரத்திலே, மதித்தற்கரிய அழகுப் பொன்மீன் வலையில் அகப்படுகிறது. அஃதாவது, நவமணிகளால் உறுப்பமைந்த பொன்மீன்—உலகெங்கும் காணக் கிடைக்காத தூய பொன்வண்ணமீன்—இவ்வுலகமே, ஏன், எல்லாவுலகங்களுமே விலையெனக் கொள்ளுதற்குரிய அற்புதமீன்—நாயனாரின் சுற்றத்தினரால் பிடிக்கப்படுகிறது. இதனைத் தெய்வப்புலவர் சேக்கிழார்,

'ஆன நாளொன்றி லவ்வொரு
மீனும் அங்கொழித்துத்
தூநி றப்பசுங் கனகநற்
சுடர்நவ மணியான்
மீனு றுப்புற வமைத்துல
கடங்கலும் விலையாம்
பான்மை யற்புதப் படியதொன்
றிடுவலைப் படுத்தார்'.

(அதிபத்த நாயனார் புராணம்—15)

எனக் கூறிக் காட்டுகிறார். பிடித்த மீனை அதிபத்தரின் பார்வைக்குக் கொணர்கின்றனர் சுற்றத்தினர், கடமையிலே உயிரை வைத்திருக்கும் நாயனார் அதனைக் கண்டு தந்நலத்துடன் ஆசைப்பட்டாரில்லை. காலந் தாழ்த்தாமல் 'இது என்னை யாளுடையவர்க்காகும், சென்று பொற்கழல் சேர்க' எனக் கடலலையினூடே விட்டுக் களிக்கிறார். வினைமுடித்தன்ன இனியராம் அவரிடம் பொருட்பற்று அப்பொழுதும் சிறிதும் நெருங்க வாய்ப்பில்லை. அஃதாவது, பொருளாசையை நடுவணாகக் கொண்டு சுழலும் இப்பூவுலகிலே நாயனாருள்ளம் வறுமையிலும் பொருட்பற்றின்றிப் பொன்வண்ணக் கடவுள் நினைப்புடன் பொலிவுறுகின்றது. இதனையுணர்ந்த சேக்கிழார் அவரைப் போற்றுதலை,

'அகில லோகமும் பொருள்முதற்
றாமெனு மளவில்
புகலு மப்பெரும் பற்றினைப்
புரையற வெறிந்த
இகலின் மெய்த்திருத் தொண்டர்முன்
னிறைவர்தாம் விடைமேல்
முகில்வி சும்பிடை யணைந்தனர்'

(அதிபத்த நாயனார் புராணம்—18)

எனும் செய்யுளால் தெளியலாம்.

ஆய்வுரை:

விண்ணகத்துத் திருமாலும் திருமகளும் மண்ணகத்தில் அவதாரங்களாக உலவுகின்றனர்; அந்த இராமனையும் சீதையையும் ஆசைவிட்டபாடில்லை. அவர்களுடன் சார்ந்த ஆதிசேடனாகிய இலக்குவனையும் ஊழ்வினை 'பொன்மான்' உருவத்தில் எதிர்ப்படுகிறது. இக்கருத்தினைக் கம்பர்,

'அணையவள் கருத்தை யுன்னா அஞ்சனக்
குன்ற மன்னான்
புனையிழை காட்ட தென்று போயினான்
பொருுத சிந்தைக்
கனைகழற் றம்பி பின்பு சென்றனன்
கடக்க வொண்ணா
வினையென வந்து நின்ற மானெதிர் விழித்த
தன்றே'

(மாரீசன் வதைப் படலம்—226)

எனச் சொல்லிக் காட்டுகிறார்.

மண்ணுலகத்தில் கடலலைகளோடு அலை மோதிய வாழ்வு நடாத்துகின்ற பரதவர் குலத்திலே தோன்றுகிறார் அதிபத்தர். மீன் கொலைத் தொழில் புரிகின்ற நிலையிலும் கடவுள் நினைப்பும் திருத்தொண்டின் உறைப்பும் கொண்டு திகழ்கிறார். அவரையோ அவர் சுற்றத்தினரையோ பொருட்பற்று வீழ்த்த முடியவில்லை. உளம் புரிந்த சுற்றத்தினர் காரணமாகவும் நாயனார் இறைவனருளுக்கு ஏற்புடையவராகின்றார் எனலாம்.

அரக்கர்களின் திட்டம் தெய்வநலச் சீதையிடத்தும் இராமனிடத்தும் எவ்வாறோ செல்லுபடியாததலைப் 'பொன்மான்' தோற்றம் புலப்படுத்துகிறது.

இறைவனின் திட்டம் மக்கட் பிறவியிடம்—செல்லுபடியாகாத நிலையைப் 'பொன்மீன்' தோற்றம் புலப்படுத்துகிறது.

இவையனைத்துமே இறைவனுடும் நாடக மேடைச் செய்திகளே; என்றாலும், இவற்றால் அறியலாம் மெய்ப்பொருளியல்—சமயஞான—உண்மைகள், வளரும் சமுதாயத்திற்குத் தேவைகளேயெனலாம். ★

செழுமாமணிகள் சேரும் திருக்குடந்தை

திரு. என். எஸ். தாத்தாசாரியார், தஞ்சை.

திருமால் நெறியின் தலை சிறந்த பெருஞ் சான்றோராகிய நம்மாழ்வார், இவ்வுலகில் அவதரித்த நாள் தொடங்கி, ஆழ்வார் திருநகரியில் தேவபிரான் திருமுற்றத்துத் திருப்புளிய மரத்தின் கீழே பதுமாதனமிட்டு மோன நிலை எய்தி மூவுலகம் வாழத் தம் செம்பவளத் திருவாயால் மதுரகவியாழ்வாருக்குத் தேன்மதுரத் திருவாய் மொழியை அருளிச் செய்த அளவும், ஒரு திருமால் கோயிலுக்கும், ஒரு திவ்விய தேசத்திற்கும் தாம் எழுந்தருளிச் செல்லாமல், தாம் இருந்த இடத்திற்கே அவ்வத்தலத்து எம்பெருமான்களும் பாசுரப் பரிசுபெற விரும்பித் திருப்புளியாழ்வார் நீழற்கண் ஒடுங்கி எழுந்தருளா நிற்க, அவர்களின் திரு மேனிகளையும், அவர்கள் கோயில் கொண்ட தலங்களையும், அகக் கண்ணுலும் புறக் கண்ணுலும் ஆரத் தரிசித்து அநுபவித்து, அவ்வனுபவ மேலீட்டால் அமுத வெள்ளம் அனைய பாசுரங்களைத் திருவாய் மலர்ந்தருளினர் என்பது ஐதிகம்.

அம்முறையில், "தீரா வினைகள் தீர என்னை யாண்டாய் திருக்குடந்தை யூரா" என்று தாமிருக்கும் இடத்திற்கே பெருமானை அழைத்துத் தரிசித்துஅனுபவித்த நம்மாழ்வார்பெருந்தகை, "செழுமாமணிகள் சேரும் திருக்குடந்தை" என்றும், "சீரார் செந்நெல் கவரி வீசும் திருக்குடந்தை" என்றும் புகழ்ந்து பாடப்பெறும் சிறப்புற்று விளங்குவது, கும்பகோணம் என வழங்கும் திருக்குடந்தையாகும்.

திருமணங் கொல்லை என்ற இடத்தில் ஓர் அரசமரத்தடியில், வாள் வில் ஏந்தி நின்ற திருமங்கை மன்னன், அழகிய மணவாளன் பால் நாராயண மந்திரம் உபதேசம் பெற்றதும், உடனேயே அவர் திருமங்கை ஆழ்வார் என்னும் சிறப்புற்று, "சூழ்புனல் குடந்தையே தொழுமின் ! நற்பொருள் காண்மின் ! பாடி நீர் உய்மின்" என்று, உலகமக்கள் உய்யப் பாசுரம் பாடி'அருளப் பெற்றதும் ஆகிய தலம், திருக்குடந்தையே யாகும்.

எத்தலத்திலும் எளிதில் காணமுடியாத சிறப்பாய், இத்தலத்தில் பிரமதேவருக்கெனவும் ஒரு தனிக்கோயில் இருக்கின்றது. மங்களாம்பிகையுடன் கூடிய கும்பேசுவரப் பெருமானுக்குத் திருவிழா நடத்தி வைத்து, பிரமதேவர் இங்கேயே தங்கி அமர்ந்து விட்டார் என்பது வரலாறு.

திருக்குடந்தை, பழமையும் பெருமையும் வாய்ந்த சிறந்த நகரம். சைவம் வைணவம் ஆகிய இரு சமயங்களுக்கும் உரிய பொதுவான சிறந்த பெருந் தலம். இத்தலத்தைச் சுற்றிப் புகழ்மிக்க ஒன்பது சிவத்தலங்களும், ஒன்பது வைணவத் தலங்களும் அமைந்து விளங்க, ஒரு நவரத்தின மாலையின் நடுவண் விளங்கும் நாயக மாமணி போல, இத்திருக்குடந்தைப் பெருந் தலம் சிறந்து விளங்குகின்றது. திருவிண்ணகரம், திருநறையூர், திருச்சேறை, நந்திபுர விண்ணகரம், கூடலூர், கவித்தலம், புள்ளம் பூதங்குடி, ஆதனூர், திருவெள்ளியங்குடி என்னும் ஒன்பது வைணவத் திவ்விய தேசங்கள் திருக்குடந்தையைச் சூழ்ந்துள்ளன. இவ்வாறே திருப்பட்டீசுவரம், திருவலஞ்சுழி, திருவாவடுதுறை, திருவாப்பாடி திருசேய்ஞ்ஞலூர், திருஇன்னம்பர் என்னும் ஒன்பது சிவத்தலங்களும் இதற்கு அணித்தாக அமைந்திருக்கின்றன. இரண்டாம் இராசராச சோழன் (கி. பி. 1146—1173) எடுப்பித்ததும், பெரிய புராண வரலாறுகள் அழகிய சிற்பங்களாகச் செதுக்கப் பெற்றுள்ளதும் ஆகிய தாராசுரம் என்னும் கோயில், இதற்கு மிக அணித்தாகத் தென் மேற்குத் திசையில் உள்ளது.

இந்நகரின் பெருஞ் சிறப்புக்கு இரண்டு இராசகோபுரங்கள் போலச் சீநிவாசப் பெருமாள் எழுந்தருளியுள்ள ஒப்பிலியப்பன் கோயிலும், முருகப் பெருமான் எழுந்தருளியுள்ள திருவேரகம் என்னும் சுவாமி மலையும் விளங்குகின்றன. தொண்டரடிப் பொடியாழ்வார் அவதரித்த திருமண்டங்குடி என்னும் தலம் இதற்கு அருகிலேயேயுள்ளது. பக்திசாரர் என்னும் திருமழிசை யாழ்வார், இத்தலத்தில் தமது கடைசிக் காலத்தில் தங்கி அமர்ந்து யோக சமாதி கொண்டருளினர் என்பது வரலாறு.

இத்தலத்திலேயே, பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் மகாமகம் என்னும் பெருவிழா, தொன்றுதொட்டு நடைபெற்று வருகின்றது. மகாமகக் குளம் இவ்வூரின் நடுவே அழகுற அமைந்து விளங்குகிறது. ஆசார்ய

இரத்தினங்களாய் விளங்கி வருகின்ற திருக்குடந்தைதேசிகர், திருக்குடந்தை அழகிய சிங்கர், ஸ்ரீமத் ஆண்டவன் முதலிய ஸ்ரீவைணவப் பெரியோர்களின் அவதாரத்தலமும் இதுவேயாகும். பூதத்தாழ்வார் நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் ஆண்டாள் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் முதலிய வைணவப் பெரியோர்களும்; திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் அருணகிரிநாதர் முதலிய சைவசமய ஆசிரியர்களும் இத்தலத்தைப் புகழ்ந்து பாடிப் போற்றியுள்ளனர்.

இந்நகரத்திற்குள்ளாகவே பல சிறந்த சிவாலயங்களும், வைணவ ஆலயங்களும் அமைந்திருக்கின்றன. இங்குள்ள சாரங்கபாணி கோயில் மிகவும் புகழ் பெற்றது. ஆழ்வார்கள் எழுவர் இக்கோயிலைப் புகழ்ந்து பாடித்துதித்துள்ளனர். மற்றும் இங்குள்ள இராமசாமி கோயிலும், சக்கரபாணிப் பெருமாள் கோயிலும், வரதராசப் பெருமாள் கோயிலும் மிக்க சிறப்பு வாய்ந்தவை. பெரிய கோயிலெனப்படும் ஆராவமுதன் சந்நிதியினது பெருமைக்கு ஓர் எல்லையேயில்லை. ஆராவமுதப் பெருமாள் திருமழிசையாழ்வாருக்குச் சிலை வடிவில் இருந்தே பாதி எழுந்து உத்தான சயனத்தில் பள்ளி கொண்டுள்ளார். நம்மாழ்வாருக்குப் பின் சில காலம் மறைந்திருந்த நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களை நாதமுனிகள் மூலமாக உலகுக்கு வெளிப்படுத்தி, அதனுல் ஆராவமுதாழ்வார் எனத் தாம் பெயர் பெற்று, திருமழிசையாழ்வாரைத் திருமழிசைப்பிரான் என வழங்கும்படி செய்தருளிய பெருமாள் இவரே. தஞ்சையை ஆண்ட அச்சுதப்ப நாயக்கர் (1572—1614), இரகுநாத நாயக்கர் (1614—1640) என்பவர்களாற் கட்டப்பெற்ற இராமசாமி கோயிலில், இராமாயண வரலாற்றையொட்டிய அழகிய சிற்பங்கள் பல அமைக்கப்பட்டுள்ளன.

திருக்குடந்தையின்கண் உள்ள சிவாலயங்கள் பல. அவற்றுள் கும்பேசுவரர் கோயில், நாகேசுவரர் கோயில் (குடந்தைக் கீழ்க்கோட்டம்), காரோணசர் கோயில் (காசிவிசுவநாதர் கோயில்), சோமேசர் கோயில், நாளிகேரேசர் கோயில், யக்ஞோபவீதேசர் கோயில், பாணபுரேசர் கோயில், மாலதிவனேசர் கோயில், கயிலாயநாதர் கோயில் என்பன, மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை; நேரிற் கண்டு களித்து வழிபடத் தக்கவை.

இத்தகைய பற்பல பெருஞ்சிறப்புக்கள் வாய்ந்த திருக்குடந்தைப் பெருந்தலத்தினையும் அதற்கு அருகிலுள்ள திவ்விய தேசங்களையும் நாம் முறையே தரிசித்துப் பணிந்து இம்மை மறுமை நலங்கள் யாவும் பெற்று உய்ய முயலுவோமாக!



திருவாசகமணி கே. எம். பாலசுபரமணியம் அவர்கள் 25—5—72 அன்று 'மணிவாசகர் மணிவார்த்தை' எனும் பொருள்பற்றி, கொழும்புத் தமிழ்ச் சங்க ஆதரவில், கொழும்பு, சரசுவதி மண்டபத்தில் பேசியபொழுது பிடித்த படம். தலைவர்: சங்கத் தலைவர் திரு. கு. பாலசிங். வலதுபுறம்: திருவருட்செல்வி சரசுவாதேவி. பொதுச் செயலாளர்: சரவணமுத்து. (31—5—72)

நாதமுனிகளும், ஆளவந்தாரும்

திருவரங்கம், சிரோமணி
திரு. எம். எஸ். இராசகோபாலாச்சாரியார்.

வைணவ சமயப் பெருஞ் சான்றோர்கள் ஆழ்வார்கள் என்றும், ஆசாரியர் என்றும் இரு வகைப்படுவர். ஆசாரியர்களின் வரிசையில் முதல்வர், நாதமுனிகள் என்பவரே ஆவர். இவர் சிதம்பரத்திற்கு அருகேயுள்ள வீரநாராயண புரம் என்னும் காட்டுமன்னார் கோயிலில் அவ தரித்தவர்: நாதமுனிகளின் நற்பெருந் தொண்டி னாலேயே, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் நாடெங்கும் பரவித் தழைத்து நலமுற வளர்வ தாயிற்று. வட மொழி வேதத்திற்கு வேத வியாசர் போல, தமிழ்மறைகளாகிய திவ்வியப் பிரபந்தங்களுக்கு நாதமுனிகள் செய்தருளிய நல்ல பெருந்தொண்டு, எல்லையில்லாததாகும்.

நாதமுனிகளின் புதல்வராகிய ஈசுவர பட்டாழ்வார்க்கு மைந்தராகத் தோன்றியவரே, ஆளவந்தார் ஆவர். இவருக்கு யமுனைத் துறை வர் எனவும் ஒரு பெயர் உண்டு. இவர், மணக் கால் நம்பிகள் பக்கல், பகவத் கீதையின் பதி னெட்டு அத்தியாயப் பொருளும் நுண்ணிதின் ஆய்ந்து முறையே கேட்டுணர்ந்து தெளிந் தவர்.

"அண்டர்கோன் அணியரங்கன்
என் அமுதினைக்
கண்ட கண்கள் மற்று
ஒன்றினைக் காணவே"

என்றபடி, அரங்கநாதன்பால் அளவற்ற அன்பும் ஈடுபாடும் கொண்டு, திருவரங்கநாதனுக்கு ஆட் செய்வதற்காகவே துறவு நெறிபூண்டு, தென் திருவரங்கமே பதியாகக் கொண்டு வாழ்ந் தருளி வந்தவர். "ஆம் முதல்வன் இவன்" என்று ஓர்ந்தறிந்துணர்ந்து, தமக்குப் பின்னர் எம்பெருமானார் என்னும் இராமாநுசரை, ஸ்ரீ வைஷ்ணவ சமய தரிசனத்திற்குத் தலைவராக அமர்ந்து அதனைப் பாதுகாத்துப் பரப்பியருளும் படி புரிந்தவர், ஆளவந்தாரேயாவார். "ஆளவந் தாரோடு யான் கூடியிருந்து குளிரப் பெற்றிருப் பேனாயின், பரம பதத்திற்கே படிகட்டியிருப் பேனே" என்று, தன் அன்பும் ஆராமையும் தோன்ற, இராமாநுசர் பலகாலும் பணித்தருள் வாராம். இதனால் ஆளவந்தாரின் அருமை பெருமைகளை, நாம் அனைவரும் இனிதறியலாம்.

தேவாலயங்களில் இறைவனுடைய திரு வுருவங்களைத் திருப்பிரதிட்டை செய்து வழிபடு வதும், திருவிழாக்களை நடத்தி மன நிறைவு பெறுவதும். நம் நாட்டிற்கே உரிய தொன்மை யானதோர் நெறியாகும். இதற்கு ஆதாரங்கள் பலவற்றை வடமொழி மறைகளில் ஆங்காங்குக் காணலாம். ஆயினும் இப்பொழுது இங்கு ஓதப் படும் இந்த மறைகளின் முன் பகுதியில் வேள்வி கள் நடத்தப்பெறும் முறைகளும், பின் பகுதி யான உபநிடதங்களிலே இறைவனைத் தியா னிக்கும் முறைகளுமே பெரும்பாலும் தெளிவாக வும் விரிவாகவும் விளக்கப்பட்டுள்ளன.

சுவேதத்வீபத்தில் உள்ளோர் ஓதும் மூல வேதத்தில், ஆலய வழிபாட்டு முறைகளும் அர்ச்சாமூர்த்திகளின் திருப்பிரதிட்டை முதலி யனவும், விரிவாகக் கூறப்பட்டுள்ளன என்பர் பெரியோர். இதனை இறைவனே அடியார் மீதுள்ள கரைபுரண்ட கருணை வெள்ளத்தால் நம் முன்னோர்க்குத் தானே உபதேசம் செய் தருளினன். இதையே பாஞ்சராத்திர ஆகமம் என்பர்.

இறைவன் வழிபாட்டு முறைகள் ஆறில், இதனைத் தவிர மற்ற ஐந்தும் தெளிவாகக் கூறப் படாமையால், இருள் நிறைந்த இரவு போல்

உள்ளதாக உணர்த்துவதற்கே இந்த ஆகமத்தைப் பாஞ்சாத்திரம் எனக் கூறலாயினர். வேதத்தைப் பிரமாணமாக (மூலாதாரமாக) ஏற்றுக் கொண்டுள்ள சங்கரரும், அவருடைய வழியில் வந்த சுரேசுவரர் போன்றவர்களும், பாஞ்சாத்திர ஆகமத்தில் உள்ள வழிபாட்டு முறைகளையும், ஒரு நாளை ஐந்தாக வகுத்து அவ்வக் காலத்தில் அந்த அந்த நித்திய கருமங்களைச் செய்யும் மரபினையும் அப்படியே ஒத்துக் கொள்வதாகத் தம் தம் நூல்களில் ஐயம் திரிபிற்கிடமின்றி எழுதி வைத்துள்ளனர்.

வேதவியாச பகவானும், மகாபாரதத்தில், இந்த பாஞ்சராத்திர ஆகமத்தின் பெருமையைப் பரக்க விவரித்துள்ளார். இவரே தமது பிரம்ம சூத்திரங்களிலும் இதன் மகத்துவத்தைத் தாபித்துள்ளதும் தெளிவு.

ஆயினும் சிலர் இந்த ஆகமத்தை மூலப் பிரமாணமாக ஒத்துக் கொள்ளவில்லை. சங்கரரும் பிரம்ம சூத்திரங்களுக்கு உரையிடும் போது, இதில் சில குறைகள் இருப்பதாக எழுதியுள்ளார். இவை அனைத்துக்கும் பதில் கூறி, மாசற்ற இதனுடைய மகிமையை, ஸ்ரீ ஆளவந்தார் தமது 'ஆகமப் பிராமாணியம்' என்னும் இந்த நூலில் விரிவாகக் காட்டியுள்ளார். இவர் ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சோழவள நாட்டில் தோன்றியவர். இவருடைய திருப்பாட்டனுரான ஸ்ரீமந் நாதமுனிகள், இந்த ஆகமத்தை உலகில் பரப்பத் திருவுள்ளம் கொண்டார். நேர்மையுடன் ஈட்டிய பொருள்களைக் கொண்டு, நெறி பிறழாது நடத்த வேண்டிய வைதிகப் பொருள்களைச் செவ்வனே செய்வதற்கு, இந்தக் கலிகாலத்தில் மாந்தரின் தகுதியின்மையை, அவர் உணர்ந்ததுவே இதற்குக் காரணமாகும்.

இந்த நாதமுனிகளே அரும் தவமியற்றி ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் ஆகிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை நம்மாழ்வாரிடத்தே ஓதி, நாடெங்கணும் மறை ஓது விழா நடத்தித் தமிழ் மறையின் மணத்தைப் பரப்பினுர் என்று வரலாற்றில் காணலாம். தமர் உகந்து தமக்கென அளித்த திருவுருவங்களில், இறைவன் நித்திய சாந்நித்தியம் செய்து அடியவர்களுக்குக் குறைவின்றி அருள்பாலிக்கும் அர்ச்சாவதாரங்களில் ஆழ்வார்கள் மண்டிக் கிடந்ததையும், நாதமுனிகள் கண்டுகொண்டது, இன்னெரு காரணமாகும். இறை உணர்வை இனிதாக அளித்து அதனை மேன்மேலும் வளர்க்கவல்ல பாஞ்ராத்திர ஆகம முறைப்படி ஆலயங்களைச்சீர்படுத்தியும், இதை ஆட்சேபித்தவர்களின் வாதங்களுக்குத் தக்க பதில் கூறியும், பாஞ்சராத்திர ஆகமத்தை நிலை நாட்டிய பெருமை நாதமுனிகளுக்கு உரியது. அவருடைய ஆணையைச் சிரமேற்கொண்டு, அவர் திருப்பேரனுரான ஆளவந்தார், பிற்காலத்தில் இது மங்காமலிருப்பதன் பொருட்டுக் கல்வெட்டாக இருக்கவேண்டுமென்று எண்ணியே, 'ஆகமப் பிராமாணியம்'' என்னும் இந்த அரிய நூலை எழுதி உதவியுள்ளார்.

திருமால் வழிபாட்டுடன் கூடிய விசிட்டாத்வைத வேதாந்த சித்தாந்தத்தைத் தழைக்கச் செய்த பெருமையும், இந்த இரண்டு ஆசார்யர்களுக்கும் உண்டு. நாதமுனிகள் பிரம்ம சூத்திரத்தின் பொருளை அறிய உதவியாக இருக்கும் பொருட்டு, நியாய தத்துவம் என்றும், யோகாப்பியாசம் செய்வார்க்கு உதவி யோக ரகசியம் என்றும் இரு நூல்களை எழுதி வெளியிட்டார். இப்படி இவர் தொடங்கிய பணியைத் தொடர்ந்து, இவருடைய திருப்பேரனுரான ஆளவந்தார் இந்த விசிட்டாத்வைத சித்தாந்தம் நாடெங்கும் பரவும்படி செய்து எட்டு நூல்களை எழுதியுள்ளார்.

வீட்டிலும் ஆலயங்களிலும் திருமால் வழிபாடு செய்யும்முறையை விளக்கும் பாஞ்சராத்திர ஆகமங்களின் பெருமையை நிலை நாட்டுவது, இந்த ஆகமப் பிராமாணியம் எனும் நூல். இது வைகாநச ஆகமத்தின் உயர்த்தியைத் தாபிப்பதுமாகும். புருஷசூக்தம் முதலிய வேத மந்திரங்கள் திருமாலின் பெருமையைப் பேசுவதை விளக்கும் புருஷ நிர்ணயம் என்பது இவர் எழுதிய இரண்டாவது நூலாகும். அறிவாக மாத்திரமின்றி அறிகிறவனுகவும், பிறப்பில்லாதவனுகவும், சடப் பொருளைக் காட்டிலும் வேறுபட்டவனுகவும், அணு அளவுள்ளவனுகவும் உள்ள சீவனை விளக்கும் ஆத்மசித்தியும், அறிவின் தன்மையைத் தெரிவிக்கும் சம்வித் சித்தியும், இறைவனை விளக்கும் ஈசுவர சித்தியும் என்று இவர் எழுதிய சித்தித்திரயம் எனும் நூலை ஆதாரமாகக் கொண்டே பகவத் இராமாநுசர் தமது பாஷ்யத்தை அருளிச் செய்தனர். பகவத் கீதைக்கு உரிய பொருளைச் சொல்ல வேண்டிய வழியை வகுக்கும் கீதார்த்த சங்கிரகமும் இவர் எழுதியதே.

பகவத் கீதையில் இறுதியில் கண்ணபிரான் உபதேசித்த சரமசுலோகத்தின் பொருளான சரணுகதியைச் செய்யவேண்டிய முறையைத் தன் செய்முறையால் விளக்கக் கருதிச் சதுசு

லோகி, தோத்திரரத்திநம் எனும் இருநூல்களையும் அருளிச் செய்துள்ளார். நம் வினைகளுக்கேற்பப் பயனளிக்கும் இறைவனைச் சாந்தப்படுத்தி அவருடைய திருவடிகளில் நாம் சரணாகதி செய்ய அவரை அணுகலாம்படி பரிந்துரை செய்யும்படி பெரியபிராட்டியாரை வேண்டிக் கொள்வதாக அமைந்தது சதுசுலோகி. நம் அவல நிலைமையைக் காட்டிப் பெருமாளுக்கு எதிரிடையாகப் போகாமல், அவர்க்கு உட்பட்டிருந்து, அவரிடம் முழுநிறைவான நம்பிக்கை வைத்து வேண்டும் பயனை அறிவித்து அதனைப் பெற வேறு சாதனங்களை அநுட்டிக்காமல் அந்தப் பொறுப்பை அந்தப் பெருமாள், தாயார் இருவரிடம் ஒப்புவித்து விடுவதையே, தோத்திர ரத்திநம் எனும் அரிய துதி நூல் விளக்குகின்றது.

இவற்றுள் இந்தப் பாஞ்சராத்திர ஆகமத்தை எதிர்ப்பவர்கள் கூறும் வாதங்களையும் இவற்றிற்கு இந்நூலில் கூறப்படும் விடைகளையும் ஒரு சிறிது சுவைத்து இன்புறுவோம்.

கேள்வி: இந்த ஆகமம் வேதத்திற்கு எதிரானது. வேதம் சீவாத்மா பிறப்பில்லாதவன் என்கிறது. பரப்பிரம்மத்தினிடமிருந்தே மனம் முதலிய புலன்கள் பிறந்ததாகச் சொல்லுகிறது. ஆனால் இந்தப் பாஞ்சராத்திரத்தில் சங்கருடணன் என்கிற ஜீவாத்மா பிறக்கிறான். இவனிடமிருந்து மனம் பிறக்கிறது என்கிறது. இப்படி வேதத்துடன் முரண்படுவதால் இதனை வைதிகர்கள் நிராகரிக்கவேண்டாமா?

பதில்: இந்த வாக்கியத்திற்கு இது பொருளன்று. சீவர்களுக்கு அதிட்டான தேவதையான சங்கருடணராக இறைவனே அவதாரம் செய்கிறான். இவர்க்குப் பிறகு மனதிற்கு அதிட்டான தேவதையாகப் பிரத்தியும்நர் அவதரிக்கிறார் என்றே அதற்குப் பொருள். மேலும் ஆன்மாக்களும் சடப்பொருளும் இறைவனுடைய சொத்தேயாகும். இவற்றுள் சடப்பொருளான பிரகிருதி கணம்தோறும் மாறும் இயல்பை உடையது. ஆன்மாக்கள் பிறப்பதுமில்லை, இறப்பதுமில்லை எனப் பாஞ்சராத்திர ஆகமம் தெளிவாகச் சொல்லியுள்ளது.

இறைவனைத் தியானிப்பதற்கு வாய்ப்பாக அவரை வாசுதேவர். சங்கருடணர், பிரத்தியும்நர், அநிருத்தர் என்று நான்கு திருவுருவங்களைக் கொண்டு காட்சி தருகிறார். தியானிப்பவர்களின் தகுதி உடைமைக்கேற்ப இந்த உருவங்களில் சிற்சில பிரம்ம குணங்களே வெளியிடப் படுகின்றன. இவ்வவதாரங்கள் பல்வேறு பொருள்கட்கு அதிட்டான தேவதைகளாவர். இது வியூகம் எனப்படும்.

கேள்வி: நான்கு வேதங்களாலும் பயனேதும் காணாத சாண்டில்யர் சனகரை அடைந்து பாஞ்சராத்திர ஆகமத்தைக் கற்றுப் பயனடைந்தார் என்று இதில் சொல்லியிருப்பதாலும், இது வேதத்தைக் குறை கூறியும் பாஞ்சராத்திரத்தைப் புகழ்ந்தும் உள்ளதாலும், இரண்டிற்கும் முரண்பாடு தெளிவாக இல்லையா?

பதில்: இது வேதத்தைக் குறை கூறுவதாக ஆகாது. நால் வேதத்தைக் கற்று சாண்டில்யர் அவற்றில் சொல்லிய தருமங்களைச் செய்து அதன் பலனை விரைவில் பெறத் தாம் ஆற்றல் பெற்றிருக்கவில்லையென்று தம்மையே சனகரிடம் முறையிட்டுக் கொண்டார். சனகர் இந்த ஆகம முறைப்படி அர்ச்சாமூர்த்தியின் பூசனை நெறிகளை எடுத்துரைத்தார் என்று தான் இங்குக் கூறப்பட்டுள்ளது. எனவே முரண்பாடு எதுவும் இல்லை என்பது கண்கூடு.

இம்மாதிரி பல வினாக்களுக்கு விடைகள் அளித்து இந்நூலை ஆளவந்தார் இயற்றியுள்ளார். இந்நூல், இதுகாறும் எளிதில் கிடைக்கப் பெறாத குறையை நீக்கச் சென்னை ஸ்ரீராமாநுசர் ஆய்வுக் கழகத்தின் கௌரவச் செயலாளரான ஸ்ரீநிவாசராகவ ஐயங்கார் அவர்கள், இதனை மிகவும் அழகாக அச்சிட்டு உதவியுள்ளார். வடமொழி பயிலாதவர்க்கு உதவும் பொருட்டுச் சிகாகோ பல்கலைக் கழகத்தில் வட மொழிப் பேராசிரியரான டாக்டர் வான் பியூடினன் என்பவரின் சீரிய ஆங்கிலமொழி பெயர்ப்பையும், இந்த ஆகமத்தின் சிறப்பை விளக்கவல்ல அவருடைய அருமையான முகவுரையையும், இதில் சேர்த்துள்ளது மிகப் பாங்காக உள்ளது. வடமொழியில் உள்ள முதல் நூலினைப் பல பத்திகளாகப் பிரித்து, அவற்றிற்கு எண்களிட்டு, அந்த எண்களுடனேயே மொழி பெயர்ப்பையும் வெளியிட்டுள்ளதால், வடமொழியில் சிறிதே பயிற்சியுள்ளவர்களும் மொழி பெயர்ப்பைக் கொண்டு மூல நூலில் தெளிவு பெறுவது எளிதாகஉள்ளது. மிகநுட்பமானவாதப்பிரதவாதங்களைத் தெளிவாக ஆங்கிலத்தில் தந்துள்ள பேராசிரியரின் வடமொழிப் புலமையை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

வைணவப் பெருஞ்சான்றோர் ஆகிய ஆளவந்தார் அருளிச்செய்த "ஆகமப் பிராமாணியம்" என்னும் நூலை ஆராய்ந்து அழகுற வெளியிட்டவர்களுக்கு வைணவ உலகம் மிகக் கடமைப் பட்டுள்ளது என்பது சொல்லத் தேவையில்லை.

திரிசூலநாதர் திருக்கோயில்

தருமம் மிகு சென்னை மாநகரைச் சார்ந்தும் சூழ்ந்தும் விளங்கும் திருக்கோயில்கள் எத்தனையோ பல உள்ளன. திருவொற்றியூர், திருமயிலாப்பூர், திருவல்லிக்கேணி, திருவான்மியூர் முதலிய பழமையும் பெருமையும் பெற்ற கோயில்களைப் பற்றி எல்லோரும் அறிவர். ஆனால் பொது மக்களால் பெரிதும் அறியப்படாமல் பழமையும் பெருமையும் மிக்க கோயில்கள் ஒரு சிலவும், சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ளன. அவற்றுள் திரிசூலநாதர் திருக்கோயிலும் ஒன்றாகும்.

மீனம்பாக்கத்துக்கும் பல்லாவரத்துக்கும் நடுவே, பெருஞ்சாலையில் இருந்து பிரிந்து செல்லும் ஒரு பாதை. திரிசூலத்தில் உள்ள திருக்கோயிலின் வாயிலுக்கே நம்மை அழைத்துச் செல்கிறது. குன்றுகளின் மீதாகச் செல்லும் இந்தப் பாதை உந்தூர்திகள் செல்லுவதற்கும் தகுதி வாய்ந்ததாக இருக்கின்றது,

நான்கு சிறிய மலைகளின் மத்தியில், அழகிய நல்ல சூழ்நிலையில், திரிசூலநாதர் திருக்கோயில் அமைந்து திகழ்கின்றது. நான்கு மறைகளின் உட்பொருளாக மறைந்து நிற்கும் பரமேசுவரன், அதனை நமக்கு உணர்த்தவே இங்கு இவ்வாறு எழுந்தருளி இருக்கின்றார் போலும் என்ற எண்ணம், இக்கோயிலைக் காணும்போது எழுகின்றது. நல்ல இயற்கைக் காட்சியழகும், இனிய அமைதியும் மிக்க சிறந்த சூழலில் இக்கோயில் அமைந்து விளங்குகின்றது. பரந்த வானத்தையும், சுற்றிச் சூழ்ந்துள்ள சிறு குன்றுத் தொடர்களையும் காணும் போது, நம் மனத்தில் சாந்தியும் இன்பமும் தேங்கி நிற்கின்றன. ஒரு புனிதமான நல்லுணர்ச்சி நம் உள்ளத்தை ஆட் கொள்ளுகின்றது.

கோயிலின் அமைப்பே அது மிகவும் பழமை வாய்ந்தது என்பதனைப் புலப்படுத்துகின்றது. 'பல்லாவரம்' என்பது 'பல்லவபுரம்' என்பதன் திரிபேயாதலால், ஒருகாலத்தில் இப்பகுதிகள் எல்லாம் பல்லவர்களின் ஆட்சியில் சிறப்பு மிக்குத் திகழ்ந்தமையினை யுணரலாம். பல்லாவரம் மலையின் மீது மகேந்திரவர்மன் அமைத்த சில சிற்பங்கள் இருத்தலும் இவ்வுண்மைக்குச் சான்று பகரும்.

திரிசூலம் கிராமம் ஒரு காலத்தில் மிகவும் புகழ்பெற்றிருக்க வேண்டும், சுரம் என்பது பாலை நில வழியை, அல்லது மலையும் காடும் நெருங்கி அமர்ந்துள்ள ஒரு பகுதியைக் குறிக்கும் சொல்லாகும். நான்கு மலைகளின் நடுவே நல்ல இயற்கைச் சூழலில் அமைந்திருத்தல் பற்றி இக்கிராமத்திற்குத் திருச்சுரம் (திரு + சுரம்) என்று பெயர் வழங்குவதாயிற்று. திருச்சுரம் என்பதே திரிசூலம் என்று மருவி வழங்கி வருகின்றது. அதன் காரணமாக அங்குள்ள நாதர் திரிசூல நாதர் எனப்படுகின்றார். பிரமபுரீசுவரர் என்றும் இங்குள்ள சுவாமிக்குப் பெயர் வழங்கப்படுகிறது. அம்பிகைக்குத் திரிபுரசுந்தரி என்பது பெயர்.

திரிசூல நாதர் கோயிலின் அமைப்பே, அதன் பழமைக்கும் பெருமைக்கும் சான்று பகர்கின்றது. இக்கோயிலின் கொடுங்கைகளும், கஜப்பிருஷ்டம் (தூங்கானை மாடம்) என்று சிற்ப நூல் கூறும் முறையில், கருவறையின் பின்பகுதி அரை வட்டமாக அமைந்திருப்பதும், கோயிலில் சுற்றுச் சுவர் நெடுகிலும் கல்வெட்டுக்கள் பொறித்திருப்பதும் இவ்வுண்மையை உணர்த்தும். இக்கோயில் கி. பி. 900 ஆண்டில் கட்டப்பட்டிருத்தல் வேண்டுமென்று அறிஞர்கள் கூறுகின்றனர். பல்லவர், சோழர் காலத்துக் கட்டிட அமைப்பு முறைகள் இதன்கண் காணப்படுகின்றன.

தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரின் முயற்சிகளால் பன்னிரண்டு கல்வெட்டுக்கள் இக்கோயிலிலிருந்துகண்டுபிடிக்கப்பட்டுள்ளன. முதற் குலோத்துங்க சோழன் (கி. பி. 1070-1120) காலம் முதல், மாற வர்மன் குலசேகர பாண்டியன் (14-ஆம் நூற்றாண்டு) காலம் வரையில் உள்ள கல்வெட்டுக்களாக அவைகள் காணப்படுகின்றன. முதற் குலோத்துங்கன் முப்பது வேலிப் (120 ஏக்கர்) பரப்புள்ள ஒரு பெரிய பூந்தோட்டத்தையும், பதினொரு வேலி விளை நிலங்களையும் வரியில்லாமல் இறையிலியாக வழங்கிய செய்தியைக் கல்வெட்டின் மூலம் அறிகின்றோம். முதற் குலோத்துங்கனின் பெயரால் திரிசூலம் கிராமத்திற்கு, "திருநீற்றுச் சோழ நல்லூர்" எனவும் பெயர் அமைக்கப்பட்டிருந்த செய்தியினைக் கல்வெட்டு உணர்த்துகின்றது. மூன்றாம் குலோத்துங்க சோழன் (கி. பி. 1177-1218) காலத்துக் கல்வெட்டு ஒன்றும் இக்கோயிலில் காணப்படுகின்றது.

கல்வெட்டுக்கள் :

(1) '' ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன வீரதேவற்கு யாண்டு 39 ஆவது ஆளுடையார் திருச்சுர முடைய நாயனுர்க்குத் திருவடி நிலை இரண்டினு லிடை பதினைம் பலமும் திருவாலத்தித் தட்டில் இரண்டினுலிடை எழுபதின் பலமும் கொம்பு இரண்டினுலிடை ஐம்பத்தைம் பலமும் செய்வித்து இட்டோம் பூந்தண்மலியான உய்யக் கொண்டான் சோழபுரத்து வாணிகர் நகரத்தோம். இவை நாடறியக் கொள்ளை போச்சாகில் இது பன்மாகேசுவரர் இரட்சை.

(2) '' சுங்கந்தவிர்த்த குலோத்துங்க சோழ தேவர் திருமுகப்படி ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்ரவர்த்தி கோனேரின்மை கொண்டான் செயங்கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டமான குலோத்துங்கச் சோழவள நாட்டுச் சுரத்தூர் நாட்டுப் பல்லவபுரமானவான வன்மாதேவிச் சதுர்வேதி மங்கலத்து உடையார் திருச்சுரமுடைய நாயனுர் கோயில் பதிபாத முலப்படுடைப் பஞ்சாசாரியரும், தேவகன்மியும், ஸ்ரீமாகேசுரக்கண்காணி செய்வானும், கோயிற் கணக்கனுங் கண்டு, தங்கள் நாயனுர் கோயில் பூசைத் தட்டு உண்டென்றும், திருநாள் காண வேணுமென்றும் வாணராயர்க்குச் சொல்லுகையில், இக் கோட்டத்துக் கால்வாய் நாட்டு முந்நலூர் பிரிவு உட்பட ஒரு பூவினை நிலம் முப்பது வேலியும், கொல்லை நிலம் பதினெரு வேலியும் ஆக நாற்பத்தொரு வேலியுந் தேவ தானமாக இட்டு, ஊர் பழம்பேர் தவிர்த்து திருநீற்றுச் சோழநல்லூர் என்று நாமகரணம் பண்ணி ஊரடங்கலும், இறையிலி தேவ நாமமாக இட்டு வைகாசித் திருநாள் திருவெழுச் சிப்படிக்கு இவ்வூர் ஆயமும் அந்தராயத்தால் காசு நெல் உட்படத் தேவர்க்குக் கொடுத்தோமென்று வரியிலார்க்கும், வரிபொத்தகஞ் செய்வார்களுக்கும் சொன்னேம். தாங்களும்இந்நாள் முதல் கைக்கொண்டு கடமையுந்தண்டிக் குடிமையுஞ் செய்வித்துக் கொள்வதைக் திருமந்திர ஓலைக் குலோத்துங்கச் சோழ மூவேந்த வேளான் எழுத்து யாண்டு 39-ஆக இவை தொண்டைமான் எழுத்து.இவை வாணராயன் எழுத்து. இப்படிக்கு முந்நலூராந் திருநீற்றுச் சோழநல்லூர்க்குத் திருமுகம் இட்டது. இது பன்மாகேசுவரர் இரட்சை.

(3) ''ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்ரவர்த்திகள் மதுரையும் ஈழமுங் கருவூரும் பாண்டியன் முடித்தலையுங் கொண்டருளின ஸ்ரீகுலோத்துங்கச்சோழ தேவர்க்கு யாண்டு 39-வது செயங்கொண்ட சோழமண்டலத்துப் புலியூர்க் கோட்டத்துச் சுரத்தூர் நாட்டுப் பல்லவபுரமான வானவன்மாதேவிச் சதுர்வேதி மங்கலத்து ஆளுடையார் திருச்சுரமுடையார்க்குத் திருச்சுரக் கண்ணப்பன் ஆதிநாதன் மனவாலய முகந்தான் சித்திரமேழியரையனேன் வைத்த திரு நந்தா விளக்கு ஒன்றுக்கு விட்டஎருமைபத்து; இவ் வெருமை பத்தும் இக்கோட்ட மலையம்பாக் கத்து மன்ருடி பெருமாள் சேரிக்கோனேன் இவ் வெருமை பத்தும் காணி மாடாகக் கைக் கொண்டு, அருமொழித் தேவன் உழக்கால் நாள் ஒன்றுக்கு உழக்கால் வந்த நெய் சந்தி ராதித்த வரை, கோயில் திருமுற்றப் பண்டாரத் தில் அளந்து தரவும் கொள்ளக் கடவேன். பெருமாள் சேசரிக்கோனேன். பன்மாகேசுரர் இரட்சை.''

அழகிய சிற்பங்கள் :

இத்துணைப் பழமையும் பெருமையும் வாய்ந்த கோயிலானது, எவருள்ளத்தையும் கவரத்தக்க சிறந்த பல சிற்பங்களையும் பெற்றுள்ளது. இங்குள்ள அற்புதமான வடிவங்கள் எழில் குன்ருத மோகன சக்தி வாய்ந்தவையாகும். நாகத்தைப் பூணூலாக அணிந்த நாக யக்ஞோபவீத கணபதி, இடக்காலை வலக்கால் மீது மடித்துப் போடாமல் குத்திட்டு அமர்ந்துள்ள தக்ஷிணுமூர்த்தி முதலிய சிலைகள் மிகவும் சிறப்புடன் பொலிகின்றன. அங்ஙனமே பிரம்மா, விஷ்ணு, துர்க்கை, மூலத்தானத்திலுள்ள அம்பிகை ஆகிய சிலைகளின் அழகும் கவர்ச்சியும் எவருளத்தையும் கொள்ளை கொள்ளும்.

இங்குள்ள சின்னஞ்சிறிய சிற்பங்களும்கூட நுட்பமான வேலைப்பாடு கொண்டவை. நுணுக்கமான உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பவை. உதாரணமாக, கருவறையில் சுற்றுச் சுவரின் நடுவிலுள்ள சிவலிங்கோற்பவ மூர்த்தியின் வடிவம் இயற்கையாக வடிக்கப்பட்டுள்ளது. விஷ்ணு, துர்க்கை சிலையின் மேற்புறத்திலுள்ள சின்னஞ்சிறு காளிய நர்த்தனர் சிற்பத்தில், ஐந்து தலை நாகம் கிருஷ்ணனின் பக்கமாக மிக வேகத்துடன் திரும்பிச் சீறும் காட்சி பெரிதும் அருமையாக அமைந்துள்ளது. தக்ஷிணுமூர்த்தியின் திருவடியின் கீழுள்ள முனிவர்களின் மோன இன்பம் நமக்கும் இன்பம் ஊட்டுகிறது.

இந்தக் கோயிலின் மற்ருெரு பெருஞ் சிறப்பு,தூண்களிலுள்ள சிற்பங்களாகும். அவற்றில் பெரும்பாலானவை திருமாலின் திருவிளையாடல்களைக் குறிக்கின்றன. கோயிலுக்குள்

நுழைந்த உடனேயே நமக்கு இடப்புறமாக ஒரு பெருமாள் சந்நிதியிருப்பது குறிப்பிடத்தக்கது. சைவ வைணவசமய சமரசத்திற்கு இக்கோயில் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது எனலாம்,

கோயிலின் திருப்பணி :

சமீப காலம் வரையில் இக்கோயில் பொது மக்களால் கவனிக்கப்படாமல் புறக்கணிக்கப் பட்டிருந்தது, சுவாமி சிவானந்தர் அவர்களின் ஆசிபெற்றுத் "தெய்வீக வாழ்க்கைச் சங்கம்" இக்கோயிலின் அருமை பெருமைகளை அனைவரும் அறியச் செய்யப் பத்தாண்டுகளுக்கு முன்னர்ப் பெரு முயற்சி எடுத்துக் கொண்டுள்ளது. இச்சங்கத்தின் ஆதரவிலும், பொதுமக்கள் பொருள் உதவியிலும், ஆண்டுதோறும் நவராத்திரியில் திரிபுரசுந்தரி அம்பிகைக்கு இலட்சார்ச்சனை வைபவம் சிறப்புற நடத்தப்படுகின்றது. காலை மாலைகளில் பக்தர்கள் சென்று தரிசிக்கத்தகுந்த வசதிகள் செய்யப்பட்டுள்ளன. கோயிலில் மின்விளக்குகளும் சிறப்புற அமைக்கப்பெற்றுள்ளன. ஓர் ஆசிரியரை நியமித்துக் குழந்தைகளுக்குத் தேவாரம் திருப்புகழ் முதலிய தெய்வப் பாடல்கள் கற்பிக்கப்பட்டு வருகின்றது. நவராத்திரி, கந்தர்சஷ்டி, ஆருத்ரா, மகாசிவராத்திரி முதலிய விழாக்கள் பொது மக்களின் உதவியால் 1957-ஆம் ஆண்டு முதல் கொண்டாடப் பெற்று வருகின்றன. கவியோகி சுத்தானந்த பாரதியார், திருமுருக கிருபானந்த வாரியார் போன்ற பெருமக்களின் உதவியுடன் கோயிலைப் புதுப்பிக்கும் பொருட்டுத் திருப்பணிக்குழு ஒன்று நிறுவப்பட்டது. கோயிலைப் புதுப்பித்துக் குடமுழுக்கு விழாச் செய்யும் நன் முயற்சியைக் காமகோடி, சிருங்ககிரி ஆகிய இருபீடத்துச் சங்கராச்சாரிய சுவாமிகளும் மன முவந்து பாராட்டி நல்லாசியருளினர்கள்.

தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தின் கிளைத் தலைவரும், குவாரி காண்ட்ராக்ட்டருமான திரு. ஒய். குப்புசாமி ஐயர் அவர்களும், திருப்பணிக் குழுவின் உறுப்பினர்களும், இக்கோயிலின் வளர்ச்சி குறித்து ஆற்றிவரும் அரும்பெரும் தொண்டுகள் மிகவும் பாராட்டற்பாலன. அண்மையில் 1—2—72 அன்று, இக்கோயிலின் திருப்பணிகள் நன்கினிது ஓரளவு நிறைவேறித் திருக்குடமுழுக்கு விழாவும், சிறப்புற நடைபெற்றுள்ளது. இனி இராசகோபுரம் முதலிய திருப்பணிகளும் நிறைவேற, இறையருள் துணைபுரிவதாக!

—ஆசிரியர்.

விழுப்புரம் கைலாசநாதர் கோயிலின் திருப்பணித் தொடக்க விழாவில், நமது அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B.A., B.L.; I. A. S. அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தல். (9—2—72)

148699

பழனி, பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரிக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் - தமிழவேள் - டாக்டர் - கலைஞர் அவர்கள் வருகைதந்தபோது. கல்லூரி மாணவச் செயலர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி வரவேற்பிதழ் வாசித் தளித்தல். (28—2—72)

திரு இடும்பாவனம் கோயிலில், வேளாண்துறை அமைச்சர் மாண்புமிகு மன்னை ப. நாராயணசாமி அவர்கள் மேல் நிலை நீர்த் தொட்டிக்கு அடிக்கல் நாட்டுதல் (26-4-72).

தமிழக அறநிலைய அமைச்சர் அவர்களோடு செங்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு. C. பாண்டுரங்கன் அவர்களும், தண்டராம்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திரு. M S. இராதாகிருட்டிணன் அவர்களும். போளூர்ச் சட்டமன்ற உறுப்பினர் தொ. ப. சீனிவாசன் அவர்களும், அறிஞர் அண்ணா சீரணித் திறந்தவெளி அரங்கிற்கு வருகைதந்து, "செங்கம் தமிழ்ச் சங்கம்" தொடக்க விழாவினைச் சிறப்பித்தல். (13—5—72)



அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்களுக்கு, திருவண்ணாமலைக்கு அருகில் உள்ள செங்கம் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாகப் பெருந்தலைவர் திரு. கு. கிருட்டிணன் அவர்கள் வரவேற்பிதழ் வாசித்தளித்தல். (13—5—72)

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-34. Printed at Sivarts Printers. 119, Strahans Road, Madras-12. Editor . N. R. Murugavell, M.A., M.O.L.